# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
APR 1967
MADRAS



ஸ்ரீ கள்ளழகர் ஏகாந்தசேவை, அழகர்கோயில்.

மாலை 8] விசுவாவசு மார்கழி—ஜனவரி 1966 [மணி 4

சென்னை அரசாங்க அறநிலையப்
... துறை வெளியீடு



ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி தேவஸ்தானத் திருப்பணிக் குழுவின்
தலைவர் திரு டாக்டர், சர், ஏ. இராமசாமி முதலியார்
அவர்கள் உரை நிகழ்த்துதல். (12—12—65)

## ஜனவரி — தை — சிறப்புமலர்

### பொருள் அடக்கம்


1. சங்கற்ப நிராகரணம்
2. விடை தெரியுமா?
3. விடை விளக்கம்.
4. குடம்பையும் புள்ளும்
5. சைவ சித்தாந்தம்
6. திருச்சந்த விருத்தம்
7. காளிதாசன் காட்டும் சிவபக்தி
8. சிவஞான போதம்.
9. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்
10. முப்பாலில் முத்திப்பால்
11. செயற் கருஞ் செயல்
12. கோயிற் கலை
13. வைஷ்ணவ குருபரம்பரை
14. உள்ளுறை பொருளாராய்ச்சி.
15. பரசிவமும் அருவுருவத் திருமேனிகளும்
16 பாரதப் பண் போவியங்கள்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

CONNEMARA ... 6 - JAN 1966

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு மார்கழி-ஜனவரி [மணி 4

# சங்கற்ப நிராகரணம்

(சமய நூற்பொருள் விளக்கம்)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## மாயாவாத நிராகரணம்—2

இவ்வாறு தன் மதக் கொள்கைகளை எடுத்துக் கூறிய மாயாவாதியினை, அடுத்து அவன் பக்கலில் அமர்ந்திருந்த **ஐக்கிய வாதி** எழுந்திருந்து கீழ்வருமாறு மறுத் துரைக்கின்றான் :—

**பிரமாண மறுப்பு :**

பெத்தம் என்றும் முத்தி என்றும் இரண்டுபடக் கூறிய நின்மதக் கொள்கை பிரமம் ஒன்றுமே உளது எனக் கூறுங் கால், அதற்குப் பிரமாணம் யாது? வேதம் பிரமாணம் எனில் -, அவ்வேதம் பிரமம் ஒன்றுமே உளது எனச் சொல்வ தன்றிச் சிவ பரம் என்று இரண்டாகவும் சொல்லுவது எற்றுக்கு?

வேதம் அங்ஙனம் இரண்டு என்றதும் அபேத சித்தாந்தத்தைச் சொல்லியதாம் எனில் -, நீ ஒன்று என்றதற்குப் பிரமாணம் இரண்டு என்றும், இரண்டு அல்ல என்றும், சொல்ல வேண்டுவதில்லை.

பேதம் அபேதம் பேதாபேதம் என்று வேதம் சொல்லுவதெல்லாம் அப்பிரமம் ஒன்றையுமே எனில் -, இரண்டென்றும், இரண்டல்ல என்றும், இரண்டாய் இரண் டல்லவுமாய் இருக்கும் என்றும், அவ் வேதமே கூறுதல் பிரமாண விரோத மாகும்.

பெத்தத்தில் பேதமும், முத்தியில் அபேதமும் என வேதம் கூறுதலின் பிரமாண விரோதம் ஆகாது எனில் -, அங்ஙனம் வேறுபடுத்திக் கூறுதலும் அநவத்திதம் என்றும் குற்றமாய், அறுதி யில்லாததாய் முடியும்.

அற்றன்று, வேதம் இரண்டு என்று சொல்லாது ஒன்று என்றே சொல்லும் எனில்-, முன்னே இரண்டு என்று சொல் லிப் பின்னர் ஒன்று என்று சொல்லுதல் குற்றமாகும். அன்றியும் கட்டு நிலையில் சிவபரம் என்று இரண்டாய் இருக்கும் என்றலும், வீட்டு நிலையில் ஒன்றாய் இருக்கும் என்றலும் பொருந்தாது.

இனி, இங்ஙனம் நின்னாற் பிரமாணம் எனக் கொள்ளப்பட்ட வேதம் யாராலே

சொல்லப்பட்டது? தானே தோன்றியது (சுயம்பு) எனில் -, நீ பிரமம் ஒன்று என்றது ஒழிந்து, பிரமம் ஒரு முதலும் வேதம் ஒரு முதலுமாக, உனது ஏகம் அநேகம் என நிலைபெறும்.

அன்றியும், வேதம் தானே தோன்றிற்று என்றலும் பொருந்தாது. ஏனெனில், ஒருவர் உச்சரியாமல் ஒலியின் உருவம் தோன்றுதல் இல்லை. வானத்தில் ஒருவர் உச்சரியாமல் ஒலி (இடி) உண்டாதல் போல, வேதமும் ஒருவர் சொல்லாமலே தானாக உண்டாயிற்று எனில் -, வானத்தில் வாயுவை ஏதுவாகக்கொண்டு ஒலி (இடி) உண்டாவதன்றித் தானே ஒலி தோன்றாது. மேலும் வானத்தில் எழும் ஒலி ஓரேவகைத்தாயும் அறிவிலதாயும் இருக்கும்; ஆனால் வேதமோ பதம் கிரமம் பாழி கனம் சடை முதலிய பல வகை ஒலித்திறங்களும், வெவ்வேறு பொருட்கூறுகளும் உடையதாய் விளங்கும். ஆதலின் வானத்தில் உண்டாகும் ஒலியினை வேதத்திற்கு உவமை சொல்லுதல் சிறிதும் பொருந்தாது.

வேதம் தானே உண்டாகாது என்பது பெறப்பட்டமையின், அதனைக் கூறினோர் சிலர் உளராதல் வேண்டும். இவ்வுடலாலே வேதம் சொல்லப்பட்டது எனில்-, இவ்வுடல் அறியாமை மிக்கது ஆதலின், இஃது ஒரு சொல்லையும் பொருளையும் சொல்லவல்லதன்று. மேலும், பிரமம் அகண்டிதப் பொருள் ஆதலின், சொல்லையும் பொருளையும் கொண்டு அதனைச் சுட்டிக் கூறுதல் யாங்ஙனம்? ஆதலால் எல்லாம் ஒன்றே என்னும் உன் கொள்கை (ஏகாத்ம வாதம்) புரைபடும்.

வேதம் பரப்பிரமத்தாற் சொல்லப்பட்டது எனில் -, அந்தப் பிரமப்பொருள் அகண்டிதம் ஆகையால், பல் நாக்கு முதலிய கருவிகள் அதற்கு இல்லை. இல்லையாகவே, அது வேதத்தினைச் சொல்லுதலும் இயலாததாய் ஒழியும்.

அற்றன்று, பேயானது ஒருவன் உடலைப் பற்றி நின்று பேசினாற்போலப் பிரமமும் ஒருவர் உடலைச் சார்ந்து நின்று வேதத்தைச் சொல்லும் எனில் -, பிரமம் ஓர் உடலைச் சார்ந்து நின்று வேதத்தைச் சொல்லுமாயின், அது யாருடலைச்சார்ந்து நின்று சொல்லிற்று? அங்ஙனம் யாரேனும் ஒருவரின் உடலைச் சார்ந்து சொல்லிற்றாயின், அது **பசுவாக்கியம்** எனவேபடும்; பதிவாக்கியம் ஆகாது; அதனால் வேதத்திற்கு **நின்மலத்துவம்** என்பதும் ஏற்படாமற் போம்.

உலகம் வேதத்தைச் **சுயம்பு** என்று கூறுகின்றதே எனில் -, உருவமற்ற முதல்வன் உருவம் கொண்டு தோன்ற அவனால் வேதம் கூறப் பெற்றமையின், தானே தோன்றியவன் (சுயம்பு) ஆகிய முதல்வனால் அருளிச் செய்யப் பெற்ற வேதமும் **ஆகுபெயர்** நிலையிற் 'சுயம்பு' எனக் கூறப்படுகின்றதேயன்றி, அது தானே தோன்றியது அன்று என்க.

வேதம் நூம்முடைய தலைவனாற் கூறப்பட்டதாயின் அது தனக்குக் கீழேயுள்ள கடவுளர்களை வணங்கிச் சொல்ல வேண்டுவது என்னை? எனில் -, அரசனின் குடிகள் நேரே அரசனைக் கண்டு தங்கள் தங்கள் குறைகளைக் கூறிக்கொள்ள மாட்டார்கள், அரண்மனை வாயிற் காவலாளர்களைக் கொண்டு, அடியோங்கள் தங்கட்குப் பழமை மிக்க அடியவர்கள் ஆவோம் எனறு கூறியவழி, காவலாளர்களின் வாயலாகக் குடிகளின் குறைகள் தீர்க்கப் பட்டாற்போல, முதல்வனும் எல்லோரும் பக்குவர் அல்லாமை கண்டு, அபக்குவராக உள்ளோர் வழிபாடு செய்தற் பொருட்டு, அக்கடவுளரையும் சொல்லியிருத்தல் கூடும். இவ்வாறன்றி முதல்வன் பிற கடவுளரை வணங்கிக் கூறினன் என்றல் சிறிதும் பொருந்தாது.

அற்றேல் முதல்வன் தன்னைத் தானே வணக்கம் கூறிக் கொள்ளுவது எற்றுக்கு? எனில் -, பக்குவான்மாக்கள் தன்னை வழிபாடு செய்து உய்தற்கு வழிகாட்டுதற் பொருட்டு ஆகும்! அன்றியும், முதல்வன் தன் பெருமையைக் கூறுங்கால் வேறே பிறர் ஒருவர் கேட்கக் கூறுவது ஒழிந்து, தானே தன் பெருமையைக் கூறிக் கொள்ளான்.

ஆதலின் பிரமம் வேதத்தை யாருக்குக் கூறியது? உடலுக்குக் கூறியது எனில் -, உடல் சடம் ஆனபடியால் அதனை நோக்கிச் சொல்லிற்று எனில் -, உடல் சடமான படியால் அதனை நோக்கிச் சொல்லியிராது. பிறரை நோக்கிச் சொல்லிற்று எனில் -, வேதம் ஆகிய **பிரமாணம்**, முதல்வனாகிய **பிரமேயம்**, ஆன்மாவாகிய **பிரமாதா**, ஆன்மாவன் அறிவாகிய **பிரமிதி** என்று நான்கு வகையாகப் பாகுபாடு படுதலின், நீ முதற்கண் ஒன்று என்றது மிக நன்றாய் இருந்தது! இவ்வாற்றால் பிரமம் ஒன்று என்று சொல்ல வந்தநின் பிரமாணம் ஆகிய வேதமும், பல வகைத்தாய்ப் புரைபட்டது. பிரமாணம் ஆகிய வேதம் புரைபடவே, பிரமேயத் தன்மையும் குற்றமாம் என்பதில் ஐயமில்லை.

*பிரமாணம் - அறிகருவி*
*பிரமேயம் - அறியப்படு பொருள்*
*பிரமாதா - அறிபவன்*
*பிரமிதி - அறியும் அறிவு*

**பிரமேய மறுப்பு :**

கரும்பிற் பிறந்த சுவை, தன்னில் வேறுபாடின்மைபற்றிக் கரும்பிற்குத் தன்சுவை தெரியாமை போல, பிரமமும் தன் இன்பத்தைத் தான் அறியாது என்று கூறினை! அறிவுப் பொருளுக்கு உவமை சொல்கின்றுழி அறிவுப் பொருளையே உவமை சொல்லாமல், அறியாமைப் பொருளால் உவமை கூறுதல் பொருந்தாது. மேலும் கரும்பினின்று செய்த கட்டியை அதனற் பிரித்து வைத்துப் பின்னர்க் கூட்டிய வழி, இத்துணை நாள் இதனைப் பிரிந்திருந்து இப்பொழுதே இதனைக் கூடினேம், என்று கருதும் உணர்வு கரும்பிற்கு இல்லை. ஆகலின் நீ கூறிய உவமை பிரமப் பொருளுக்கு இயைவதன்று.

பரப் பிரமமானது உடல் முதலிய உலகமாகப் பலவாய் இருந்த தன்மை, பொன் ஒன்றே பணி பலவாக இருக்கும் தன்மை போலும் எனின் -, பொன்னானது ஒருவன் செயற்படுத்தவே பல பணிகளாக உருவம் பெற்றதன்றித் தானாகப் பல பணிகளாக உருவம் கொள்ளாமை போல, பிரமம் உலகமாய் விரிந்ததும் வேறே ஒருவன் செயலால் நிகழ்ந்ததாதல் வேண்டும்.

அற்றன்று, எல்லாவற்றையும் இங்ஙனம் செய்தது பிரமம் ஒன்றே எனில் -, இவ்வுலகில் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்பவர்களைப் போல அவர்களாற் செய்யப்படும் பொருளுக்கு முதலாயுள்ள உபாதானம் இராது. குயவனாற் செய்யப்படும் சால் குடம் சட்டி பானை என்னும் பொருள்களுக்கு முதலாயுள்ள உபாதானம் ஆகிய மண் குயவனைப் போல் இல்லாமையைக் காண்கின்றோம். ஆதலின் பிரமத்தை இன்றி உலகிற்கு உபாதானம் வேறே ஒன்று இருத்தல் வேண்டும்.

உலகிற்குப் பிரமத்தின் வேறாக உபாதானம் ஒன்று உண்டாயின் அதுவே அமையாதோ? இந்தப் பிரமம் எற்றுக்கு? எனில்—, உபாதானம் சடமாய் இருத்தலின் அது தானே உலகமாகாது. அவ்வுபாதானத்தைக் கொண்டு உலகத்தைப் படைக்கும் முதல்வன் ஒருவன் இருந்தே யாதல் வேண்டும். செய்வோர் இன்றிச் செய்வினை யாண்டும் நிகழ்தல் இல்லை.

இப்பியானது வெள்ளியாகத் தோன்றிற்போல அசத்தியமாய் உள்ள பிரபஞ்சமும் சத்தியமாகத் தோன்றுகின்றது என்றாய்! அங்ஙனமாயினும், அறிவாய் உள்ள பிரமம் சடமாயுள்ள உலகத்தை ஒரே வகையாகத் தோற்றுவிக்காது. பிரமத்தின்முன் அசத்தியமாய் உள்ள பிரபஞ்சமும் சத்தியமாகத் தோன்றும் எனில் -, நீ முன்னர் இவ்வுலகத்தினை **மித்தை** என்றது அமையாது. அங்ஙனம் ஆராயாது கூறிய நீ, உன்னுடைய கோட்பாட்டினையே முன்னொடுபின் மலைவுறக் கொண்டு மறந்தாயாகல் வேண்டும்.

அற்றன்று, பிரமம் உபாதிகள் வசத்தினால் தன்னைச் **சீவன்** என்று மயங்கி நிற்கும் விவகார நிலைக்கு உலகம் என்று கொள்ளப்படுவது ஒழிந்து, நான் பிரமம் என்றறிந்த பரமார்த்த நிலையில் எல்லாம்

பொய்யாய் ஒழியும் ஆகலின், ஆண்டு உலகம் என வழங்கப் பெறுது எனில் -, இவ்வுலகம் பரமார்த்தமாய் உள்ள பிரமத்திலே யிருந்து தோன்றியதாயின், அசத்தியமாயுள்ள பிரபஞ்சமும் சத்தியமாயுள்ள பிரமமாக வேண்டும். உலகம் பொய்யாயிருத்தலின் இஃது அப்பரமார்த்தத்துக்குப் பணியன்று எனில் -, உலகம் பிரமத்திலே நின்றும் தோன்றியது என்று முன்னே நீ கூறியதனை விட்டு விட்டு, உலகிற்கு முதற்காரணம் இன்னதெனக் கூறுவாயாக! மேலும், பிரமப்பொருள் எல்லா உபாதிகளையும் கழன்ற பரமார்த்த நிலையாய் இருப்பதொன்று. நீயோ மாயா உபாதிகளோடு சம்பந்தப்பட்டிருப்பவன். ஆதலின் நீ அந்தப் பிரமத்தின் வேருன பொருளாதல் வேண்டும்.

அற்றன்று, அந்தப் பிரமப் பொருளே நான் என்று கூறுவாயாயின், அஃது அறிவாய் இருக்க, இஃது அறியாமையாய் இருப்பதென்னை? உபாதிகளின் வசத்தால் எனின் -, அந்தப் பிரமமும் அவ்வாறே அறியாமை யுடையதாதல் வேண்டும். நீயும் அந்தப் பிரமமும் ஒரு பொருளாய் இருப்பவும், இஃது உபாதிகளால் அறியாமல் இருக்கும் என்றல் பொருந்தாது. நீ ஒன்றைச் சொல்ல உன் பிரமாணம் வேருென்றைச் சொல்லுதலின், நீ பிரமாணத்தையும் கைவிட்டாய் ஆகின்றனை.

பிரமாணத்தின் படியே யான் கூறுகின்றேன் எனில் -, பிரமாணமானது **காண்டல் கருதல் உரை** என மூன்று வகைப்படும். அம் மூன்றின் வாயிலாகவும் புகுந்து ஒரு பொருளை அறிந்து வருமாயின், மாற்றம் மனம் கடந்த உனது பிரமம் ஆகிய பிரமேயப் பொருள் யாதாக முடியும்?

**பிரமிதி மறுப்பு:**

பொன்னும் மணியும் போலப் பிரமமும் பிரபஞ்சமும் விளங்கும் என்றாய். பணியானது பின்பு பொன்னோடு கூடிப் பொன்னாகி நிற்கும்; பிரபஞ்சமானது பின்பு பிரமத்தோடு கூடிப் பிரமமாய் நின்றது கண்டோம் இல்லை. ஆதலின் நின் கூற்றுப் பொருந்தாது. மேலும் பொன்னும் பணியும் ஒன்றாய் இருக்க, பிரமமும் பிரபஞ்சமுமோ முறையே அறிவும் அறியாமையுமாக உள்ளன.

அற்றன்று, சித்தாக உள்ள சிலந்தி சடமாயுள்ள நூலைத்தந்த தன்மைபோலச் சித்தாக உள்ள பிரமத்திலே இருந்து சடமாக உள்ள பிரபஞ்சம் தோன்றும் எனின் —, சிலந்தி எப்பொழுதும் தன் வயிற்றினின்று நூலைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கும்; ஆனால் பிரபஞ்சமோ பிரமத்தினின்று ஒருகால் தோன்றுவதன்றி எக்காலும் தோன்றிக் கொண்டு இருப்பதில்லை. மேலும் சிலந்தியினின்று தோன்றும் நூல் ஒரு தன்மைத்தாகக் காணப்படப் பிரமத்தினின்று தோன்றிய பிரபஞ்சமோ பல தன்மையாகக் காணப்படுகின்றது.

காய், இலை, பழம், பூ முதலியவற்றை மரமானது தருதல் போலவும், திரை நுரை திவலை குமிழ் முதலியவற்றை நீரானது தரும் தன்மைபோலவும், பிரமந்தானே பலவிதமாய் இருக்கும் எனின்-, அறிவாய் இருப்பது அறியாமையாய் இருக்கும் என்றும், அறிவினிடத்தில் அறியாமைப் பொருட்கூட்டங்கள் தோன்றும் என்றும் எவரும் கூறார்.

அற்றேல், இவ்வுலகம் தோன்றும் முறைதான் யாது? எனில்-, சூக்குமமாய் உள்ள விதையானது இலை பழம் விழுது என்பனவற்றையுடைய தூலமாகிய ஆலமரத்தைத் தந்த தன்மைபோல, தூலமாய்ப் பலவாய் இருக்கிற உலகத்தினையும், சூக்குமமாய் அசத்தாய் இருப்பதொரு முதற்பொருள் தந்ததாதல் வேண்டும்.

அங்ஙனமன்று, நெல்லினின்று வைக்கோலும் பதரும் தோன்றினாற் போலச் சித்திலே நின்றும் சடமான பிரபஞ்சம் தோன்றும் எனில்-, நெல் சூக்குமமாய்ச் சடமாய் இருத்தலால் அது வைக்கோலுக்கும் பதருக்கும் உபாதானம் ஆகும். காரணம் இன்றிக் காரியம் பிறவாது. அக்காரணமும் தம் காரணமாக இருப்பதொழிந்து அயற்காரணத்தில் இருந்து

காரியங்கள் தோன்ற மாட்டா, அங்ஙனம் தோன்றுமாயின், பருத்தி காரணமாக ஆடை தோன்றுவதன்றி, மண் காரணமாகவும் ஆடை தோன்றுதல் வேண்டும். எனவே, சடப் பொருள் காரணமாகச் சடப்பொருள்கள் தோன்றுமே யன்றிச் சித்துப் பொருள்கள் தோன்ற மாட்டா என்பது பெறப்படும். ஆதலின் சடமாய் அழிந்து போவதாயுள்ள உடல் முதலிய உலகிற்குச், சித்தாய் அழிவில்லாமல் இருப்பதாகிய பிரமம் காரணமாகும் என்ற நின் கொள்கை பொருந்துவதன்று.

மேலும், சித்தாய் உள்ள பிரமத்தில் சடமாய் உள்ள பிரபஞ்சம் தோன்ற வேண்டுவதென்னை? பிரபஞ்சமாகத் தோன்றுதல் பிரமத்திற்கு இயல்பாகும் எனில் -, நெருப்பிற்கு வெப்பம் இயல்பானாற் போலப் பிரமம் ஆகிய சித்துக்கு நீ இயல்பு என்று கூறிய பிரபஞ்சமும் சித்தேயாதல் வேண்டும். பிரபஞ்சம் சடம் எனில் -, முன்னர் நீ சத்தாகிய பிரமத்திற்கு இயல்பு பிரபஞ்சம் என்று கூறியதனைக் கை விடுக.

சத்தாகிய பிரமத்திற்கு இயல்பு சடமாகிய பிரபஞ்சம் என்றுரைத்தல் பெரு விளக்கில் தோன்றிய ஒளியானது கரிய மையைத் தந்தமை போலப் பொருந்துவதேயாம் எனில் -, விளக்கினிடத்திற் கறுத்த மையானது தோன்றுதல் விளக்கினுடைய இயல்பு அன்று: **திரி நெய்** முதலிய உபாதிகளின் விளைவேயாகும். அதுவன்றியும் பிரமத்தில் தோன்றிய உலகம் மீண்டும் பிரமத்திலேயே ஒடுங்கும். ஆனால் விளக்கில் தோன்றிய மையானது மீண்டும் அந்த விளக்கின்கண் சென்று ஒடுங்காது.

அங்ஙனமன்று. செம்பானது இரத குளிகையோடு கூடிய வழி **காளிதம்** நீங்கிப் பொன்னாகிய தன்மைபோல, பிரமத்துக்குண்டாகிய சரீர சம்பந்தத்தையும் அதன்பால் தோன்றிய விவேக ஞானம் நீக்க அந்தப் பிரமப்பொருள் சுத்தம் அடையும் எனில்-, இங்ஙனம் சுத்தப்படவேண்டிய நிலையில் அசுத்தமாய் இருக்கிற பிரமத்தை நீ 'நித்தன் அறிவன் சுத்தன்' என்றுரைத்த வித்தகம் என்னை? மேலும் நீ கூறிய விவேக ஞானம் அவித்தையோடும் கூடிக் கொண்டுள்ள பிரமத்தின் வேறாக வேண்டும்! அவித்தையோடு கூடி நிற்கும் பிரமமே விவேகஞானம் எனில்-, அத்தகைய பிரமம் உயிர்களின் ஒன்றாதலே வேண்டும். தூயமேலான பிரமப் பொருளைத் தூயனவல்லாத இழிந்த உயிர்களுள் ஒன்றாக வைத்துக் கூறும் நீ, மிகவும் பொல்லாதவனே யாவாய்!

### பிரமாதா மறுப்பு

மணிகள் பலவாயிருப்பினும் அவற்றை இணைக்கும் நூல் ஒரு தன்மையாக இருந்தாற்போலவும், பசுக்கள் பலவாயினும் அவற்றின் பால் ஒரு தன்மைத்தாதல் போலவும், பாண்டங்கள் பலவாயினும் அவற்றில் நிழலாடி நிற்கும் ஞாயிறு ஒன்றாதல் போலவும், கூவல் ஆழி குளம் சிறு குழி வாய்க்கால் முதலியன பலவாயினும் அவையிற்றிலுள்ள தண்ணீர் ஒரு தன்மைத்தாகவே விளங்குதல் போலவும், பலவகை யோனி பேதங்களாய் உள்ள உடல்களுக்குளெல்லாம் இருப்பது பிரமம் ஒன்றே எனக் கூறினாய்! அங்ஙனமாயினும் மணிகளும் நூலும் தாமாக இணைந்தனவல்ல. ஒருவன் கோவைப் படுத்தியவழியே அவைகள் இணைந்து நின்றன; அதுபோலப் பிரமத்தையும் இவ்வுடல்களையும் இயைவித்தவன் ஒருவன் இன்றியமையாது வேண்டப் படுவன்! நீ கூறிய 'பசுக்களும் பாலும் போலும்' என்னும் அடுத்த உவமை, பிரமம் அறிவிலதாயும் அப்பிரமம் இயைந்துள்ள இவ்வுடல்கள் அறிவுடையனவாயும் இருந்தவழியே பொருத்தமுடையதாகும்! இதற்கும் அடுத்துக் கூறிய உவமைகளுக்கியைய, கூவல் ஆழி குளம் குழி வாய்க்கால் முதலியனவற்றில் தண்ணீர் ஒரு தன்மைத் தாகவே உளதெனவும், குடங்கள் தோறும் ஞாயிறு நிழலாடித் தோன்றுகின்றது எனவும் கண்டுணர்ந்து கூறுதற்கு, மக்கள் சிலர் வேண்டப்படுவர். பிரமம் ஒன்று தவிர வேறு பொருளில்லை என்ற உனக்கு, இவ்வுமைகள் யாங்ஙனம் பொருந்தும்?

கண்ணாடியின்கண் நிழலானது தோய்வற நின்றாற்போல உடலுக்குள் பிரமம் தோய்வற நிற்கும் எனின்-, தன்னிடம் தோன்றும் நிழலைக்கொண்டு கண்ணாடியானது இயங்குமாயின், பிரமத்தின் நிழலைக் கொண்டு இவ்வுடலும் கூடியும் பிரிந்தும் நின்று இயங்கும். நிழலால் கண்ணாடி இயங்காமை தெளியப்படுதலின், பிரமத்தின் நிழலால் இவ்வுடலும் இயங்காமை தெளியப்படும். ஆதலின் கண்ணாடியையும் அதனுள் தோன்றும் நிழலையும் உவமையாகக் கூறுதலும் பொருந்தாது.

காந்தம் அசைவற நிற்க அதன் முன்னிலையில் இரும்பு அசைதல் போலப் பிரமமும் அசைவற நிற்க அதன் முன்னிலையில் உடலானது இயங்கும் என்னின்-, பிரமமானது காந்தம் போலக் கண்டிதப் பொருளாயின்றி அகண்டிதப் பொருளாய் விளங்குதலின், அதன் முன்னிலையல்லாத இடம் யாண்டும் இல்லை. இங்ஙனம் எங்கும் பரவியுள்ள பிரமத்தின் முன் உடல்மட்டுமேயன்றிக் கடம் படம் முதலியனவும் இயங்கித் தொழிற்படுதல் வேண்டும் ஆனால் உடல் மட்டுமே இயங்க ஏனையன இயங்காது கிடப்பக் காண்டலின், பிரமத்தின் முன்னிலையில் எல்லாப் பொருள்களும் இயங்கா நிற்கும் என்றது பொருந்தாது.

காந்தமும் இரும்பும் தனித்தனியே பிரிந்து தொலைவிற் கிடந்த வழி அவை ஒன்றோடொன்று பொருந்தா; காந்தமும் இரும்பும் கூடிக் கிடந்தனவாயினும் அவை தாமே தொழிற்படமாட்டா; அவ்விரண்டனையும் நேரொக்கப் பிடித்துக் காட்டுவார் சிலரைப் பெற்றவழியே இரும்பானது காந்தத்தைச் சென்று தலைப்படுவதாகும். எனவே, பிரமத்தையும் உடலையும் கூட்டித் தொழிற்படுத்த வல்ல முதற்பொருள் ஒன்று வேண்டப்படும். மேலும், காந்தமானது இழுத்துக் கொள்ளும் வல்லமை யுடையதே யன்றி அதனை நீக்கிக் கொள்ளும் தன்மை பெற்றதன்று. பிரமத்தின் முன்னிலையில் உடல் பிரிந்தும் கூடியும் வருதலின் நின் உவமை ஏற்புடைத்தாகாது.

கனவிற்புலியும் கயிற்றின்கட் பாம்பும் நனவில் உண்மையுணர்ந்தவழி இன்றாதல்போல, இன்பதுன்ப நுகர்ச்சிகளும் பிரமத்துக்கு இல்லை என்றாய்! கனவு பொய்யன்று. நனவில் பருவுடல் கொண்டு சுவை யொளியூறோசை நாற்றங்களை அறிந்து துய்ப்பது போலவே, கனவில் நுண்ணுடல் கொண்டு அவையிற்றை உயிர் அனுபவிக்கும். நனவு கனவு என்னும் இருவகை நிலையினும் உயிர்நுகர்வது பிராரத்தவினையின் பயனேயாகும். இவ்விரு நிலைகளினும் நுண்மை பருமை என உடல் வேற்றுமையுண்டு. கயிற்றைப் பாம்பு என மயங்கியமைக்குக் காரணம் புற்றும், அதன்கட் கிடந்த கயிறும், இருளில் ஒளி குன்றிய கண்ணுமேயாம். அம்மூன்றும் சடப்பொருள்கள். ஆயின், நீ கூறும் பிரமமோ அறிவுப் பொருள், அறிவாயுள்ள பிரமம் கயிற்றைக் கயிறென்று அறியமாட்டாமல் மயங்குமாயின், அதனை அறிவு என்றல் பொருந்தாது. பிரமம் கயிற்றைப் பாம்பென்று மயங்கிக் கருதி அஞ்சும் எனின்-, அதனை முதற்பொருள் என்றல் ஒல்லாது. மேலும், கனவிற் கண்ட புலியும் கங்குலிற் கயிற்றிற் கண்ட பாம்பும் பொய் என்று ஒருகால் தெளிந்து வைத்தும், மீளக் கனவு காண்புழிக் கங்குலிற் கயிற்றைக் கண்ட இடத்துப் பிரமம் அச்சமுறுதல் என்னை? எனவே, இவ்வுடலோடு கூடி மயங்கி நிற்பது, பிரமம் அன்றூ என்பதே தேற்றம்.

சிவந்த பூவோடு கூடிய **படிகம்** தன் தன்மை இழந்து அப்பூவின் நிறமாய் இருந்ததேனும், அதன் கண் ஒரு சற்றும் தோய்வற நின்றாற்போல, பிரமமும் தன்பால் நெருங்கிப் போதரும் வினைகளை நுகருமிடத்து நுகர்ச்சிப் பொருள்களின் வண்ணமாய் இருந்ததேனும், அவற்றில் சற்றும் தோய்வற நிற்கும் என்றாய்! படிகம் பூவோடு கூடியிருந்தபொழுது சிவந்த நிறம் ஒன்றுமேயாய் இருந்தாற்போல, வினையோடு கூடிய பிரமமும் ஒருவகையாக இராமல் பலவகையாய் இருப்பதென்னை? நல்வினை தீவினைகள் பலவாயிருத்தலின் பிரமமும் பலவகையாய் இருக்குமெனின்-, முன்னர் இப்பிர

மத்தினை ஆண்டு காத்தருளும் விவேகஞானமும், அறியாமையோடு கூடியிருக்கும் உடலும் உண்டென்றாய்!. ஈண்டுப் பல வகைப்பட்ட நல்வினை தீவினைகளும் உண்டென்கிறாய்! ஆதலின் களவு செய்த கள்வர்களைக் கொணர்ந்து சிறை செய்து அதற்குத் தகஉறுக்கும் அரசர்களைப் போல, முற்பிறவிகளிற் செய்த பழைய வினைத் தொடர்பால் உடலாகிய சிறைச் சாலையில், உன்னுடைய பிரமத்தை அடைத்து இன்பதுன்பங்களை நுகர்விக்கும் முதல்வன் ஒருவன் உளனாதல் வேண்டும்!

அன்றியும், வினைக்கீடாக மேற்கொண்ட உடலில் பிரமம் மூன்று அவத்தைப்படும் என்று கூறினாய்! உன் பிரமமோ குறைவிலா நிறைவாதலின், அது நனவு கனவு சுழுத்தி என்னும் அவத்தைகளில் அடங்காது. உடல் அறியாமைப் பொருளாதலின் அவத்தையனுபவம் அதற்கு நிகழவழியில்லை. ஆதலின் இவ்வுடலோடு கூடிய மூன்றவத்தைகளையும் அனுபவிப்பவர் யார்?

யான் அவத்தை என்றது அந்தக் கரணங்கள் பிரிந்த இடத்துண்டாகிய மயக்கத்தை எனின்-, அந்தக் கரணங்களோ, அன்றிப் பிரமமோ, இவ்வுடலுக்கு முதன்மையுடையது யாது? பிரமமே முதன்மையுடையது எனின்-, அப்பிரமம் நிற்க அந்தக் கரணங்கள் நீங்கமாட்டா. அந்தக் கரணங்களே முதன்மையுடையன எனின்-, எல்லா முதன்மைகளையும் உடையது பிரமம் என்று வேதம் கூறியது பழுதுபடும். அவ்வாறன்று, அவத்தையுறுவது உடற்குள்ளே அகப்பட்டு நிற்கும் பிரமமே எனில்-, சாளரவாயிலிற் புறம்பே நின்று உள்ளே ஒரு விரலை நீட்ட, அவ்விரலின் நுனியில் ஒரு குளவியானது கொட்டிய வழி, அந்நோயை அவ்விரல் மட்டுமே அநுபவிக்குமாயின், இவ்வுடலிற் பொருந்தி நிற்கும் பிரமமும் அவத்தையைத்தானே தனியாக அனுபவித்ததெனலாம். குளவி கொட்டிய நோய் விரலுக்கு மட்டுமே யன்றி உள்ளந்தாள் நின்று உச்சியளவும் தெரிதலின், உடலில் பொருந்தியிருக்கும் பிரமம் மட்டுமே அவத்தையுறும் என்றது பொருந்தாது.

கண்ணாடியிற் றோன்றிய கண்ணுக்கு இழைத்த துன்பம், முகத்திலுள்ள கண்ணுக்கு எய்தாமை போல, இன்பதுன்ப நுகர்ச்சிகளும் உடலுக்கே யன்றி அறிவாகிய பிரமத்துக்கு இல்லை என்றாய்! வேதம் இன்பதுன்பங்களை நுகர்வது அறிவேயாம் என்று கூறாநிற்ப, நீ அதனை ஒழித்து, உடலுக்கே யன்றி அறிவுக்கு இன்ப துன்ப நுகர்ச்சி இல்லை என்றது நூல் மாறுபாடும், காண்டல் மாறுபாடும் ஆகிய குற்றமாம். மேலும், பிரமம் என்பது அகண்டிதப் பொருள் என்று முன்னர்க் கூறிய நீ, இது பொழுது பிரமம் மாயாவுபாதிகளினால் கட்டப்பெற்று நிற்கும் என்றுரைத்தல், வானில் அசையும் காற்றினைப் பிடித்து அதனை அசையாத வண்ணம் பருவிலங்கிட்ட ஒருவன் செய்தி போலவே உளது.

**சீவன் முத்தி மறுப்பு:**

வானத்தை மறைத்த மேகத்தினை அவ்வானத்தில் தோன்றிய காற்றானது நீக்கி மாசின்றி வயங்கச் செய்தல் போல, பிரமத்தைக் கட்டுறுத்திய மாயாவுபாதிகளை அப்பிரமத்தில் தோன்றிய விவேக ஞானமானது போக்கிப் பிரமத்தை தூயதாக்கும் என்றாய்! பிரமத்துக்கு விவேக ஞானம் முன்னரே உளதாயின், அஃது உள்ளபோது இடையே அறியாமையாகிய மயக்கம் வர வாயிலில்லை. இவ்விவேக ஞானம் பிரமத்துக்கு இடையே தோன்றியதெனின், முன்னரே இல்லாத ஒரு பொருள் பின்னர் ஒரு ஞான்றும் தோன்றாது. அது சற்காரியவாதம் என்னும் அறிவியலுண்மைக்கு மாறுபடும்.

முன்னரே இல்லாத பொருள் பின்னர்த் தோன்றக் காண்டுமே எனில்-, இல்லாத பொருள் தோன்றும் என்றல், வானத்தில் ஒரு தாமரைப்பூ மலர்ந்தது என்று சொல்லுதலையே ஒக்கும். அவ்வாறன்று, முன்பு இல்லாத தீ விறகிற் பின்பு ஒரு நிலையில் உண்டாதலைப் போல, முன்னர் இல்லாத விவேகஞானமும் பிரமத்துக்குப்

பின்னொருகால் உண்டாகும் எனில்-, விறகினிடத்து முன்னர்க் காணப்படாத நெருப்புப் பின்னர் ஒருவன் அரணியை வைத்துக் கடைந்தவழி யன்றித் தானே உண்டாகாது, அதுபோல உன் பிரமத்துக்கும் முன்னர் இல்லாமல் பின்னர்த் தோன்றிய விவேகஞானம் வேறே. ஒருவன் தோற்றுவிக்கத் தோன்றிய தாதல் வேண்டும்.

மேலும் அறியாமையாகிய பெத்த நிலையில் தோன்றிய விவேகம் விறகில் தோன்றிய நெருப்பை ஒக்குமாயின், அறிவாகிய முத்தி நிலையில் தோன்றும் விவேக ஞானம் அவ்விறகில் தோன்றிய வெவ்விய தழலை யொக்கும். விவேக ஞானம் தோன்றிய இடம் அந்த விறகினை ஒக்கும். எனவே, விவேகஞானம் தோன்றியது பிரமத்தில் அன்றி மாயா அவித்தையிலேயாக வேண்டும். இது காண்டல் விரோதம் என்னும் குற்றமாம்.

ஒரொரு வைக்கோலாகவும் கழியாகவும் மரமாகவும் பறித்துப்போட்டவழி வீடென்பது இல்லையாய்ப் போகுந் தன்மை போலவும், ஒரொரு நூலாகக் கழித்தவழி ஆடை என்பது இல்லையாய்ப் போதல் போலவும், உடலாகக் கூடிக் கொண்டிருக்கும் எல்லாக் கருவிகளையும் இது நாம்அன்று இது நாம் அன்று என மறுத்து ஒவ்வொன்றாகக் களைந்த வழி அந்தப் பரந்தானே இந்தச் சிவனாய் இருந்த தென்றாய். இருளின் முன்னே ஞாயிறும் ஞாயிற்றின் முன்னே இருளும் நில்லாமை போல, அறிவாகிய பிரமத்தின் முன்னே அறியாமையாகிய உடல் முதலிய உலகம் தோன்றி நில்லாது. அறியாமையாகிய உடல் முதலிய உலகின் முன்னே அறிவாகிய பிரமமும் தோன்றி நில்லாது. அன்றியும் இருளல்லாத தூய ஒளியும் ஒளியல்லாத முழு இருளும் ஒரு காலத்தும் தம்முள் ஒன்றிற்கொன்று பயன்படுதல் இல்லை. இருளோடு கூடி இருளை நுகர்ந்தும், ஒளியோடு கூடி ஒளியை நுகர்ந்தும், இருளும் ஒளியும் என்னும் இரண்டும் ஆகாமல், தனியே ஒரு முதலாய் நின்ற கண்ணின் தன்மையைப்போல அறிவாயுள்ள பதியோடு கூடி இதுபதி என்று அறிந்தும், அறியாமையாயுள்ள பாசத்தோடு கூடி இது பாசம் என்றறிந்தும், பதியும் பாசமும் ஆகிய இரண்டும் ஆகாமல், பசு என்று தனியே ஒரு முதல் உண்டென்று அறிவாயாக!

பிரமமே பிரமமானால், அதனால் பிரமத்துக்கு உண்டாகும் பயனென்னை? பிரமம் தன்னிடத்தில் தன்னியல்பைத் தானே காணுமாயின், கண்ணானது தன்னிடத்தில் தன்னியல்பைத் தானே காண வல்லதாதல் வேண்டும். பிரமம் தன்பால் நிகழும் இன்பத்தைத் தானே நுகரும் எனில் -, பிரமம் இந்தக் கட்டுநிலை உண்டாவதற்கு முன்னே தன்பால் நிகழும் இன்பத்தைத்தான் நுகராமை என்னை? கருப்புக் கட்டியானது தன்பால் உள்ள சுவையைத்தான் நுகராது இருந்தமை போலும் எனில் -, கருப்புக்கட்டி தன் சுவையைத் தான் என்றும் நுகர்தலில்லை. அதுபோலப் பிரமமும் தன் இன்பத்தைத் தான் துய்த்தல் ஒரு ஞான்றும் இல்லை. கருப்புக்கட்டியின் சுவையை நுகர்வோன் வேறொருவனாதல் போல, பிரமத்தின் இன்பத்தையும் அதனின் வேறாய்க் கட்டுற்று நிற்கும் உயிரே, அக்கட்டு நீங்கியபோது நுகர்தல் பெறப்படும்.

வேதத்தில் **தத்துவமசி** மகா வாக்கியம் பிரமப் பொருள் ஒன்றே, அதனிற் பிற பொருள்கள் இல்லை என்னும் கருத்துடையது என்றாய்! **தத்**-அது, **துவம்**--நீ, **அசி**-ஆனாய் எனப் பொருள்படும் மூன்று பதங்களையுடைய மகாவாக்கியத்திற்கு, பிரமப்பொருள் ஒன்றே ஆதலின் வேறுபொருள்கள் இல்லை என்றல் கருத்தாதல் செல்லாது. ஒருவனது ஆண்மை கருதி அவனை 'நீ புலி ஆயினை' என்ற வழி **நீ** என்பதொரு பொருளும், **புலி** என்பதொரு பொருளும், ஆதற்குக் காரணமாகிய **ஆண்மை** என்பதொரு பொருளுமாக முப்பொருள்கள் உண்மை தெளியப்படும். அன்றியும் 'புலி ஆயினை' என ஒருவனைக் கூறிய வழி, அவன் உண்மையிற் புலியாகின்றானல்லன்; புலியைப் போலும் ஆண்மையினையே யுடையவனாகின்றான். அதுபோல, நீ பிரமப்

பொருள் ஆகின்றாய எனபுழி, நீ பிரமமா கவே ஆகி விடுவதில்லை, பிரமத்தைப் போலும் கட்டற்ற நிலையை எய்துகின்றாய் என்பதே கருத்து. புலிவேறு புலியாகின் றவன் வேறுதல் போல, அகம்தானே பிரமமாகா நின்றது என்புழியும், அகமும் பிரமமும் வேறு வேறு பொருள்களாதல் தெளிவு.

நீரின் அசைவால் நீர்க்குள் இருக்கும் நிலா அசைந்ததாயினும் உண்மையில் நிலா அசையாமை போல, உடலின் அசைவால் உடலுக்குள் இருக்கும் பிரம மும் அசையுமாயினும், உண்மையிற் பிரமத்திற்கு அசைவு இல்லை என்றாய். நிலாவானது தனது அசைவின்மையைத் தானே உணர்ந்து கொள்ளவல்லதன்று. அதனைக் கண்டுணர்ந்து சொல்ல வல்ல வேறொருவன் உளனாதல் வேண்டுதலின் ஏகம் பிரமம் என்ற நின் கூற்றுப் புரை பட்டொழியும்.

## பரமுத்தி மறுப்பு :

குடம் உடைந்தவழிக் குடத்திலிருந்த காற்று வானத்திலுள்ள காற்றோடு கலந்துவிடுதல் போல, இவ்வுடல் நீங்கிய வழி இவ்வுடலின்கண் அடைபட்டுக் கிடந்த அறிவு பிரமமாகிய பேரறிவோடு கலந்துவிடும் என்றாய்! காற்றானது குடத்தில் அடைபட்டிருந்த வழி எத் தகைய துன்பத்தையும் நுகர்ந்ததில்லை; பின்னர் வான் வளியிற் கலந்த பொழு தும் எவ்வகை இன்பத்தையும் எய்திய தில்லை. அதுபோலப், பிரமமும் உடலுக் குள்ளே அகப்பட்டு நின்றபோது ஒரு துன்பத்தையும், உடலை நீங்கிய பொழுது எத்தகைய இன்பத்தையும் நுகராத தன்மைத்தாதல் வேண்டும். ஆனால் அதற்கு மறுதலையாக, உடலில் நிற்கும் அறிவோ, துன்பத்தை நுகர்ந்த மறு கணமே இன்பத்தையும் உடல் துய்க்கக் காண்கின்றோமாதலின், நீ கூறிய **குடா காய உவமை** பொருத்தமிலதாகும்.

எல்லாம் பிரமம் என்று நீ கூறுவது உண்மையாயின், ஒருவன் நான் பிரமம் என்று தெளிந்தவழி, ஏனையோர் எல்லோ ரும் ஒருங்கே வீடுபேறு எய்தல் வேண் டும். பிரம ஞானம் உணர்ந்தோரே முத்தியடைவர், அதனை யுணராதார் முத்தியை யடையார் எனின், உணர்ந் தவர் உணராதவர் எனக்கூறும் நின் கூற்றின்படி, பிரமத்தை ஒழிந்த உயிர்த் தொகுதியும் பலவகையாய் இருக்கும் எனத் தெளிக.

## பதி ஞானத்தின் அருமை :

முத்தியை அடையாதவர்கள் வேள்வி முதலாயுள்ள கன்மகாண்டங்களைச் செய் தொழுக. அதுகாரணமாக அவர்களுக்குப் பின்னர் விவேகஞானம் உண்டாகும் எனின், பிரமத்தை மாயா அவித்தைகள் ஒருநிலையிற் போந்து பொருந்தி மயக்கி நிற்கும் என்ற நீ, இன்ன காரணத்தால் பிரமத்தை மாயா அவித்தைகள் வந்து பொருந்தின எனக் கூறுகின்றிலை. கன்மம் காரணமாக விவேகம் உண்டாகும் என்றது போல, பிரமத்தை மாயா அவித் தைகள் வந்து பொருந்தியமைக்கும் காரணங்கள் உளதாதல் வேண்டும்.

தீக்கடை கோலை மரத்தில் வைத்துக் கடைய அதனில் தோன்றிய தீயானது கோலையும் மரத்தையும் ஒருசேரச் சுட் டெரித்தாற்போல, விவேகம் கன்மங்களை அழித்தொழிக்கும் என்றாய்! பிரமஞானம் என்பது ஒரு சிறிதும் இல்லாதவர்கள் கூட, எமக்குப் பிரம ஞானம் உண்டாகிவிட்டது. இனி எமக்கு ஆசாரம் ஏதும் வேண்டுவதில்லை என்று கூறிக்கொண்டு, வேதத்திற் கூறப் பெற்ற நல்லொழுக்கம் நன்னெறிகளைத் தாமே வலிந்தொழித்து விட்டுப் புல்லிய ஒழுக்கங்களை மேற்கொண்டு திரிதல், 'பொறியோ போத நெறியோ' அறிகிலம். பிறவித் தொடர்பை நீக்கிக் கொள்வதற்கு ஏதுவாயுள்ள ஒழுக்கப் பகுதிகளைக் கைவிடும் இவர்களின் செயல், செய்ந்நன்றி கோறலேயாகும்.

உலகியல் ஒழுக்கமும் வேதநூல் ஒழுக் கமும் 'பாலர் உன்மத்தர் பசாசரில் எனவும், உறங்கினேன் கை வெறும் பாக்கெனவும்' தாமாக நம்மையறியாமல் நீங்குதல் வேண்டுமேயன்றி, நாமாக

அவைகளை நீக்குதல் மீளா நிரயத்திற்கே ஏதுவாகும். உயர்ந்த ஒழுக்கங்களால் தோன்றுதற்குரிய பிரமஞானம் உண்டாகாமல் ஒருவன் 'நான் முத்தன்' என்று சொல்லிக் கொள்ளுதல் பித்தமே யாகும். ஒருவன் இறவாத பொழுதே பிரமஞானம் உண்டாகவேண்டுமேயன்றி, இறந்த பின்பு பிரமஞானம் பெறுதல் இல்லை. ஏனெனில், இவ்வுடலைச் சடம் என்று நீயே முன்னர்க் கூறினுய்! "வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும், வணங்கினும் உதைப் பினும் பிணங்குதல் செய்யா"ப் பிரமத் தன்மையை நீ எப்போது பெறப் போகின்றுய்?

மனிதனுக்கு வயது நூறல்லதில்லை. இதன்கண் பாதி உறக்கத்தில் கழியும். மற்றப் பாதியில் ஒரு பதினைந்து இளமையிலும், மற்ருெரு பதினைந்து முதுமையிலும் கழியும். எஞ்சி நின்ற இருபது பலவகையில் வீணுகிப் போம். இதனிடைப்பட்ட குறுகிய காலத்தில் எண்ணிறந்த நூல்களையெல்லாம் கற்று, கண்டார் நின்ருரோடெல்லாம் தருக்கம் பேசித் தலைபறியுற்று, பல்லோர் ஈந்த உணவை யுண்டு, அவர்களுக்கெல்லாம் பிரமஞானம் சொல்லுகின்றேன் என்று பலவற்றை உளறிக்கொண்டிருக்கின்ருய்!

இறப்பு நேருங்கால் 'அஞ்சற்க' எனக் கூறி உன்னைக் காக்கவல்ல இறைத் தொடர்பு ஏதும் நினக்கு இல்லையாய் ஒழிகின்றது. 'நானே நான்முகன் திருமால் உருத்திரன் முதலிய எவரு மானேன்' என்று நீ கூறித் திரிதலால், அவர்களெல்லாம் நின்பால் மிகவும் சினந்து நின்னை நிரயத்தில் வீழ்த்தி ஒறுப்பர். ஆதலின், மாயாவாதப்பேயா! நினக்குத் தேவ இனத்துள் ஒருவரேனும் எஞ்சியிருக்கும் வரையில் நினக்கு நிரயத் துணின்று மீட்சியில்லை என்று அறிக.

"சத்தி யால்உயிர்க்கு இருளறத்
தனுகர ணுதி
உய்த்து உடங்குநின்று அசைப்பதை
உணர்கிலார்; பதியே
மெத்தும் மாயையிற் பிணிப்புண்டு
வீற்றுவீற் ருகி
முத்தி எய்தும் என்பார், மொழி.
விரோதம்; நீ தெரிதி."

—கச்சியப்ப முனிவர்.

(தொடரும்)

—ஆசிரியர்.

---

How **charming** is divine **philosophy**!
Not harsh and crabbed as dull fools suppose,
But musical as is Apollo's lute,
And a **perpetual feast** of nectar'd sweets
Where no crude surfeit reigns."

—John Milton.

எத்தகை இன்ப ஊற்ருய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை, அந்தோ!
அறிவிலார் கடினம் என்பர்.
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல், இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்து எனத் திகழும் நன்றே!

—மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.

# விடை தெரியுமா ?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையாளர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் வரும் வினாக்கள் கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்துகொண்டு மகிழ்வதும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் "சிறு துளி பெருவெள்ளம்" என்னும் நிலையிலும், "எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்ற முறையிலும், சமயத் துறையிற் பொதுவாகப் பலதுறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்து கொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன்படுமாறு அமைவதற்கு, இறையருள் துணை புரிவதாக! —ஆசிரியர்]

1. '**தீக்கை**' என்னும் சொற்குப் பொருள் என்ன? தீக்கை எத்தனை வகைப்படும்? விவரிக்க.

2. '**இருவினை ஒப்பு**' என்பது யாது? அதுபற்றிய கருத்துக்கள் யாவை?

3. '**தசாங்கம்**' என்பது என்ன? அது விளக்கப் பெற்றுள்ள இரண்டு நூல்களைக் குறிப்பிடுக.

4. "அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
   ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை"

   என்பது எதனைக் குறிக்கின்றது? இவ்வரிகள் எந்நூலில் எங்கு வந்துள்ளன?

5. '**திருவிரையாக் கலி**' என்று எதற்குப் பெயர்? அச்சொற்றொடர் பயின்று வந்துள்ள இலக்கியப் பகுதிகள் இரண்டொன்றைக் குறிப்பிடுக,

6. நவக்கிரகங்களுள் தனித்தனியே ஒவ்வொன்றுக்கும் சிறப்பாக உரிய தலம் இன்னின்னது என்பதனைச் சுட்டுக.

7. ஒரு சிறந்த வைஷ்ணவருக்குரிய குலம், கோத்திரம், சூத்திரம், வேதம், புருஷன், தந்தைதாயர்கள், பந்துக்கள், தொழில், பிரயோஜனம், பிரார்த்தனை என்பன எவை எவை?

8. இராமாநுஜர்க்கு ஆசார்யர்களாக விளங்கியவர்கள் யார் யார்? அவர்களிடம் அவர் முறையே எவ்வெற்றைக் கேட்டுத் தெரிந்து பயன் கொண்டார்?

9. திருமாலின் திருவவதாரங்கள் எத்தனை? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

10. கம்பர் வாழ்ந்திருந்து, இராமாயணம் இயற்றிய காலம் யாது?

—விடை : அடுத்த பக்கம் பார்க்க.

# விடை விளக்கம்

1. 'தீக்கை' என்னும் சொல்லுக்கு, 'மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது' என்று பொருள். தீக்கையானது நயனம் பரிசம் வாசகம் மானதம் சாத்திரம் யோகம் அவுத்திரி எனப் பலவகைப்படும். தீக்ஷை, தீட்சை, தீக்கை என்பன ஒரு பொருளனவே யாகும்.

(அ) **நயன தீக்கை:** ஆசிரியன் மாணவனைத் தன் அருட்பார்வையினால் அன்புடன் இனிது நோக்கி ஆட்கொண்டருளுதல். நயனம் - கண், பார்வை. மீனானது தன் முட்டைகளை அடைகாத்தல் (Incubation) செய்யாமல், அவ்வறைத் தன் கண்களினால் உற்று நோக்குதல் மூலமாகவே குஞ்சு பொரிக்கச் செய்தல் போல்வது இது. 'மீனாட்சி' என்னும் பெயர்க் காரணமும் ஈண்டு நினைவு கூரற்பாலது. மாணிக்கவாசகர் தம் ஞானாசிரியரை "உடையாய்! என்னைக் கண்டுகொள்ளே" என்று வேண்டுதல் காணலாம்.

(ஆ) **பரிச தீக்கை:** ஆசிரியன் மாணவனைத் தன் திருக்கையினாலும் திருவடியாலும் தொடுதல். பரிசம் - தொடுதல், தீண்டுதல். இது பெட்டைக் கோழியானது தன் முட்டைகளின் மீது அமர்ந்து அடைகாத்தல் செய்து, அவற்றைக் குஞ்சு பொரிக்கச் செய்தல் போன்றது. சிவபிரான் சுந்தரமூர்த்திகளுக்குத் திருவதிகையில் சித்தவடமடத்தில், அவர் உறங்கும்போது கிழவடிவிற் போந்து பலகால் அவர்தம் தலையை மிதித்துத் திருவடித் தீக்கை புரிந்தருளிய வரலாறு இங்கு நினையத் தகுவது. 'சென்னி மிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்' என்னும் பெரிய புராணப் பாடலும் (அப்பர்-195) ஈண்டுக் கருதுக.

(இ) **வாசக தீக்கை;** ஆசிரியன் மாணவனுக்குச் சில சொற்களைக் கூறியோ, திருவைந்தெழுத்துப் போன்ற மந்திரங்களை உபதேசம் புரிந்தோ, ஆட்கொண்டருளுதல். வாசகம் - சொல், "சும்மா இரு சொல் அற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என அருணகிரிநாதரும், "என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்" "நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்து..." என்று மணிவாசகரும் பாடியருளி யிருத்தலும் காணலாம்.

(ஈ) **மானத தீக்கை:** ஆசிரியன் மாணவனை 'இவன் ஈடேறி நலம் பெற்று உய்க!' என்று அருளுணர்வுடன் தன் மனத்தில் நினைத்து ஆட்கொண்டருளுதல், மனஸ் - மனசு - மானசம் - மானதம் - மனத்தினாற் செய்வது. ஆமையானது தான் ஓர் இடத்தில் இட்ட முட்டைகளைப் பிரித்துக் கடலில் நெடுந்தொலைவு சென்றுவிட்ட போதிலும், அவற்றையே நினைவு கூர்ந்திருந்து நினைவு மாத்திரத்தினால் குஞ்சு பொரிக்கச் செய்தலைப் போன்றது. நினைவுக்கும் எண்ணல்களுக்கும் மிகுந்த ஆற்றல் உண்டு. இந்நாளில் Hypnotism, Mesmerism, Telepathy என வளர்ந்து வரும் கலைகள் பலவும் நினைப்பாற்றலின் இயல்பினை மெய்ப்பித்து வருகின்றன.

(உ) **சாத்திர தீக்கை;** ஆசிரியன் மாணவனுக்குப் பதி பசு பாசங்களின் இலக்கணங்களையும், பசுக்கள் பாசத்தின் நீங்கி வீடுபேறு அடையும் முறைமைகளையும் குறித்து ஏதேனும் ஒருநூல் வழியாகப் போதித்து ஆட்கொள்ளுதல். சிவபெரு

மான் மாணிக்கவாசகர்க்குத் திருப்பெருந் துறையிற் குருந்தமர நிழலில் சிவஞான போதம் உபதேசித்து ஆட்கொண்டருளினர் எனக் கடவுள்மா முனிவர் வாதவூரடிகள் புராணத்திற் பாடியிருத்தல் ஈண்டுக் கருதற்பாலது.

(ஊ) **அவுத்திரி தீக்கை :** ஆசிரியன் மாணவனுக்கு ஓமம் முதலியன வளர்த்துச் சடங்குகளுடன் செய்யும் தீக்கை. இந்நாளில் நம் போல்வார் பலரும் செய்து கொள்ளப் பெறுவது இத்தீக்கையே ஆகும். ஹோத்திரம்–ஓமம். ஹோத்திரம், ஔத்திரம். ஔத்திரத்தினுடன் செய்யப்படுவது ஔத்திரி, அவுத்திரி. இவ் அவுத்திரி திட்சையானது கிரியாவதி என்றும், ஞானவதி என்றும் இரண்டு வகைப் படும். குண்டம் மண்டலம் அமைத்துத் தீ வளர்த்து, சுருக்கு சுருவங்களால் நெய் கொண்டு ஆகுதி புரிந்து கிரியைகள் வாயிலாகச் செய்யப் பெறும் தீக்கை கிரியாவதி எனப்படும் இவற்றையே ஆசிரியன் தன் மனத்திற் கற்பித்துக்கொண்டு செய்தருள்வது ஞானவதி என்று பெயர் பெறும்.

இனி, தீக்கையைச் சமயம் விசேடம் நிருவாணம் என மூன்ருகவும் நூல்கள் கூறும். **சமயதீக்கை,** சமய ஒழுக்கம் கடைப்பிடித்தற்கு உரிமையும் தகுதியும் அளிக்கும். **விசேட தீக்கை,** சமய ஒழுக்கம் கடைப்பிடித்தற்குத் தகுதி பெற்ற மாணுக்கனை ஆசிரியன் சிவபுத்திரன் ஆகும் வண்ணம் செய்தருள்வது. இதனுல் சிவபூசை புரிதற்கும், யோக நெறி நிற்றற்கும், சிவாகமங்கள் ஓதுதற்கும் தகுதி யுண்டாகும். **நிருவாண தீக்கை,** சமயம் விசேடம் என்னும் இரண்டு தீக்கைகளும் பெற்றுக்கொண்ட மாணுக்கனுக்கு, முப்பொருள்களின் பொதுவியல்பு உணர்த்தும் முகத்தால் மலத்தை நீக்கி, உண்மை ஞானம் விளங்கச் செய்வது. இதனுற் சிவாகமங்களின் உண்மைப் பொருள் ஆராய்தற்கு உரிமை பெற்று, சிவஞானம் விளங்கிச் சிவம் பிரகாசித்து மலவாசனை நீங்கி வீடுபேறு தலைக் கூடலாம்.

பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும்
　　படி ; நயனத் தருள்பரிசம் மானதமும்
அலகில் சாத்திரம் யோகம் அவுத்திராதி
　　அநேகம்உள ; அவற்றின் அவுத்திரி இரண்டு திறனும்
இலகு ஞானம்கிரியைஎன ; ஞானம் மனத்தால்
　　இயற்றுவது ; கிரியைஎழிற்குண்ட மண்டலாதி
நிலவுவித்துச் செய்தல் ; கிரியாவதி தானும்
　　நீர்ப்பீசம் சபீசம் எனஇரண்டாகி நிகழும்.

—சித்தியார், 255

" மூவகை ஆருயிர் வர்க்கம் ; மலத்தார், கன்ம
　　மூலமலத்தார், மூன்றும் உடையார் அன்றே ;
திவகமாம் என உருவாய் வந்து நாதன்
　　திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்,
பாவனையால், மிகு நூலால், யோகப் பண்பால்,
　　பரவி வரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவ அருள் உதவும்; அவுத்திரி இரண்டு திறனும் ;
　　வியன்கிரியை ஞானம்என விளம்பு மாறே "

"விரும்பிய மந்திராதிகாரம், அர்ச்சனுதி காரம்,
மேவும் யோகாதிகாரம் எனச் சமயம், விசேடம்,
வரும்பொருவில் நிருவாணம்..........." —சிவப்பிரகாசம், 8-9

(2) 'இருவினை யொப்பு' என்பது மலம் பரிபாகம் அடைதற்கும், சத்தி நிபாதம் எய்துதற்கும், ஞானம் பெறுதற்கும் உரிய வாயில் ஆகும்.

"இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து"

என்பது சிவஞானபோதம். இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் இரண்டும், சரியை கிரியை யோகம் என்னும் சிறந்த தவத்தின் பயனுகத் துலை ஒப்ப (தராசுத் தட்டுக்களைப் போல) நேராகிச் சமநிலையை அடைதலே இரு வினையொப்பு எனப்படும். 'ஒட்டு இருவினைச் சமம் கட்டவிழ் பருவம்' என்பது பாம்பன் சுவாமிகள் அருளிய 'ஞான வாக்கியம்'.

தென்னவன் மாறன் தானும் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப் பெற்று,
முன்னைவல் வினைகள் நீங்கி, முதல்வனை அறியும் தன்மை
துன்னினன்; வினைகள் ஒத்துத் துலையென நிற்ற லாலே —பெரியபுராணம்

பிணக்கிலாதபெருந்துறைப் பெருமான் உன்நாமங்கள் பேசுவோர்க்கு
இணக்கிலாததோர் இன்பமேவரும் துன்பமேதுடைத்து எம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினுய் கழுக்குன்றிலே. —திருவாசகம்.

ஒரு பொருளில் விருப்பும் பிறிதொரு பொருளில் வெறுப்பும் கொள்ளுதல் இன்றிப் புண்ணிய பாவம் இரண்டினும், அவற்றின் பயன்களிலும் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வுடன் இருக்கப் பெறும் நிலையே இருவினை எனக் கொள்ளுதல் பொருந்தும். இதனைச் "செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சு ஓர்ந்து ஓடா நிலைமை" எனத் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த **பேராசிரியர்** குறிப்பிடுவர். இதனைச் 'சாந்தம்' அல்லது 'சமநிலை' என்றும் நூல்கள் கூறும்.

"ஊழால் வினையும் இன்ப துன்பங்களை எவன் இறையருளின் கொடை என்று சமநோக்கோடு ஏற்றுக் கொள்கின்றனே—எவனுடைய உணர்ச்சியும் நுண்ணுணர்வும் முரண்படாமல் நன்கினிது ஒன்றுபட்டு இணைந்து நின்று, ஊழ் அணங்கின் விரல்களுக்கு விருப்பப்படி யெல்லாம் ஒலிப்பதற்கு உரிய ஊதுகுழலாக இருக்க மாட்டாவோ—எவன் உணர்ச்சிகளுக்கு அடிமைப் படாதவனே—அத்தகையவனை எனக்குக் காட்டு! அவனை என் இருதயத்தின் ஆழத்தில், உள்ளத்துக்குள் உள்ளுக்குள்ளே பொன்போற் பொதிந்து வைத்துக் கொண்டு போற்றுகின்றேன். அத்தகையோர் இறையருள் பெற்ற பெரியோர்கள் ஆவர்" *

---

"A man that Fortune's buffets and rewards
Hast taken with equal thanks; and blest are those
Whose blood and judgment are so well commingled
That they are not a pipe for Fortune's finger
To sound what stop she please".
"Give me that man
That is not passion's slave, and I will wear him
In my heart's core, ay, in my heart of heart,
As I do thee.........................." —Shakespeare, Hamlet.

என்று ஆங்கிலப் பெருங்கவிஞர் ஆகிய ஷேக்ஸ்பியர் தாம் இயற்றிய **ஹாம்லெட்** எனப் பெயரியதொரு நாடக நூலிற் கூறியிருத்தல், ஈண்டு நாம் சிந்தித்து மகிழ்தற் குரியது. இந்நிலையினையே '**இருவினையொப்பு**' என நம் சமய நூல்கள் கூறுகின்றன.

**(3)** 'தசாங்கம்' என்பது ஓர் அரசனுக்குரிய பெயர் ஊர் நாடு ஆறு மலை புரவி படை பறை மாலை கொடி என்னும் பத்துவகை உறுப்புக்கள் (தசம்+அங்கம்) பற்றியும் பாடுவது. இவைகள் சிறுபான்மை வேறுபட்டும் ஏற்ற பெற்றிவரும்.

> "படையும் கொடியும் குடையும் முரசும்
> நடைநவில் புரவியும் களிறும் தேரும்
> தாரும் முடியும் நேர்வன பிறவும்
> தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய"

எனவரும் தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் நூற்பாவினுல் (616), இதன் இலக்கணம் உணரலாம். இறைவனும் உண்மையில் உலகங்களுக்கெல்லாம் ஒரு பேரரசனே யாதலின், சமய ஆசிரியர்கள் இறைவனுக்கும் இப்பத்துவகை யுறுப்புக் களும் உரியனவாகக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப் பாடுவர். மாணிக்கவாசகர் தமது திருவாசகத்துள் **திருத்தசாங்கம்** என ஒரு திருப்பதிகம் பாடியிருத்தல் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அதன்படி சிவபெருமானுக்குரிய தசாங்கங்களும் பின்வருவன ஆகும்:—

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | — | தேவர்பிரான் |
| 2. | நாடு | — | தென்பாண்டி நாடு |
| 3. | ஊர் | — | திருஉத்தரகோச மங்கை |
| 4. | ஆறு | — | ஆனந்தம் |
| 5. | மலை | — | அருள் |
| 6. | புரவி (குதிரை) | — | வான் புரவி (ஞான ஆகாயம் ஆகிய குதிரை) |
| 7. | படை | — | கழுக்கடை (திரிசூலம்) |
| 8. | பறை (முரசம்) | — | நாததத்துவம் |
| 9. | தார் (மலை) | — | தாளியறுகு |
| 10. | கொடி | — | ஏறு (ரிஷபம்) |

திருவாசகத்தில் '**கீர்த்தித் திருவகவல்**' என்னும் திருப்பதிகத்திலும் இப் பத்துவகை யுறுப்புக்களும் குறிப்பிடப் பெற்றுள்ளன. குமர குருபர சுவாமிகள் தாம் பாடியருளிய '**கந்தர் கலி வெண்பா**' என்னும் செந்தமிழ்த் திருநூலிலும் இவற்றை அமைத்துப் பாடியுள்ளார்.

> "வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
> பேசும் தசாங்கம் எனப் பெற்ருேனே"

எனக் கந்தர் கலி வெண்பாவில் வருதல் காணலாம். அவைகள் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | — | கந்தர் |
| 2. | நாடு | — | மீதானம் (வீட்டுலகம்) |

| | | |
|---|---|---|
| 3. நகர் | — | திருச்செந்தூர் (போக்குவரவு அல்லது அணி நகரம்) |
| 4. ஆறு | — | பேரின்ப வெள்ளப் பெருக்காறு |
| 5. மலை | — | இன்பப் பொருப்பு |
| 6. புரவி | — | ஐந்தெழுத்தைக் கூறி நடாத்தும் குரகதம் (குதிரை) |
| 7. களிறு | — | சிவஞானக் கடாக்களிறு |
| 8. முரசு | — | நவநாத மணிமுரசு |
| 9. கார் | — | போதம் (ஞானம்) புதுமலரா, நார் (அன்பு) அகத்துட் கட்டும் நறுந்தொடை (மாலை). |
| 10. ஆணை | — | புவனம் ஆக்கி அசைத்தருளும் ஆணை. |

(4) "அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு ஆறினிற் கழிப்பிய அறன் நவில் கொள்கை" என்பது **பிரமசரியம்** என்னும் நிலையினைக் குறிக்கின்றது. இவ்வரிகள் திருமுருகாற்றுப் படையில், **திருவேரகம்** பற்றிய பகுதியில், அங்கு வாழும் அந்தணர்களின் இயல்புகளைக் குறித்து விளங்குங்கால், வந்துள்ளன. இவ்வரிகளால் 'அறுநான்கு இரட்டி' (48) ஆண்டுகள் வரையில் கூடப் பிரமசரிய ஒழுக்கமானது பண்டைக் காலத்தில் ஒருசில உயர்ந்த சிறந்த மக்களாற் கடைப்பிடிக்கப் பெற்றமை புலனாகிறது.

இங்ஙனம் பிரமசரிய நிலைக்கு 48 ஆண்டுகள் வரையறுத்தமை எற்றுக்கு? என்பது நமக்குப் புலனாகவில்லை. ஆயினும் நூல்களின் மூலமாக அன்றி வாய்மொழி (Oral recital) மூலமாகவே நடைபெற்று வழங்கி வந்த வேதப் பாடல்களுள், ஒரு வேதத்தினை நன்கினிது ஓதி முழுவதும் பயின்று மனனம் செய்துகொள்ள வல்லனாதற்கு 12 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதங்களையும் பயின்று புலமை நிறைவும் வித்தகமும் பெறுவதற்கு 48 ஆண்டுகள் ஆகும் என்றும்; அங்ஙனம் நான்கு வேதமும் பயின்ற நல்லறிஞரே '**சதுர்வேதிகள்**' எனப்படுவர் என்றும்; அத்தகையவர்களுக்கு வழங்கப் படுவனவே 'சதுர்வேதி மங்கலங்கள்' என்றும் ஒரு வகையில் நாம் கொள்ளலாம்.

இனி, வேதநூல் ஆராய்ச்சிகளில் மிகவும் தலைசிறந்த பேரறிஞராக விளங்கியிருந்த சுவாமி **தயானந்தர்** அவர்கள், "உத்தமம் ஆகிய பிரமசரியம் என்பது 48 வயது வரையிற் கடைப்பிடிக்கப்படுவது. வேதத்தில் வரும் **ஜகதீ** என்னும் செய்யுள் வகையானது 48 அசைகளைக் கொண்டுள்ளமை இதனை யுணர்த்தும், எவன் ஒருவன் 48 வயதுவரை பிரமசரிய ஒழுக்கம் கடைப்பிடிக்கின்றானோ அவன் ஆற்றல் மிகவும் வாய்ந்து, எல்லாக் கலைஞானத் திறங்களையும் கற்றுணரும் வல்லமை பெறுவான்"* என்று குறிப்பிட்டிருத்தலும் ஈண்டு நாம் அறிந்து மகிழ்ந்து பயன் கொளத் தக்கது.

---

* "The highest class of Brahmacharya, third in number, is upto the age of forty-eight. Just as the Jagati metre consists of forty eight syllables, similarly whoever keeps celibacy upto the age of forty-eight comes to possess his vital airs quite capable of acquiring all knowledge" —Swami Dayanandar.

(5) கல்வெட்டுக்களில் 'பன்மாகேசுவர ரட்சை' 'ஸ்ரீவைஷ்ணவ ரட்சை' என வரும் காப்புரைகளே யன்றி, ஒரோருகால் 'மகாசபையார் ஆணை' 'திருவாணை' 'திருவிரையாக்கலி' என்னும் தொடர்களும் பல இடங்களில் வருதலைக் காண்கின்றோம். ஊர் மக்கள் பலரும் திரண்டு பேரவை கூடி ஆராய்ந்து, அவையின்கண் வீற்றிருக்கும் ஆளுங்கணப் பெருமக்களால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் கட்டளைகள் 'மகாசபையார் ஆணை' ஆகும். அரசன் பிறப்பிக்கும் கட்டளைகள் 'திருவாணை' அல்லது 'ஸ்ரீஆக்ஞை' எனப்படும். இறைவனே பணித்தருளிய கட்டளையாக மதித்து இன்றியமையாது போற்றித் தவறுமற் கடைப்பிடித்து ஒழுகும்படி தக்கார் எவரேனும் ஆணையிட்டுச் சொல்லி நியமிப்பது '**திருவிரையாக் கலி**' எனப் பெயர் பெறும். முன் இரண்டினை மறுத்துத் தவறினும் ஓரளவு கழுவாயும் மன்னிப்பும் உண்டு. 'திருவிரையாக்கலி' என்று இறைவனின் மேல் இட்டுக் கூறிய ஆணையினை மறுத்தவர்களுக்கு மன்னிப்பே இல்லை. அவர்களுக்குக் கொலைத் தண்டனையே உரிய தண்டனையாகும். 'திருவிரையாக்கலி' என்று இறைவனின் பெயரால் மகாசபையினரோ அல்லது வேறு தக்கவர் எவரேனுமோ பிறப்பிக்கும் கட்டளைகளை மீறித் தவறு செய்தவர்களை 'ஸ்ரீமாகேசுவரர்கள்' விசாரித்துத் தண்டிப்பார்கள். சமுதாய நடைமுறை பற்றிய இச்செய்திகள் கல்வெட்டுக்களாற் புலனாகின்றன. இதனை "**நாதன்றன் வல்லாணை**" எனக் குறிப்பிடுவர் சேக்கிழார் சுவாமிகள்.

இறைவனின் ஆணை அல்லது இறைவனின் பெயரை முன்னிட்டுத் தக்கவர்களாற் பிறப்பிக்கப்படும் கட்டளையைக் குறிக்கும் 'திருவிரையாக்கலி' என்னும் அரிய சொற்றொடர், பட்டினத்தார்–நம்பியாண்டார் நம்பிகள்–சேக்கிழார்–கச்சியப்ப முனிவர் ஆகியோர் பாடல்களிற் பயின்று அமைந்து வந்திருக்கின்றன. அவை வருமாறு :—

"தாதவிழ் கொன்றைத் தாரும், ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும், போரில்
தழங்கும் தமருகப் பறையும், முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும், பொய்தீர்
விரையாக் கலி எனும் ஆணையும், நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும், பண்ணியல்
வைதிகப் புரவியும், வான நாடும்,
மையறு கனக மேருமால் வரையும், ..........
தில்லை ஆகிய தொல்பெரும் பதியும்என்று
ஒருபதி னாயிரம் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடி ..............................."

—கோயில் நான்மணிமாலை, பட்டினத்தடிகள்

பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்றம் அறுக்கும் தொழிற்றிரு நாட்டியத்தான் குடிக்கோன்
குற்றம் அறுக்கும்நம் கோட்புலி நாவற் குரிசில் அருள்
பெற்ற அருட்கடல் என்று உலகேத்தும் பெருந்தகையே

—திருத்தொண்டர் திருவந்தாதி, நம்பியாண்டார் நம்பிகள்.

" தந்தமர்கள் ஆயினர் தமக்கெல்லாம் தனித்தனியே
எந்தையார்க்கு அமுதுபடிக்கு ஏற்றியநெல் இவையழிக்கச்
சிந்தையால் தான்நினைவார் திருவிரையாக்கலி என்று
வந்தனையால் உரைத்தகன்றார் மன்னவன்மாற் றார்முனைமேல் "

—கோட்புலிநாயனார் புராணம், சேக்கிழார்.

**(6)** நவக்கிரகங்களுள் தனித்தனியே ஒவ்வொன்றுக்கும் சிறப்பாக உரிய தலங்கள் வருமாறு :—இவை சிறுபான்மை வேறுபடவும் கூறப்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | — | சூரியனார் கோயில், ஆடுதுறை. |
| 2. | சந்திரன் | — | திருப்பதி |
| 3. | செவ்வாய் | — | வேளூர், பழநி |
| 4. | புதன் | — | திருவெண்காடு, மதுரை |
| 5. | வியாழன் | — | ஆலங்குடி, சுவாமிமலை, திருச்செந்தூர் |
| 6. | சுக்கிரன் | — | ஸ்ரீரங்கம் |
| 7. | சனி | — | திருநள்ளாறு |
| 8. | இராகு | — | திருக்காளத்தி |
| 9. | கேது | — | திருக்கேதீச்சுரம் |

**(7)** ஒரு சிறந்த வைஷ்ணவருக்கு உரிய குலம் முதலிய விவரங்கள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. | குலம் | — | பாகவத குலம் |
| 2. | கோத்திரம் | — | இராமாநுஜ கோத்திரம் |
| 3. | சூத்திரம் | — | சடகோப சூத்திரம் |
| 4. | வேதம் | — | உபயவேதம் |
| 5. | புருஷன் | — | புருஷோத்தமன் ஆகிய திருமால் |
| 6. | தந்தை தாயர் | — | ஸ்ரீமந் நாராயணனே |
| 7. | பந்துக்கள் | — | பாகவதர்கள் |
| 8. | தொழில் | — | பாகவத கைங்கர்யம் |
| 9. | பயன் | — | கைங்கர்யமே பயன் |
| 10. | பிரார்த்தனை | — | கைங்கர்யம் செய்யும்பேறு பெற வேண்டும் என்பதே பிரார்த்தனை |

**(8)** இராமாநுஜர்க்கு ஆசார்யர்களாக விளங்கியவர்கள் ஐந்து பேர் அவர்களைப் "பஞ்ச ஆசார்யர்கள்" என்பர். அவர்களின் திருப்பெயர்களும், அவர்கள்பால் இராமாநுஜர் கேட்டுத் தெளிந்து கொண்ட பொருள்களும், அவர்கள் இராமாநுஜர்க்கு வழங்கியருளிய திருப் பெயர்களும் முறையே வருமாறு :—

1. திருமாலையாண்டான் : திவ்வியப் பிரபந்த வியாக்கியானம், (சடகோபன் பொன்னடி.)

2. திருக்கோட்டியூர் நம்பி : திருமந்திர அர்த்தம், சரமச்லோக அர்த்தம், (எம்பெருமானார்.)

3. திருவரங்கப் பெருமாள் அரையர்: பெரிய திருமொழிமூலம், திருவாய் மொழி மூலம், கண்ணிநுண் சிறுத் தாம்பு வியாக்கியானம்—த்வயார்த்தம் —இலக்ஷ்மண முனி (இளையாழ்வார்)

4. பெரிய திருமலை நம்பி: ஸ்ரீராமாயண வியாக்கியானம், (கோயில் அண்ணன்).

5. பெரிய நம்பி: திருமந்திரம் த்வய சரமச்லோகங்களும் உள்படப் பஞ்ச சம்ஸ்காரம் செய்து, முதலாயிரம் இயற்பா என்ற ஈராயிரம் (இராமாநுஜர்).

திருமாலை யாண்டான், திருக்கோட்டி நம்பி, திருவரங்கப்
பெருமாள் அரையர், திருமலை நம்பி, பெரியநம்பி,
அருமால் கழல்சேர் எதிராசர் தாளிற்சிங் காதன ராய்
வரும்ஆரி யர்கள் எழுபத்து நால்வர்என் வான்துணையே

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், திருவரங்கத் தந்தாதி, 4.

**(9)** திருமாலின் திருவவதாரங்கள் பத்து என்பதே பொதுவாகப் பலரும் அறிந்திருப்பது. அவை முறையே, மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரதராமன், பலராமன், கிருஷ்ணன், கற்கி என்பனவாகும்.

மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க் கற்கியும்
ஆனான் தன்னைக் கண்ணபுரத்து அடியன் கலியன் ஒலிசெய்த
தேனார் இன்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே

எனவரும் திருமங்கையாழ்வார் பாசுரத்தால் இதனைத் தெளியலாம். 'தசாவதாரங்களின் சிறப்பு' எனவரும் பதிகத்தில் (பெரிய திருமொழி 11. 4) இவையே சிறிது வேறுபட்டு வருகின்றன. அதன்கண் வாமனாவதாரத்தோடு திரிவிக்கிரமாவதாரமும் சேர்த்து இரண்டாகக் கொள்ளப் பெற்றுள்ளது. கிருஷ்ணாவதாரத்திற்குப் பின்னர் இனி நிகழ இருக்கும் கற்கி அவதாரம் குறிக்கப் பெறாமல், அதற்குப் பதிலாக 'அன்ன அவதாரம்' என்பதொன்று குறிக்கப் பெற்றுள்ளது. பலராமர்க்குப் பதிலாகப் **புத்தர்** ஓர் அவதாரமாகவும் கொள்ளப் படுவதுண்டு.

'யதீந்திர மத தீபிகை' என்னும் நூலில், அதனை இயற்றிய ஸ்ரீநிவாச தாசர் என்பவர், திருமாலின் திருவவதாரங்கள் 36 என்று பின் வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவைகள் முறையே வருமாறு:—

1. பத்மநாபர்
2. துருவன்
3. அநந்தன்
4. சாக்த்யாத்மா
5. மதுசூதனன்
6. கபிலன்
7. விசுவரூபன்
8. விஹாங்கமன்
9. பாதல வுக்தரன்
10. தர்மன்
11. வாகீஸ்வரன்
12. ஏகாம்போநிதிசாயி
13. கமடேஸ்வரர்
14. வராகர்
15. நரசிம்மர்
16. பியூஷ ஹரணர்
17. ஸ்ரீபதி
18. காண்டாத்மா
19. ராகுஜித்
20. காலநேமிக்னா
21. பாரிஜாதஹரா
22. லோகநாபா
23. சாந்தாத்மா
24. தத்தாத்ரேயர்

25. நியக்ரோதசாயி
26. ஏகசிருங்கதாணு
27. திரிவிக்கிரமன்
28. நரன்
29. நாராயணன்
30. ஹரி
31. கிருஷ்ணன்
32. பரசுராமன்
33. இராமன்
34. வேதவித்
35. கல்கி
36. பாதாள சாயிதர்.

**(10)** கம்பர் வாழ்ந்திருந்து, இராமாயணம் இயற்றிருளிய காலம் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பலவகைக் கருத்துக்களைக் கூறுவர்.

"எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே"

எனவரும் ஒரு தனியன் செய்யுளினால், கி. பி. 884-ஆம் ஆண்டில் கம்பர் தமது நூலை அரங்கேற்றினார் எனத் தெரிகின்றது. ஆனால் வேறு பிற வரலாற்றுச் சூழ்நிலைகளைக் கருதும்போது, இது பொருத்தமாகத் தோன்றவில்லை.

"ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினார்
காரார் காகுத்தன் கதை"

எனவரும் செய்யுள் ஒன்றினால், கி. பி. 1178-ஆம் ஆண்டில் கம்பர் தமது காவியத்தை இயற்றி முடித்தார் என்று தெரிகின்றது.

மேற்குறித்த செய்யுளில் "எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல்" என்பதற்கு 'ஆயிரத்தின் மேலே எண்ணப் பெற்ற' எனப் பொருள் கொண்டு, சகாப்தம் 1107 அதாவது கி. பி. 1185 என்று கணக்கிட்டால், இவ்விரு செய்யுட்களின் காலக் கணக்கும் பொருந்தி வருகின்றது.


இனி இக்காலக் கணக்கு மிகவும் பொருத்தம் வாய்ந்ததே என்பதனையுணர்த்தும் அகச் சான்றாகப் பின்வரும் கம்பராமாயணப் பாடல் அமைந்து விளங்குகிறது.

"வன்னி நாட்டிய பொன்மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னி நாள் திருவைச் சேர்ந்த கண்ணனும் ஆளும் காணிச்
சென்னிநாள் தெரியல் வீரன் தியாக விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப் போனான்".

என மருத்துமலைப் படலத்தில் (58) வரும் செய்யுளில் அமைந்துள்ள 'தியாக விநோதன்' என்னும் தொடர், மூன்றாம் குலோத்துங்க சோழன் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். அச்சோழ மன்னன் கி. பி. 1178 முதல் 1216 வரை அரசாட்சி செலுத்தினான் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மேலே குறித்த இரு செய்யுள்களும் கூறும் காலக் கணக்கினை, இக் கம்பராமாயணப் பாடல் வலியுறுத்திச் சான்று பகர்கின்றது. எனவே, கம்பர் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்திருந்து, தமது கம்பராமாயணம் என்னும் கவின்மிகு நூலை இயற்றினார் எனத் துணிதல் பொருந்தும்.

—ஆசிரியர்

MADRAS



திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மன்

அன்பளிப்பு :
தருமையாதீனம்

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS

# குடம்பையும் புள்ளும்

**முன்னுரை :**

செந்நாப் புலமைத் திருவள்ளுவர் பெருமான் தலைசிறந்த கவிஞர்; துறைபோய மெய்யுணர்வின் பேரறிஞர்; பல் கலைக் குரிசில். ஒருவர் சிறந்த கவிஞரா எனக் காண்பதற்கு எண்ணற்ற உரைகற்கள் உண்டு. "எவனும் ஆழ்ந்த மெய்யுணர்வாளனு யிராமல், ஒருபோதும் ஒருயர்ந்த கவிஞனாய் இருந்ததில்லை"* என்ற ஓர் உரைகல்லினை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் படைக்கின்றார். இவ்வுரைகல்லில் தீட்டிக் காணுங்காலும், உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவரின் புலமைப் பசும்பொன்னொளி, மாற்றில் உயர்ந்தே துலங்குகின்றது,

திருக்குறளில் கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும், ஒளியும் நிழலும் போலவே ஒத்தியைந்து திகழ்கின்றன. கவிதை நலம் பிறங்குமிடத்திலே மெய்யுணர்வு மெலிந்திருப்பது, கண்ணுக்கு இனிமையும், தின்னற்குக் கசப்புமாய **பயனில்கனி** போன்றது. கவிதை நலமின்றி மெய்யுணர்வின் விளக்கம் மட்டும் இருப்பது, உடலுக்கு உரனூட்டினும் நாவிற்குச் சுவையில்லா **மருந்து** போன்றது. ஆனால், கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும் ஒருங்கே விரவித் திகழ்வதோ நாவிற்கு மட்டுமன்றி உடலுக்கும் பெருநலன் விளைக்கும் **இன்னமிழ்தம்** போன்றது! இவ்விரு நலமும் ஒருங்குறுகையால் மேனாட்டிலும் நம் நாட்டிலும் எத்தனையோ கவிஞர் பலர் திறனாய்வாளர்களின் போற்று தலைப் பெருது போயினர். ஆனால், ஆசிரியர் திருவள்ளுவரோ இவ்விரு பெருநலனும் ஒருங்கு வாய்க்கப் பெற்ற பெரும் புலவர்! அதனால்தான் அவர் பிற மொழியினராலும் புகழ்ந்து போற்றி இசைபாடப் பெறுகின்றார்.

**திருக்குறள் :**

இவ்வரும்பெரும் புலமை, திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறள் முழுமையிலும் பரவிக்கிடக்கக் காண்கின்றோம். இவ்வரும் பெறற் புலமை நலத்தின் பெற்றி தெளிய "ஒரு குழிசிச் சொன்றிக்கு ஒரு சோறு பதமாம்" என்னும் முறைமைபற்றி, ஒரே ஒரு குறள் மணியினை மட்டும் ஆராய்தலே ஈண்டைக்கு அமையும் :

> " குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு "

என்பது திருவள்ளுவரின் திருக்குறள் மணிகளுள் ஒன்று, "நிலையாமை" என்னும் தலைப்பிற் காணப்படும் மிகச் சிறந்ததொரு கருத்தோவியமாகக் கவினுற்றுத் திகழ்கின்றது.

**நிலையாமை ;**

உடம்புக்கும் உயிர்க்கும் இடையே நிலவும் தொடர்பினை இத்திருக்குறளின் வாயிலாகத் திருவள்ளுவர் இனிது விளக்கி யருள்கின்றார். ஆசிரியர் மணக்குடவர்,

> " கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற்போலும்,
> உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு "

என இத் திருக்குறட்குப் பொருள் காண்கின்றார். ஆனால், ஆசிரியர் பரிமேலழகரோ,

*"No man was ever yet a great poet, without being at the sametime a profound philosopher" —S. T. Coleridge

"முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம் பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு"

என மணக்குடவரிற் சிறிது வேறுபட்டு உரை வகுக்கின்றார். தம் உரை வேறு பாட்டிற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கமும் கூறுகின்றார்.

'இனி, 'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன் கண் அது மீண்டு புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக.''

**பரிமேலழகர்:**

இங்ஙனம் மணக்குடவர் முதலினோர் உரையினை மறுப்பது மட்டுமே யன்றி, இத்திருக்குறட்குப் பரிமேலழகர் வரைந்துள்ள சிறப்புரை பொன்னினும் மணியினும் போற்றத் தகுவதாய்ப் பொலிகின்றது. அவ்வழகிய இனிய சிறப்புரை வருமாறு:

"தனித்தொழிய என்றதனால் முன் தனியாமை பெற்றாம்; அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்; அதனால், அஃது உடம்பிற்கு உவமை யாயிற்று. அதனுள் வேற்றுமை யின்றி நின்றே பின் புகாமற் போகலின் புள் உயிர்க்கு உவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினர், பறந்து போதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவே யாகலின். 'நட்பு' என்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறாதலின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பில என்பது அறிக."

**மணக்குடவர்**

ஆசிரியர் பரிமேலழகர் இவ்வழகிய இனிய உரையினால், மணக்குடவரின் உரையினை மறுத்துரைத்துள்ளாராயினும், மணக்குடவர் அங்ஙனம் உரை வரைந்தமைக்கு உரிய காரணமும் இல்லாமற் போகவில்லை. ''குடம்பை'' என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் யாண்டும் 'முட்டை' என்னும் பொருளில் வழங்கப் படாமையினை நினைந்தே 'கூடு' என்று பொருள் கொண்டனராதல் கூடும்.

"மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியின் இழைத்த குடம்பை"
(புறம்—378)

"வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும்,
புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோற்
றினவே" (புறம்—397)

என்பன போன்ற பாடற் பகுதிகளில் 'குடம்பை' என்னும் சொற்குக் 'கூடு' என்னும் பொருளே ஆட்சியில் உள்ளது. மேலும்,

"கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—
வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு
புள்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து"

எனவரும் நாலடியார் வெண்பாவினை ஆதாரமாகக் கொண்டும், மணக்குடவர் தம் உரையினை வகுத்தனராதல் வேண்டும்.

**மணிவாசகர்;**

இனி ஆசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்னும் சொல்லுக்கு 'முட்டை' என்பது நேர்முகப் பொருளன்றாயினும், அதனைக் கொண்டமைக் குரிய காரணம்,

"காண லாம்பரமே கட்கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர்
பார்ப்பு எனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறியேன்புலன் போற்றியே"

எனவரும் அரிய திருவாசகத் திருமொழியினை நினைத்து, அதனை ஆதாரமாக

கொண்டமையே போலும்! மாணிக்க வாசகப் பெருமான் தமது திருவாசகத்துள்,

"உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்
துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக்
கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை
இரிந்தோடித்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம்
ஆடாமோ"

எனப் பிறண்டும் பறவைகளின் இயல்பு பற்றிக் குறிப்பிட்டிருத்தல் குறிக்கொளற் பாலது. அன்றியும் 'குடம்பை' என்பதன் பிறிதொரு வடிவமாகிய "குரம்பை" என்னும் சொல்லை மாணிக்கவாசகர் "கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே", "மலவன் குரம்பையை மாற்றி அம்மால் முதல் வானர்க்கப்பால் செலவன்பர்க் கோக்கும் சிவன்" என ஆங்காங்கு அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற் பாலது. எனவே, "இங்கொர் **பார்ப்பு** எனப் பாணனேன் படிற்று ஆக்கையை விட்டுனைப் பூணுமாறு அறியேன்" என வரும் மாணிக்கவாசகரின் அருமைத் திருமொழியினை ஆதாரமாகக் கொண்டே பரிமேலழகர் 'புள்' என்பதற்குப் 'பார்ப்பு' (பறவைக்குஞ்சு) எனவும் 'குடம்பை' எனபதற்கு 'முட்டை' எனவும் பொருள் கொண்டார் போலும்.

**மரபுநெறி பிறழாமை :**

பரிமேலழகரின் இச்சிறப்புரை மிகவும் பாராட்டற்குரியதே எனினும் மணக்குடவரின் உரையும் மரபு நெறி பிறழாத ஒன்று என்பது மனங்கொண்டு மகிழ்தற்குரியது. மணக்குடவரின் உரைக்கு,

"அலங்கல் அஞ்சினைக் குடம்பை
புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்எழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி அவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர் என்
உயிரே" (அகம்—113)

எனவரும் பழஞ்சங்ககாலப் பாடலின் கருத்தும் ஆக்கந் தருவதாதல் காணலாம்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்
புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் பாரே
அநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

எனவரும் ஔவையார் பாடலிலும், உடல் 'கூடு' எனவே குறிப்பிடப்பட்டுண்மை காண்க.

இங்ஙனம் குடம்பை என்னும் சொல்லுக்கு முட்டை எனவும், கூடு எனவும் அவரவர் கருத்திற்கு ஏற்றபடி இரண்டு வகையிலும் பொருள் கொள்ளுதற்குச் சான்றும் வாய்ப்பும் இருத்தலை நன்கு ஆராய்ந்தே கடைப்பிடித்தே,

"குடம்பை முட்டையும் கூடும் ஆகும்"

என இருதிறப் பொருளையுமே பின்னைய நிகண்டு நூல் தழுவிக் கொள்ளுவதாயிற்று என்பது, இங்கு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.

இன்னோரனையவை பலவும் கருதுங்கால், பண்டை யுரையாசிரியர்கள் தாம் காணும் உரை விகற்பங்களுக்கு உரிய சான்றுகள் ஏதேனும் கொண்டன்றித் தத்தம் மனஞ் சென்றவாறு உரை கூறியொழியும் இயல்பினரல்லர் என்பது நம் மனோரால் நன்கினிது தெளியப்படும்.

**சிறந்த கவிதையின் நலம் :**

இவ்வுரைத் திறங்கள் ஒருபுறம் இருப்ப, இத்திருக்குறளால் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தம் மெய்யுணர்வின் மேம்பாடும், மிகச் சிறந்த கவிதை நலமும் இனையவென்பதும் இனிதறியக் கிடக்கின்றன. குடம்பையும் புள்ளுமாகிய உவமைகள், உடம்பும் உயிருமாகிய இரண்டும் ஒன்றினை யொன்று விட்டு நீங்கும் என, அம்மட்டுமே உணர்த்த வந்துள்ளன என்று உரையாசிரியர்கள் கொண்டிருப்பதாகக் கருத இடனுளது. ஆனால் மிகச் சிறந்த கவிஞரும் மெய்யுணர்வாளருமாகிய' திருவள்ளுவர் வேறு பிற கருத்துக்களையும் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

"ஒரு சிறந்த கவிதையில் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும், செவ்விய ஆழ்ந்த பொருட் குறிப்பை உடையதாக விளங்கும். நன்கு சுருதி கூட்டி வைக்கப் பெற்ற யாழின் நரம்பினைக் கலைஞன் ஒருவன் தன் மெல்லிய விரல்களால் தைவந்து திறம்பட மீட்டி விடுப்பின் அதனினின்று அலையலையாக இனிய நாதம் எழுந்திசைப்பது போன்று, ஓர் உயர்ந்த கவிதையின் ஒவ்வொரு சொல்லும் அறிஞர்கள் ஆராயுந்தொறும் புதிய புதிய நுண்பொருட் குறிப்புக்களை யுணர்த்தி நிற்கும்." (1)

இங்ஙனம், நுண்ணிய ஆழ்ந்த பொருட் குறிப்புக்களை எண்ணி எண்ணியுணருந் தோறும் புலப்படுமாறு தோற்றிக் கொண்டு நிற்றலே, ஒரு நல்ல கவிதைக் குரிய சிறப்பான இயல்பாகும். "பளபளப்பு மிக்க வண்ணப் பட்டாடையினைப் போன்றது கவிதை. அவரவர்கள் தத்தம் எண்ணத்திற்குப் பிடித்த வண்ணங்களை அதனினின்று எடுத்துக் கொள்ளலாம்." (2)

"நல்ல கவிதைகள் என்பவை அவரவர்கள் தத்தம் ஆற்றலுக்கும் இயல்புக்கும் மனப்பான்மைக்கும் ஏற்றவகையிற் பொருள் கொள்ளும் படி, விரிந்து பரந்து விளங்கும்." (3)

---

(1) "In poetry, each word reverberates like the note of a well-tuned **lyre**, and always leaves behind it a multitude of vibrations." —Joubert, Pensees.

(2) "Poetry is like **shot-silk** with many glancing colours. Every reader must find his own interpretations according to his ability and according to his sympathy with the poet." —Alfred Tennyson.

(3) "The business of words in prose is primarily to state; in poetry, not only to state, but also (and sometimes primarily) **to suggest.**"
—John Livingston Lowes.

கடலின் கண் மூழ்கி ஆழமாகச் சென்று முத்துக் குளிப்பவர்கள் முத்தெடுப்பது போல, அழகிய இனிய கவிதையாகிய கடலில், சிறந்த அறிஞர்களாகிய முத்துக் குளிப்பவர்கள், தம் நுண்மாண் நுழைபுலனால் ஆழ்ந்து நுணுகிச் சென்று பல அரும் பொருட் குறிப்புக்கள் ஆகிய முத்துக்களைக் கண்டெடுத்து, உலகுக்கு விரித்துரைத்து விளக்குவார்கள்.

"தாழ்ந்த நெடுநீர்க் கடலாழம்
சார்ந்து தடவி மிகமுயன்று
வீழ்ந்து தேடி நுளையர்குழாம்
விளையும் மணிகள் கொணர்தலைப்போல்,
ஆழ்ந்து பெருநூல் இடைக்கிடந்த
அரிய பொருள்கள் பலவற்றை
வாழ்ந்த புலமைப் பேரறிஞர்
வகுத்து விளக்கி மகிழ்விப்பர்!
—தழுவற் செய்யுள், ஆசிரியர்.

அதற்கு ஏற்ப இத்திருக்குறள் நாம் நீள நினைந்து எண்ணுந்தோறும், பல அரிய நுண்ணிய கருத்துக்களைப் புலப்படுத்திக் கொண்டு பொலிவுற்றுத் திகழ்கின்றது.

## மெய்யுணர்வுக் கருத்து:

பறவைகள் கூடு கட்டும் இயல்பினை நாம் ஊன்றிப் பார்ப்பதில்லை. பறவைகள் தொடக்க முதலே கூடுகட்டி வாழ்வதில்லை. தத்தமக்குரிய இரை தேடியுண்டு மரக்கிளைகளில் வைகிக் கவலையின்றித் தாம் தாம் வேண்டும் இடங்களில் திரிந்து பறந்து பொழுது கழிப்பதே பறவைகளின் இயற்கை. ஆயினும் சூல் கொண்டு முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் நிலை நேருங் காலத்தில் மட்டுந்தான், பறவைகள் கூடுகட்டி வாழத் தலைப்படும். இவ்வியல்பு

"சூன்முதிர் துள்ளுநடைப் பெடைக்
கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்
குதர்செம்மல் ஊரன்"

என மணிவாசகர் அருளிய திருக்கோவை யார் செய்யுளாலும்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறு வெண்பூக் கொழுதும்......"

எனவரும் குறுந்தொகை (85)ச் செய்யுளாலும் உணரப்படும். கூடுகட்டிய பறவை அதன்கண் நெடுநாள் தங்குவதில்லை. முட்டையிட்டு அடைகிடந்து குஞ்சு பொரித்து, அக்குஞ்சுகளை வளர்த்த பின்னர் அக்குஞ்சுகளையும் போக்கித் தானும் அக்கூட்டினை விட்டுப் பறந்து போய்விடும்.

ஆணவமல இருளின்கண் அறிவு மயங்கித் திரிதரும் உயிர் ஆகிய பறவையானது, இருவினைப் போகம் நுகருதற் பொருட்டு இடையே வேண்டப்படும் உடம்பு ஆகிய கூட்டில், கருவுயிர்த்தல் ஆகிய வினைப் பரிபாகம் எய்தும் அளவும் வைகியிருந்து, பின்வினைக்கழிவின்கண் விட்டுப் பிரிந்தொழியும் என்னும் மெய்யுணர்வுக் கருத்தும் பிறவும், இத் திருக்குறளில் அமைந்து திகழ்கின்றன. "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" எனவரும் பட்டினத்தடிகள் திருமொழியும் ஈண்டுச் சிந்தித்தற் குரியது.

**முடிவுரை :**

இன்னோரனைய அரும்பெருங் கருத்துக்கள் பலவும் அமைய, இவ்வழகிய திருக்குறள் மணியினைச் செவ்விதின் அருளிச் செய்த ஆசிரியர் திருவள்ளுவரின் அளப்பரிய பெருமாட்சிமையை யாம் என் என்போம்! "கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?" ★



திருக்கழுக்குன்றம் தாழக்கோயில் தோற்றம்.

# சைவ சித்தாந்தம்

## உயிரின் இயல்பு (ஆன்ம இலக்கணம்)

**முன்னுரை :**

இந்நாளில் அறிவியல் மிக விரைவாகப் பெரிதும்வளர்ந்து வருகின்றது. பெரும்பாலான மக்களிடையே கல்வியறிவும் பரவிப் பெருகி வருகின்றது. இங்கிலேயில் மக்கள் தம் அறிவின் துணைகொண்டு எத்தனையோ பலப்பல புதுப் பொருள்களை அறிந்தும், ஆராய்ந்தும், கண்டுபிடித்தும் வருகின்றனர். இவையனைத்தும் புறமுகமாக (Objective) நிகழ்கின்றனவே யன்றி, அகமுகமாக (Subjective) ஏதும் நிகழவில்லை. அதன் காரணமாக எவ்வெவற்றையோ அறிந்துகொள்ள முயன்று வரும் மனிதன், "நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்?" என்று தனக்குத்தானே வினவவும், அதற்குரிய விடையினைக் கண்டறிந்து பயன் பெறவும் முயலவில்லை. "ஒருவன் உலகத்தை யெல்லாம் உரிமையாகப் பெற்றாலும், தன் உயிரை இழப்பானேல், அவன் அடையக்கூடிய நன்மை யாது?" (1) ஒன்றும் இல்லை அன்றோ!

மனிதன் தன்னைப் பற்றியும், தன் உயிரைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். "உன்னை நீ உணர்ந்துகொள்" ('Know-Thyself') என்ற உபதேசம் எக்காலத்துக்கும் எவருக்கும் ஏற்றதொன்றாகும். பிற எல்லாப் பொருள்களையும் அறிந்துகொள்ள முயலும் மனிதன், முதற்கண் தன்னைப் பற்றி ஓரளவாதல் ஆராய்ந்துணர்ந்துகொள்ளுதல் மிகமிகமுதன்மையானது. பேரறிஞர் **அலெக்ஸிஸ் காரெல்** (Dr. Alexis Carrel) தம்முடைய நூல் ஒன்றில், இக்கருத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். (2)

இவ்வாறே **சர். ஜான் டேவிஸ்** என்னும் பேரறிஞரும், "நாம் உலகின் எல்லாப் பகுதிகளையும் அறிந்துகொள்ளுகின்றோம். வெப்ப மண்டலங்களைக் கடக்கின்றோம்: குளிர்ந்த துருவ மண்டலங்களுக்கும் சென்று காண்கின்றோம்; ஆனால் நம் வீட்டுக்குள்ளாகத் திரும்பும்பொழுது நம்மை நாமே அறிந்துகொள்ளாமலும், நம்முடைய ஆன்மாவினையே நாம் அறிமுகம் செய்துகொள்ளப் பெறுதவர்களாகவும் இருக்கின்றோம். இஃது எவ்வளவு இரங்கத் தக்கது!"—என்று வருந்துகின்றார். (3)

நம் நாட்டில் ஏதும் கல்லாத சிறிய குழந்தைகள் கூட, உடல்வேறு—உயிர் வேறு – உளம்வேறு என்பன போன்ற பல தத்துவ நாலுண்மைகளை இயல்பாக உணர்ந்திருக்கின்றன. வழிவழியாக எத்தனையோ பல நூற்றுண்டுகளாக, நம் இந்திய நாட்டுச் சான்றோர்கள் கண்டறிந்து உணர்த்தியருளிய தத்துவ நாலுண்மைகள், நம் நாட்டுச் சிறு குழந்தைகளின் உள்ளத்திலும் கூட இயல்பாக ஆழ்ந்து படிந்து, அவற்றின் குருதியிலும் கூடக் கலந்து ஒன்றி இயைந்துவிட்டிருக்

---

(1) " What is a man profited, if he shall gain the whole world, and lose his own soul "
—**St. Matthew; 16, 26**

(2) **Man, the Unknown**
—Dr. Alexis Carrel.

(3) " We that acquaint ourselves with every Zone
And pass both Tropics and behold the Poles,
When we come home are to ourselves unknown,
And unacquainted still with **our own Souls.**"
—*Sir John Davies.*

கின்றன. அதனால் நம் நாட்டுச் சிறுவர்கள் தாமும் **உடல். உயிர்-கன்மம்-மறுபிறப்பு—ஊழ்வினை** என்பன பற்றி ஓரளவேனும் தெளிவாக அறிந்துள்ளார்கள்,

ஆனால் இவ்வெளிய உண்மைகள், பிற நாடுகளிற் பேரறிஞர்கள் என்று பெயரும் புகழும் பெற்று விளங்குபவர்களுக்கும், ஒருசிறிதேனும் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, உலகப்புகழ் பெற்றவர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர், தாம் **இறையிலார்** (Atheists) களுள் ஒருவர் அன்றெனினும் **தெளிவிலார்** (Agnostics)களுள் ஒருவரே எனறும், தமக்கு உடல்-உயிர் என்பன குறித்து ஐயப்பாடுகள் உண்டு என்றும், சித்து (Mind) சடம் (Matter) எனப்படும் பொருள்கள் உண்மையிலேயே இருப்பனவாகத் தாம் கருதவில்லை என்றும் குறிப்பிடுகின்றார் 4).

இதனை ஒரு சிறிது ஊன்றிக் கருதியுணர்ந்தால் நாம் நம் நாட்டுத் தத்துவ ஞானிகளின் தகுதியும் சிறப்பும் எத்தகையன என்றுணரலாம். பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்றவர்களே ஐயுறவு கொள்ளும் நிலையிலுள்ள உயிரின் இயல்பு (ஆன்ம இலக்கணம்) குறித்து நம் நாட்டுத் தத்துவ ஞானிகள் பலரும் ஆராய்ந்து கண்ட அரும்பெருங் கொள்கைகளை, இயன்றவரை இங்கு ஒரு சிறிது மிகச் சுருக்கமாகக் (Shorn of all technical intricacies) காண்போம்.

**பல்வேறு கொள்கைகள்:**

பழைய காலத்தில்—முதன் முதலில்—மனிதர்கள் அறிவு பெற்றுச் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், சிந்தித்துப் பற்பல முடிவுகளுக்கு வந்தனர். அவரவர்கள் தத்தம் அறிவாராய்ச்சிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு கொள்கையினைக் கூறினர். அங்ஙனம் மக்கள் பலரும் சிந்திக்கத் தொடங்கி, ஆராய்ந்து கண்டஅரிய பல வெவ்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள், நம் நாட்டுச் சமய தத்துவ நூல்களிற் காணப்படுகின்றன. மனித சிந்தனையின் வளர்ச்சியும் அறிவாராய்ச்சித் திறனின் செழிப்பும், எங்ஙனம் படிப்படியே ஓங்கி யுயர்ந்து பெருகிச் சிறந்திருக்கின்றன என்பதனை, உயிரின் இயல்புபற்றி விளக்கும் பல்வேறு கொள்கைகளைப் பற்றிய குறிப்புக்கள் நமக்கு நன்கினிது உணர்த்துகின்றன. அவைகளைச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் காண்போம்.

(1) ஆன்மா என்பதொரு பொருளில்லை; அது வெறும் சூனியமே என்று கூறுவோர், சூனியான்ம வாதிகள்.

(2) தேகமே ஆன்மா; தேகத்தின் வேறாக ஆன்மா என்பதொன்று காணப்படவில்லை என்போர், தேகான்மவாதிகள்.

(3) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களே ஆன்மா என்பர், இந்திரியான்ம வாதிகள்

(4) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களே ஆன்மா என்பர், அந்தக் கரணான்மவாதிகள்.

(5) புரியட்ட தேகம் அல்லது நுண்ணுடல் என்னும் சூக்கும தேகமே ஆன்மா என்று சொல்வோர், சூக்கும தேகான்ம வாதிகள்.

(6) நம்மால் உள்ளே இழுத்தும் வெளியே விடுத்தும் உயிர்க்கப் பெறும் பிராணவாயுவே ஆன்மா என்று கூறுவோர் பிராணான்மவாதிகள்.

(7) எல்லாப் பொருள்களையும் இயக்கி நின்று தொழிற்படுத்தும் கடவுள் ஆகிய பிரமம்தான் ஆன்மா என்று புகல்வர், பிரமான்ம வாதிகள்.

(4) "Many Agnostics (including myself) are quite as doubtful of the **body** as they are of the **soul**, but this is a long story taking into difficult metaphysics. **Mind** and **matter** alike, I should say, are only convenient symbols in discourse, **not actually existing things.........**"

—Dr. Bertrand Russel, **What Is An Agnostic ?**

(8) அற்றன்று; தேகம் இந்திரியம் அந்தக் கரணம் சூக்கும தேகம் பிராணவாயு என்னும் இவையாவும் கலந்து நின்ற திரட்சியாகிய சமூகம்தான் ஆன்மா என உரைப்பர், சமூகான்ம வாதிகள்.

(9) ஆன்மாவானது பிரமப் பொருளின் பரிணாமமாகத் தோன்றி, அறிவு இச்சை செயல்களை அடைந்து, தீயும்சூடும்போலப் பேதா பேதம் ஆகிய குணகுணித் தன்மைகளை யுற்றுப் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்பர், பரிணாமவாதிகள்.

(10) ஆன்மாவானது குணகுணித் தன்மை இல்லாமல், முழுவதும் அறிவு மாத்திரையாய் நிற்கும் என்பர், சாங்கிய நூலார்.

(11) ஆன்மா என்பது அருவம் அன்று; உருவப் பொருளே என்பர், பௌராணிக மதத்தினர்.

(12) ஆன்மா உருவப் பொருள் அன்று: ஒருவாற்றாற் காணப்படுதலும் காணப் படாமையும் உடைய அருவுருவப் பொருள் எனக் கட்டுரைப்பர், கவுள மதத்தினர்.

(13) ஆன்மா என்பது ஆகாசம் போல அருவமாய் அவிகாரமாய் இருக்கும் என்று பகர்வர், பாதஞ்சலர்.

(14) ஆன்மா எனப்படுவது சடப் பொருளாய் நின்று அறியும் தன்மை பெறும் என இயம்புவர், வைசேடிகர்.

(15) ஆன்மா சித்தும் அசித்துமாய்ச் சித்து-அசித்து என நிற்கும் எனப் புகல்வர் ஒரு சிலர்.

(16) ஆன்மா சித்துப் பொருள்தான்; சடப்பொருள்களுள் ஒன்றன்று என மொழிவர், பட்டாசாரியர்.

(17) ஆன்மாவானது உடம்பினுள்ளே பரமாணு அளவிற்றாய் இருக்கும் என உரைப்பர், பாஞ்சராத்திரிகள்.

(18) உடம்பினுள்ளே, புல்நுனியிற் பனித்துளிபோல ஏக தேசமாய் இதயத் தானத்தில் நின்று, தன்அறிவு விளக்கொளியைப்போல எங்கணும் வியாபித்துப் பரவியிருப்பது ஆன்மா என்பர், மிருதி நூலார்.

(19) உடம்பு முழுவதும் நிறைந்து, சிறிய உடம்பிற் சிறியதாயும், பெரிய உடம்பிற் பெரியதாயும், விளங்குவது ஆன்மா என விளம்புவர், சமணர்கள்,

(20) இறைவனைப் போலவே எங்கணும் வியாபித்துப் பரவி நின்று அறிவது ஆன்மா என அறிவுறுப்பர், ஐக்கியவாதக் கொள்கையினர்.

**சைவசித்தாந்தம் :**

இங்ஙனம் உயிரின் இயல்பு பற்றிப் பலரும் பலவகையிற் கூறும் கொள்கைகளையெல்லாம் சைவசித்தாந்தம் பொறுமையுடன் கேட்டுக் கொள்ளுகின்றது. அவைகளுக்கு உரிய மதிப்புக் கொடுத்து, நன்கினிது சிந்தித்துப் பார்த்து ஆராய்கின்றது. அவைகள் எங்ஙனம் பொருந்தாதன என்று காரணம் காட்டி மறுக்கின்றது. பின்னர் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, சிறந்த புதிய பொருத்தமான கொள்கையினையும் அறிவுநெறிக்கு இணங்க ஆராய்ந்துகாட்டி நிறுவுகின்றது. இதுதான் சைவ சித்தாந்தம் என்னும் தனிப் பெருங் கொள்கையின் சிறப்பியல்பு ஆகும்,

இச்சிறப்பியல்பினையே "புறச் சமயத்தவர்க்கு இருளாய்—அகச்சமயத்து ஒளியாய்—அளவைக்கு அளவாகி—பெருநூல் சொன்ன அறத்தினுள் விளைவதாய்—சிறப்பினதாய்—**வேதாந்தத் தெளிவாம்** சைவ சித்தாந்தத் திறன்" எனவும்; "நிலவு உலகாயதம் ஆதி நிகழ் சிவாத்துவிதம் அந்தமாகக் குலவுநர் அளவளாவாக் கொள்கைய தாகி—வேதத் தலைதரு பொருளாய்—இன்பாய்—தாவில் சற்காரியத்தாய்—**மலைவறும் உணர்வு**" எனவும்; சான்றோர்கள் வியந்து போற்றியருளினர்.

இத்தகைய சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெருந் தத்துவம் 'ஆன்ம இலக்கணம்' பற்றி மேற்குறித்த கொள்கையாளர்கள் பலரும் கூறிய கருத்துக்களை எங்ஙனம் ஆராய்ந்துமறுத்துரைக்கின்றது என்பதனை ஈண்டுச் சிறிதுகாண்போம்.

**பல கொள்கைகளைப்பற்றிய ஆராய்ச்சி:**

(1) ஆன்மா என்பதொன்று இல்லை எனக் கூறுபவரும், அங்ஙனம் வாளா கூறுதல் அமையாது. உடல் பொறி விடயம் அனைத்தினையும் இஃது ஆன்மாவன்று இஃது ஆன்மாவன்று என ஒரோவொன்றாக ஆராய்ந்து கண்டு கழித்த பின்னரே, ஆன்மா என்பது சூனியம் என்பர், ஆனால் இங்ஙனம் உடல் பொறி விடயம் அனைத்தினையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்து, அன்று அன்று எனக் கழித்து முடிவு செய்யுங்கால், அங்ஙனம் முடிவு செய்து நிற்பதாகிய அறிவு ஒன்று இருத்தலின், அதுவே ஆன்மா எனக் கொள்ளுதல் சாலும். அவ்வறிவுதானும் சூனியமே எனின், அஃது **'என்னை ஈன்றாள் மலடி'** என்பதோடு ஒக்கும். (Self-Contradictory). ஆதலின் **சூனியான்ம வாதிகள்** கூற்றுப் பொருந்தாது.

(2) உலக வழக்கில் யான் வளர்ந்தேன்—யான் மெலிந்தேன்—யான் மனிதன்—யான் மறையவன் என உடம்பின் பண்புகளை உபசாரம் பற்றி உயிருக்கு ஏற்றி வழங்கினும், யான் உடம்பு—யான்கை—யான்கால் என்று உடம்பினை அவ்வாறு வழங்குவார் இலர். எனதுடல்—எனதுகை—எனது கால் என வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்கின்றோம். எனவே உடம்பின் வேறாக உயிர் என்பதொரு பொருள் உண்டு என்பது புலனாகும். ஆதலின் **தேகான்மவாதிகள்** கூற்றுப்பொருந்தாது.

(3) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுள், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையே அறிய வல்லதாக உள்ளது. ஒரு பொறி அறிவதனை மற்றொரு பொறி அறிய முடிவதில்லை. எனவே, ஐம்பொறிகளையும் தனித்தனியே இயக்கி, அவ்வைம் பொறிகளாலும் ஐம்புலன்களையும் அறிந்து பயன் கொள்வதாகிய ஆன்மா, இவற்றின் வேறாக உண்டு என்று தெளியப்படுதலின்' **இந்திரியான்ம வாதிகள்** கருத்தும் ஏற்புடைத்தன்று.

(4) ஐம்பொறிகளும் ஒடுங்கின கனவு நிலையில் இயங்கும் சூக்கும தேகமே ஆன்மாவாயின், கனவுகண்ட சூக்கும வுடம்பே நனவின்கண் அதனை அறியுங்கால், தான் கண்டவாறே தெளிவுறஅறிதல்வேண்டும். அவ்வாறின்றி மயங்கி யறிதலையே காண்கின்றோமாதலின், நனவின் இயங்கும் தூலதேகமும் கனவு காணும் சூக்குமதேகமும் ஆகிய இரண்டிற்கும் வேறுபட்டு, ஆன்மா என்பதொன்றுண்மை தெளியலாம். இவ்வாற்றாற் **சூக்கும தேகான்ம வாதிகள்** சொல்லுவதும் செவ்விதன்று

(5) உறக்கம் விழிப்பு என்னும் இருதிற நிலைகளிலும் பிராணவாயு ஒரு தன்மையாகவே இயங்கிக் கொண்டு நிற்கின்றது; ஆயினும் உடம்புக்கு விழிப்பு நிலையில்மட்டுமே இன்ப துன்ப நுகர்ச்சி யுள்ளது. உறக்க நிலையில் அவை இல்லை. ஒரு தன்மையே இயங்கி நிற்கும் பிராணவாயு இவ்வேறுபாட்டுக்குக்காரணமாதல் அமையாது. எனவே பிராணவாயுவின் வேறாக ஆன்மா உண்டு என்பது திண்ணம். இவ்வாற்றாற் **பிராணான்ம வாதிகள்** கூற்றும் பிழைபடுகின்றது.

(6) இனி, அறிவுப் பொருள் ஆகிய பிரமம் தான் ஆன்மா ஆகும் எனின், எக்காலத்தும் திரிவின்றி அறிந்தாங்கு அறிய வல்ல பேரறிவுப் பொருள் ஆகிய பிரமமும், அறியாமலும்—ஒரு சிறிதே யறிந்தும்—அறிந்ததனையும் அடிக்கடி மறந்தும் மயங்கி வருந்தும் நிலையினதாகிய ஆன்மாவும், இருளும் ஒளியும் போலத் தம்முள் வேறுபட்டன என்பது வெள்ளிடை விலங்கல். இதனாற் **பிரமான்வாதிகள்** கருத்தும் பிழையேயாம்.

(7) தேகம் இந்திரியம் அந்தக்கரணம் பிராணவாயு என்பன தனித்தனியே வெவ்வேறு பெயர் பெறினும், அவையெல்லாம் சேர்ந்த திரட்சி நிலையை ஆன்மா எனக்

கொள்ளலாம் எனின், தனித்தனியே வெவ்வேறு பெயர் பெற்று நிற்பன ஒன்றாகச் சேர்ந்து திரண்ட வழியும், அத்திரட்சிக்கு ஆன்மா என்னும் பெயர் யாண்டும் வழங்கவில்லை. மேலும் அங்ஙனம் திரண்ட பொருள்கள் அனைத்தும் தோன்றி நின்று அழியும் அநித்தம் ஆகிய மாயாகாரியப் பொருள்களாம். நித்தப் பொருள் ஆகிய ஆன்மா, அந்தப் பொருள்களின் திரட்சியன்று என்பது தேற்றம். எனவே **சமுதாய ஆன்மவாதிகள்** கொள்கையும் தகுதியுடைத்தன்று.

(8) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கனுள், ஐம்பொறிகள் அறிந்த புலனைச் சித்தம் சிந்தித்தறியும், மனம் பற்றிச் சங்கற்ப விகற்பம் செய்யும், ஆங்காரம் ஒருப்பட்டு எழும், புத்தி நிச்சயிக்கும். ஆனால், இவைகள் முறையே யான் சிந்தித்தேன் பற்றினேன் ஒருப்பட்டெழுந்தேன் நிச்சயித்தேன் என்று அறியும் தன்மையுடையன அல்ல. இங்ஙனம் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக் கரணங்களின் வேறாய், தன்னை நோக்கியும் பிறவற்றை நோக்கியும் சித்துப் பொருள் எனத் திகழும் ஆன்மா என்பதொரு பொருள் உண்டு. அதுவே இவ்வந்தக் கரணங்களுடன் கூடி அவற்றினாலாய பயனை அடைகின்றது என்பது புலனாம். ஆதலின், **அந்தக்கரணான்மவாதிகள்** கருத்தும் பொருத்தமலது.

(9) பேரறிவுப் பொருளாகிய பிரமத்திற்கும், கருவிகளின் துணையின்றி ஒன்றனையும் அறியமாட்டாத சிற்றறிவுப் பொருளாகிய சீவான்மாவுக்கும் இடையே பெருவேறுபாடு காணப்படுதலால், பிரமப் பொருளின் பரிணாமமே ஆன்மா என்னும் **பரிணாம வாதிகள்** கொள்கை பொருந்துவதன்று.

(10) உயிரின்பால் அறிவு இச்சைசெயல் என்னும் மூவகைக் கூறும் நிகழக் காண்டலின், ஆன்மா கேவலம் அறிவு மாத்திரையாய் விளங்குவது என்னும் **சாங்கியர்** கருத்தும் தகுதியுடையதன்று.

(11) காட்சிப் புலனாதலும், பரிணமித்து அழிதலும் இல்லாத உயிரை, உருவப் பொருள் என்று **பவுராணிகர்கள்** (Mythologists) பகர்வது பிழையேயாகும்.

(12) அருவம் உருவமாயும் உருவம் அருவமாயும் ஒன்று பிறிதொன்றாக மாறாதாகலானும், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்பால் இயல்பாக அமைந்திரா ஆகலானும், ஆன்மாவினை அருவுருவப் பொருள் என்று கூறும் **கவுளர்** கருத்தும் ஏற்புடையதில்லை.

(13) உயிரானது உடம்பினை யாத்து நின்று, அதனைப் பல வகைகளில் ஆட்டி இயக்கி நடிக்குமாறு செய்து வருகின்றதாதலின், அதனை ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது எனப் பகரும் **பாதஞ்சலர்** கொள்கையும் பாங்குடைத்தன்று.

(14) சடப்பொருள் சித்தாதலும்சித்துப் பொருள் சடமாதலும் உலகத்து யாண்டும் இன்மையால், உயிரைச் சடப் பொருள் என்றும், அது பின்னர் மனத்தோடு கூடிச் சித்தாகி அறியும் என்றும் கூறும் **வைசேடிகர்** கொள்கை, ஒப்பத்தக்கதாக இல்லை.

(15) மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளின்கண் ஒருகாலத்து ஒருங்கே இயல்பாக அமைந்திரா வாதலின், உயிரைச் சித்து—அசித்து என இரண்டுமாகக் கருதும் ஒரு சிலர் கருத்தும் பொருத்தம் ஆகாது.

(16) அசித்து ஆகிய ஐம்பொறிகள் அந்தக்கரணங்கள் முதலிய கருவிகளின் துணையில்லாமல், உயிரானது எதனையும் அறியமாட்டாமல் இருத்தலின், அதனைச் சித்து என்று பகரும் **பட்டாசாரியன்** மதமும் அடாது.

(17) உடலின்கண் உள்ள எத்துணையோ பல துளைகளுள் ஒன்றன் வாயிலாக நில்லாமல் ஓடிப்போம் ஆதலாலும், உடலின்கட் கிடந்து கட்டுண்ணவும் பாரம் தாங்கிச் செல்லவும் உடன்படாது ஆதலாலும், உயிரானது உடலினுள் பரமாணு அள

விற்ருய் நிற்பது என்றுரைக்கும் **பாஞ்சராத்திரிகள்** கூற்றும் அமையாது.

(18) உயிரானது உடலின் ஒரு பகுதியில் இருப்பதென்ன், உருவப் பொருள் என்ற தற்குரிய குற்றம் அனைத்தும் நேருமாகலானும், குணம் குணியளவின் அன்றி அதற்குமேற் செல்ல வல்லதன்ருகலானும், ஒளியாவது விளக்கின் சூக்கும வடிவேயன்றிக் குணம் அன்ருகலான் அஃது ஈண்டைக்கு உவமை யாகாமையானும், விளக்கொளிக்கும் உயிரறிவுக்கும் இடையே வேற்றுமை பெரிதுண்டு ஆகலானும், உயிராவது உடம்பகத்துப் புல் நுனித் துளிபோல ஏகதேசமாய் இதயத் தானத்தின் நின்று விளக்கொளிபோல யாண்டும் தன் அறிவு வியாபிக்கப் பெறுவது என்ற **மிருதி நூலார்** கூற்றும், ஏற்புடைத்தாகக் காணப்படுகின்றிலது.

(19) உயிரானது உறக்கம் கனவு முதலிய அவத்தைகளை உறுதலாலும், ஐம்பொறிகளிலும் அறிவானது ஒருகாலத்து ஒருங்கே உடன் நிகழாமையாலும், சிறிய உடம்பிற் பேரறிவும், பெருடம்பிற் சிற்றறிவும் அறியாமையும் நிகழக் காண்டலானும், உறுப்புக் குறைபட்ட வழி உயிரும் குறைபட்டதாகத் தோன்ருமையாலும், உடம்பளவில் நிறைந்து நின்று உணர்வது உயிர் எனச் சாற்றும் **சமணர்** கொள்கையும், தகவுடையதாகத் தோன்றவில்லை.

(20) உடம்பின்கட் கட்டுண்டு கிடத்தலாலும், தத்துவங்களின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப ஐந்தவத்தைகளை மாறி மாறி அடைந்து வருதலானும், ஐம்புலன்களையும் ஒருங்கே யுணர வொண்ணுமல் ஒவ்வொன்ருகச் சுட்டியே யுணர்ந்து வருதலாலும், இறைவனைப் போல எங்கணும் வியாபியாய் நின்று அறிவது ஆனமா என்று கூறும் **ஐக்கியவாதிகள்** கொள்கையும், அறிவுக்கு இயைந்ததாக இல்லை.

—ஆசிரியர்

(தொடரும்



தேரழுந்தூர் ஆமருவியப்பன் திருக்கோயில் வரலாறு எழுதிய பேராசிரியர் திரு. கே. எஸ். நாகராஜன், M. A. அவர்களுக்கு நமது ஆணையர் அவர்கள் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்தல் (31—10—65)

திருமழிசையாழ்வார் அருளிய

# திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆயன் ஆகி ஆயர் மங்கை
வேயதோள் விரும்பினாய்
ஆய நின்னை யாவர் வல்லர்
அம்பரத்தொ டிம்பராய்,
மாய! மாய மாயைகொல்?
அதன்றி நீ வகுத்தலும்
மாய மாயம் ஆக்கினாய்! உன்
மாயம் முற்றும் மாயமே!

(பொழிப்புரை) வியக்கத்தக்க சிறந்த பண்புகளை யுடையவனே! இடைப் பிள்ளையாய்ப் பிறந்து, இடையர்குலப் பெண்ணான நப்பின்னைப் பிராட்டியினுடைய மூங்கில் போன்ற தோள்களை விரும்பியவனே! மேலுலகத்திலும் இவ்வுலகத்திலும் உள்ளவர்களில், எவர்தான் நின்னுடைய இயல்பினை ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கு வல்லவர்கள்? இங்ஙனம் நின்னை அறியமாட்டாமை, பிரகிருதியைப் பற்றிய அறியாமையினால் அன்று, எத்தகையவர்களாலும் நின் இயல்பை அறிதல் இயலாது. அது அன்றியும், உன்னை வழிபட்டு உய்யும் பொருட்டு உயிர்களுக்குக் கரணகளேபரங்களை அளித்திருந்தும், அவைகள் நல்வழியில் ஒழுகி உய்யாமல் தாமே தமக்குக் கேடுகளைத் தேடிக்கொள்ள, நீ அக்கேட்டினைப் பொறுக்கமாட்டாமல், இனி இவர்களை ஒடுக்கியருளுதலே நலம் என்று கருதி சம்ஹாரம் செய்தருளினாய். உன்னுடைய செயல்கள் யாவும் வியக்கத் தக்கன வாகவே விளங்குகின்றன.

(குறிப்புரை) ஆயர் மங்கை - நப்பின்னை, வேயதோள் - மூங்கில்போன்ற தோள், அம்பரம் - வானுலகம், இம்பர் - இவ்வுலகம், மாய மாயை - பிரகிருதியைப் பற்றிய அஞ்ஞானம், வகுத்தலும் - கரணகளேபரங்களைக் கொடுத்து உதவி புரிந்திருந்தும், மாய மாயம் ஆக்கினாய் - மாய்ந்து ஒடுங்கிப் போகும்படி சம்ஹாரம் செய்தருளினாய், மாயம் - சங்கற்பம், செயல், மாயமே - வியக்கத் தக்கனவே. (41)

வேறு இசைந்த செக்கர் மேனி
நீர் அணிந்த புன்சடைக்
கீறு திங்கள் வைத்த வன், கை
வைத்தவன் கபால் மிசை,
ஊறு செங்கு ருதியால்
நிறைத்த கார ணந்தனை
ஏறு சென்று அடர்த்த ஈச!
பேசு கூசம் இன்றியே!

(பொழிப்புரை) நப்பின்னைப் பிராட்டிக்காக எருதுகளை வலியடக்கின பெருமானே! வேறாக அழித்தற்றொழிலுக்கு ஏற்ற சிவந்த உடலை யுடையவனாய், திருநீற்றை யணிந்தவனாய், புல்லிய சடையிலே பிறைச் சந்திரனை வைத்திருப்பவனாய் உள்ள உருத்திரன், தன் கையில் வைத்துக் கொண்டிருந்த வலிய மண்டை ஓட்டினை, நின் திருமேனியினின்று பெருகிய சிவந்த இரத்தத்தினால் நிறையும்படி செய்தருளிய காரணத்தினைக் கூறியருள்க.

(குறிப்புரை) உருத்திரன் யாசிக்கவும், நீ அவனுக்கு அநுக்கிரகிக்கவும் நேர்ந்த சிறப்பு என்னே என்று பரத்வத்தை வியந்தபடி. நீ ஏழு பசுக்களை அடர்த்தும் ஈசுவரத்வம் நிறம் பெற நின்றாய், உருத்திரன் தன் ஈசுவரத்வத்தால் வந்த மேன்மை பெற்றிருந்தும் தாழ நின்றான் என்பது கருத்து, கபால் - கபாலம், மண்டை ஓடு, குருதி - இரத்தம். (42)




யோகதட்சிணாமூர்த்தி, மதுரைக் கோயில்.



வீணாதட்சிணாமூர்த்தி, மதுரைக்கோயில்.

CONNEMARA PUBLIC LIBRARY

CONNEMARA PUBLIC LIBRARY
5-APR-
MADRAS



ஸ்ரீ வைகுண்டநாதர், தாடிக்கொம்பு,
ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில்.



ஸ்ரீ நரசிம்மஸ்வாமி, தாடிக்கொம்பு, ஸ்ரீசௌந்தரராஜப்
பெருமாள் கோயில்.

வெம் சினத்த வேழ வெண் மருப்பு
ஒசித்து உருத்தமா
கஞ்சனைக் கடிந்து மண் அளந்து
கொண்ட காலனே
வஞ்ச னத்து வந்த பேய்ச்சி
ஆவி பாலுள் வாங்கினாய் !
அஞ்ச னத்த வண்ணன் ஆய
ஆதி தேவன் அல்லையே !

(பொழிப்புரை) கொடிய கோபத்துடன் வந்த குவலயா பீடம் என்னும் யானையினுடைய வெள்ளைத் தந்தத்தை ஒடித்து, சினமும் பலமும் வாய்ந்த கம்சனை வதை செய்து, வஞ்சனையால் வந்த பூதனையின் உயிரைப் பாலுண்ணுகின்ற பாவனையில் கவர்ந்து கொண்டவனே ! திரிவிக்கிரமனாய்ப் பூமி எல்லாம் அளந்து கொண்ட திருவடியை உடையவனே ! மைமையைப் போன்ற பேரொளியை யுடைய ஆதிதேவன் அன்றோ?

(குறிப்புரை) மருப்பு - தந்தம், ஒசித்து - ஒடித்து. உருத்த - கோபம் கொண்ட, கடிந்து - வதைத்து, வஞ்சனத்து - வஞ்சனையோடு. பேய்ச்சி-பூதனை, அஞ்சனத்து வண்ணன் - மை போன்ற நிறம் உடையவன். (43)

பாலின் நீர்மை செம்பொன் நீர்மை
பாசியின் பசும்புறம்
போலும் நீர்மை பொற்புடைத் தடத்து
வண்டு விண்டுலாம்
நீல நீர்மை என்றிவை நிறைந்த
காலம் நான்குமாம்
மாலின் நீர்மை வையகம் மறைத்தது
என்ன நீர்மையே !

(பொழிப்புரை) பாலின் வெண்மையும், பொன்னின் செம்மையும், பாசியின் பசுமையும், அழகிய தடாகத்தில் உள்ள வண்டுகள் மொய்க்கின்ற நெய்தற் பூக்களின் கருமையும் ஆகிய நிறங்களை யுடைய நான்கு யுகங்களுக்கும் தலைவனான எம்பெருமானுடைய எளிமைத் தன்மையினை இவ்வுலகத்தில் உள்ளவர்கள் அறியாமல் புறக்கணித்தது, என்ன இயல்பு !

(குறிப்புரை) கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என்னும் நான்கு யுகங்களிலும், சேதநர்களின் ஸத்வம் முதலிய குணங்களுக்கு ஏற்ப எம்பெருமான் வெண்மை முதலிய நிறங்களோடு முகங்காட்டி அருள்செய்தும், உலகத்தவர் பயன்கொள்ள மாட்டாமற் கெடுகின்றார்களே. ஈதென்ன தீவினையோ என்பது கருத்து. (44)

மண்ணு ளாய்கொல் விண்ணு ளாய்கொல்
மண்ணுளே மயங்கி நின்று
எண்ணும் எண் அகப் படாய்கொல்
என்ன மாயை ? நின்தமர்
கண்ணு ளாய்கொல் சேயைகொல்
அனந்தன்மேற் கிடந்தஎம்
புண்ணியா புனத் துழாய்
அலங்கல் அம் புனிதனே

(பொழிப்புரை) திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்தருள்கின்ற புண்ணிய வடிவினன் ஆகிய எம்பெருமானே ! திருத்துழாய் மாலையை அணிந்த அழகிய புனிதம் மிக்கவனே ! லீலா விபூதியில் அவதரிக்கின்றாய் ! நித்திய விபூதியில் எழுந்தருளி யிருக்கின்றாய் ! உலகில் பிறந்து அறியாமையில் மயங்கிக் கிடக்கும் மக்களின் எண்ணங்களுக்கு அகப்படாமல் அப்பாற்பட்டு நிற்கின்றாய் ! உன்னுடைய அடியவர்களுக்கு மட்டும் கண்களிற் புலப்படுகின்றாய். மற்றையோர்க்குத் தொலைவிலுள்ளவனாகத் திகழ்கின்றாய் ! இஃது என்ன வியப்பு. (45)

தோடு பெற்ற தண்துழாய்
அலங்கல் ஆடு சென்னியாய் !
கோடு பற்றி ஆழி ஏந்தி
அஞ்சிறைப் புள் ஊர்தியால்
நாடு பெற்ற நன்மை நண்ணம்
இல்லையேனும் நாயினேன்
வீடு பெற்று இறப்பொடும்
பிறப்பு அறுக்குமா சொலே

(பொழிப்புரை) இதழ்களையுடைய குளிர்ந்த திருத்துழாயினால் ஆகிய மாலை யானது விளங்கப்பெற்ற திருமுடியை யுடையவனே! **பாஞ்சசன்யம்** என்னும் சங்கினைப் பிடித்து, **சுதரிசனம்** என்னும் சக்கரத்தினை ஏந்திக்கொண்டு, அழகிய சிறகையுடைய கருடாழ்வான் என்னும் பெரிய திருவடியை வாகனமாகச் செலுத்துகின்றாய். நாட்டில் உள்ள மற்றவர்கள் பெற்ற நன்மையை நான் பெற வில்லை என்றாலும், நாய்போன்ற நீசன் ஆகிய நான் முத்தியை அடைந்து இறப்பும் பிறப்பும் ஆகிய இரண்டினையும் அறுத்துக்கொள்ளும் வழியினைக் கூறியருளுதல் வேண்டும்.

(குறிப்புரை) தோடு - இதழ், துழாய்- துளசி, அலங்கல் - மாலை, சென்னி - தலை, கோடு - சங்கு, சிறை - சிறகு, இறக்கை, புள் - பறவை, கருடன். நண்ணம் - பெற்றிலோம், **'நண்ணலம்'** என்பது 'நண்ணம்' என வந்தது. (46)

காரொடு ஒத்த மேனி நங்கள்
கண்ண விண்ணின் நாதனே
நீரிடத்து அரா அணைக் கிடத்தி
என்பர் அன்றியும்
ஓரிடத்தை யல்லை எல்லை யில்லை
என்பர் ஆதலால்
சேர்வு இடத்தை நாயினேன் தெரிந்து
இறைஞ்சுமா சொலே

(பொழிப்புரை) காளமேகத்தைப் போன்ற திருமேனியையுடைய எங்கள் கண்ணபிரானே! நித்திய சூரிகளுக்குத் தலைவனே! திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் ஆகிய படுக்கையிலே கண் வளர்ந்தருளுகின்றாய் என்று ஞானிகள் கூறுவர். அதுவல்லாமலும் நீ ஒரு குறிப்பிட்ட இடத்தை இருப்பிடமாகக் கொண்டவன் அன்று. நீ உறையும் இடங்களுக்கு எல்லை இல்லை என்றும் பெரியோர்கள் கூறுவர். ஆதலால் மிகவும் நீசனாகிய அடியேன், சேர்ந்து வழிபட்டு ஒழுகுதற்குரிய ஒரு தலத்தை யான் இன்னதென்று தெரிந்துகொண்டு பணிந்து உய்யுமாறு அருள்செய்க. (47)

குன்றில் நின்று வான் இருந்து,
நீள்கடற் கிடந்து, மண்
ஒன்று சென்றது ஒன்றை யுண்டு
அதொன்று இடந்து பன்றியாய்
நன்று சென்ற நாள் அவற்றுள்
நல்லுயிர் படைத்து அவர்க்கு
அன்று தேவு அமைத்து அளித்த
ஆதி தேவன் அல்லையே.

(பொழிப்புரை) திருவேங்கடமலையில் நின்றும், பரமபதத்தில் வீற்றிருந்தும், திருப்பாற்கடலில் கண் வளர்ந்தும், திருவிக்கிரமனாய் உலகத்தை அளந்தும், மற்றொரு கால் உலகத்தை விழுங்கியும் பிறிதொரு கால் வராகமாய் உலகைத் தோண்டியும், நல்ல முறையிற் கழிந்த நாட்களிலே நல்ல உயிர்கள் ஆகிய மனிதர்களைப் படைத்தும், அப்போது அந்த மனிதர்களுக்குத் தங்கள் தங்கள் குணங்களுக்குத் தக்கபடி வணங்குதற்குரிய தேவதைகளை ஏற்படுத்தியும், நன்மை செய்தருளிய ஆதிதேவன் ஆகிய பரமபுருஷன் நீயே ஆவாய். (48)

(குறிப்புரை) குன்று - திருவேங்கடம், வான் - பரமபதம், கடல் - திருப்பாற் கடல், இடந்து - தோண்டி, நல்லுயிர் - மக்களாகிய நல்ல உயிர்கள், அன்று - அக்காலத்தில், ஆதிதேவன் - பரம புருஷன்; முழுமுதற் பெருங்கடவுள்.

கொண்டை கொண்ட கோதை மீது
தேன் உலாவு கூனிகூன்
உண்டை கொண்டு அரங்க ஒட்டி
உள் மகிழ்ந்த நாதன் ஊர்
நண்டை யுண்டு நாரை பேர
வாளை பாய நீலமே
அண்டை கொண்டு கெண்டை மேயும்
அம் தண் நீர் அரங்கமே.

(பொழிப்புரை) தலைமுடியின்கண் அணியப் பெற்ற மாலையிலே வண்டுகள் உலாவப் பெற்ற கூனியினுடைய வளைந்த முதுகை, வில்லிலே உண்டையை வைத்து எறிந்து போக்கித் திருவுள்ளம் மகிழப் பெற்ற எம்பெருமானுடைய திருத்தலம், நாரையானது நண்டைத் தின்று அசைந்து வர, அதுகண்டு வாளைமீன் அஞ்சித் துள்ளி எழுந்து இங்கும் அங்கும் பாய்ந்து ஓட, கெண்டை மீனானது கரு நெய்தல் மலர்களை அரண் ஆகிய பாது காப்பாகக் கொண்டு மேயப் பெற்ற அழகிய குளிர்ந்த நீர்வளத்தை யுடைய திருவரங்கம் ஆகும்.

(குறிப்புரை) நாரை நண்டைத் தின்று அசைந்து வர, வாளைமீன் அஞ்சி இங்கும் அங்கும் பாய்ந்து ஓட, நெய்தல் மலர்களை அரணாகக் கொண்டு கெண்டை மீன்கள் இனிது மேயும் திருவரங்கம் என்ற வருணனைப் பகுதி, அழகிய உள்ளுறைப் பொருள் குறிப்பதாக விளங்குகின்றது.

> "இத்தால் ஸம்ஸாரிகளை நலிகிற அஹங்காரத்தைக் கண்டு பீதராய், முமுட்சுக்களாய் உபாஸநத்திலே இழிந்த ஸாதகரைக் கண்டு, இவையிரண்டும் பயஸ்தானம் என்று ஸர்வேச்வரனையே உபாயமாகப் பற்றி நிர்ப்பயராய் ஸ்வரூபாநுரூபமான பகவத் குணாநுபவமே யாத்ரையாய் வர்த்திக்கும் ப்ரபந்நர்க்கு ஸ்மாரகமாய் இருக்கிறதாய்த்து கெண்டைகளினுடைய யாத்ரை"

என்பது பெரிவாச்சான்பிள்ளை அருளிச் செய்யும் ஸ்வாபதேசம், நண்டு - சம்ஸாரிகள், நாரை - அஹங்காரம், வாளை - உபாஸகர், கெண்டை - பிரபந்நர். நெய்தல் - பகவத் பாதார விந்தம், நாரையையும் வாளையையும் கண்டு கெண்டை அஞ்சுதல் - பிரபந்நர்கள் அகங்காரத்துக்கும் உபாஸநத்துக்கும் இருய்த்தல் என உள்ளுறைக் குறிப்புக் காண்க. (49)

வெண் திரைக் கருங்கடல் சிவந்து
வேலை முன்ஓர்நாள்
திண் திறற்சிலைக் கைவாளி விட்ட
வீரர் சேரும் ஊர்
எண் திசைக் கணங்களும் இறைஞ்சி
ஆடு தீர்த்த நீர்
வண்டு இரைத்த சோலை வேலி
மன்னுசீர் அரங்கமே.

(பொழிப்புரை) முன்பொரு காலத்திலே வெண்மையான அலைகளை யுடைய கருங்கடலானது தீப்பற்றி வேகும்படி மிக்க வலிமையையுடைய சார்ங்கம் என்னும் வில்லினின்றும் அம்புகளை ஏவிய பெருவீரரான எம்பெருமான் தங்கி வாழ்கின்ற திருத்தலம், எட்டுத் திக்குகளிலும் உள்ள மக்கள் எல்லோரும் தொழுது நீராடி மகிழ்கின்ற புண்ணிய தீர்த்தங்களை யுடையதாய், வண்டுகள் பாடுகின்ற சோலைகளை வேலியாக உடையதாய், சிறப்பின் மிகுந்த திருவரங்கம் ஆகும். (50)

—தொடரும்

---

## செய்திச் சுருக்கம்

திருஞான சம்பந்தர் அருணகிரிநாதர் பாடல்கள் பெற்றதும், ஸ்ரீமத்பாம்பன் சுவாமிகள் சமாதி கொண்டருளியிருப்பதும், சென்னை அடையாறுக்கு அருகில் இருப்பதுமான திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீசுவரர் தேவஸ்தானத் திருப்பணி குறித்து, திருவலம் மகான் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மௌன சுவாமிகள் அவர்கள், திருவான்மியூர்க் கோயிலுக்கு ஒவ்வொரு பௌர்ணமி அன்றும், காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரையில், எழுந்தருளி வீற்றிருந்து அன்பர்களுக்குத் திருநீறு வழங்குவார்கள். அன்பர்கள் திருப்பணிக்குக் காணிக்கை செலுத்தி, சுவாமிகளிடம் திருநீறு பெற்றுக் கொண்டு, இறைவனருளுக்குப் பாத்திரராகும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

# காளிதாசன் காட்டும் சிவபக்தி

(பேராசிரியர் திரு. பெ. திருஞான சம்பந்தம், M.A., L.T.,
வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.)

காளிதாசன் உலககவிஞர் வரிசையில் முன்னணியில் நிற்பவன், கவிஞன் மட்டுமல்ல, சிறந்த சிவ பக்தனும் கூட. தனது பெருங்காப்பியமாகிற குமார சம்பவத்தில் பார்வதியின் தவத்தை வர்ணிக்கின்ற பகுதி காவியப்பண்பும் பக்திரசமும் கூடுகின்ற கூடல். அதில் மூழ்குவோர் அழகையும் இன்பத்தையும் மட்டும் காண்பவரல்லர் தூய சிந்தையராதலும் துணிபு. அதில் சிறிது துழாவுவோம்.

இமவான் மலையரசன். அவனது அருமைப் புதல்வி பார்வதி. ஐசுவரியம் அனைத்தும் நிரம்பிய அரசனின் குமரி. வேண்டிய வேண்டியாங்கு துய்க்கும் வாய்ப்பினள். இருந்தும் உடலை வருத்தித் தவம் புரிகிறாள் சிவபெருமானை மணாளனாக அடைவதற்கு. கடுங்கோடையில் நாற்புறமும் தீ சூழ, மேலே கதிரவன் காயக் கடுந்தவம் புரிகிறாள். குளிர் காலத்தில் கழுத்தளவு நீரில் அமிழ்ந்து நோன்பிருக்கிறாள். இருந்தும் எம்பெருமானாய சிவன் அவளது காதலின் உறைப்பைப் பரிசோதிக்க எண்ணிப்போலும் பிரம்மசாரி வேடந்தாங்கிப் பார்வதி தவம் பெருக்கும் இடத்திற்கு வருகிறார். வந்து சில வினாக்களை எழுப்புகிறார் பார்வதி தேவியை நோக்கி.

'அம்மா, நீ விரும்பும் அந்த மகேசுவரனை நான் அறிவேன். நீ முன்பு அவனுக்குப் பணிவிடை புரிந்தபோது காமனைக் காய்ந்து உன்னை மறுத்தவன் தானே, அவனைப் பின்னுமா விரும்புகிறாய்? அவனைப் பற்றி நான் நன்குஅறிவேனாகையால் உன் விருப்பம் சரியென்று நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. ஏன், அவனிடத்திலே என்ன குறை என்கிறாயா? நீ அவன் கையைப் பிடிக்க எண்ணுகிறாயே. அவன் கையில் என்ன இருக்கிறது தெரியுமா? பயங்கரமான பாம்பையே கங்கணமாக அணிந்திருக்கிறான் அவன். நீ எப்படித்தான் பாணிக்ரஹணம் செய்வாயோ!'

'அம்மா, நன்றாகச் சிந்தித்துப் பார். நீ உடுத்தப்போவது அன்னப்புள்ளின் உருவம் பொறிக்கப்பட்ட பட்டாடை. அவன் உடுப்பதோ அருவருக்கத்தக்க ரத்தத்துளிகள் சொட்டிக்கொண்டிருக்கும் யானைத்தோல். நீ இருப்பது எல்லா போகப்பொருள்களோடும் கூடிய அரண்மனை. உன் மெல்லிய பாதம் நோகக்கூடாதென உன் தந்தை நீ உலவுமிடமெல்லாம் மலர்களைத் தூவச் செய்திருக்கிறார். ஆனால் நீ வரித்துள்ள கணவனோ, அப்பப்பா! மயிர்கள் சிதறிக்கிடக்கும் மயான பூமி! நீயும் பிறகு அங்குதான் போய் வசிக்கநேரிடும். உன் விரோதிகூட இத்தகைய நிலை உனக்கு ஏற்படுவதை விரும்பமாட்டான். உன் நலத்தில் நாட்டங்கொண்ட நான் இக் கோரிக்கையை எப்படி ஒப்பமுடியும்? இன்னும் கேள்.'

'அவன் முக்கண்ணன். இதைக் காட்டிலும் விகார உருவம் வேறென்ன இருக்கமுடியும்? சந்தனக்குழம்பு பூசிய உன் திருமேனியிலே அவனுடைய மார்பிலுள்ள சாம்பரா படிவது? ஐயோ பாவம்! மற்றொரு வேடிக்கையைக் கேள். நீ திருமணம் புரிந்துகொண்ட பின்னர் தம்பதியராய் இருவரும் ஊர்வலம் வரவேண்டும். அப்போது அவருக்கு நல்ல வாகனம்தான் ஏதாவது உண்டா? உன் தந்தை உனக்கு நல்ல கம்பீரமான யானையை அளிப்பார். அவருக்கோ அந்தக் கிழ மாட்டைத் தவிர வேறொன்றுமில்லை. உங்கள் இருவரையும் இந்தக் கோலத்திலே கண்டால் மக்கள் கைகொட்டிச் சிரியாரோ?'

'முன்னமேயே உலகத்திற்கோர் அழகிய சந்திரன் அவருடைய சடையிலே சிக்கிக்கொண்டு பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கிறான். நீயுமா அவன் கைப்பிடியில் சிக்கிக்கொண்டு அந்நிலைக்காளாக வேண்டும்?'

'கணவன் அழகனாக இருக்கவேண்டுமெனப் பெண் விரும்புவாள். மாப்பிள்ளை பணக்காரரா என்று பெண்ணின் தாய் பார்ப்பாள். அவர் படித்தவரா என்று தந்தை சிந்திப்பார். நற்குலத்தவரா என்று உறவினர் ஆராய்வர். பிற மக்கள் அவர் வீட்டிற்குப் போனால் அறுசுவை உணவு

கிடைக்குமா என்றே எண்ணுவார்கள். இது உலகியல் வழக்கு. நீ விரும்பும் கணவனே முக்கண்ணுகிய குரூபி. அவனுக்குக் குலம் கோத்திரம் எதுவும் இல்லே. உடுக்க நல்ல உடையாவது உண்டா என்ருல் கோவணுண்டி. அதிலிருந்தே அவன் செல்வ நிலேயை உணரலாமன்ருே? விரும்பத்தக்க அம்சம் ஏதேனும் ஒன்ருகிலும் இருக்கிறதா பார்? என்று சாதுரியமாகப் பேசி முடிக்கிருர் பிரம்மசாரி வேடத்தில் வந்திருந்த சிவபெருமான்.

சிவபெருமானிடத்தில் முதிர்ந்த பக்தி, அயராத அன்பு கொண்டிருந்த பார்வதிக்கு இச்சொற்களேக் கேட்டுக் கோபம் ஏற்படாமல் என்ன செய்யும்? உதடு துடிக்கிறது. புருவம் வளே கிறது. கண்களில் சிவப்புரேகை படர்கிறது. பிரம்மசாரி பேசிய ஒவ்வொரு சொல்லுக்கும் ஆணித்தரமாகப் பதில் சொல்கிருள்.

'ஐயா, பெருமானேப் பற்றிய தத்துவங்களே நீர் அறியாமல் பிதற்றுகிறீர். சிவநிந்தை செய்கிறீர். உலக நிலேயில் நின்று அவரைக் கருதுவது பொருந்தாது. இந்நிலேயை எல்லாம் கடந்தவர் அவர். அவருடைய செயல்களுக்குக் காரணம் காண்பது எளிதன்று. அது நம் சிற்றறிவிற்கு அப்பாற்பட்டது. இதை அறியாத பேதைகள் அத்தகைய மகாத்மாக்களுடைய செயலே நிந்திக்கிருர்கள்.'

'அவரிடத்தில் மங்கலப் பொருள் இல்லே என்கிறீரே. அது யாருக்குத் தேவை? உலகியலில் உழலும் மக்களுக்குத் தீமையைத் தவிர்க்கவும் நலத்தைப் பெருக்கவும் மங்கலப் பொருள் தேவை. பற்றற்ற பரம்பொருளுக்கு வேண்டுதல் வேண்டாமையிலானுக்கு, உலகிற்கே அடைக்கலம் தருகின்ற பரமனுக்கு மங்கலப் பொருள் எதற்கு?'

'அவருக்குப் பொருள் இல்லே என்கிறீர். உலகிலுள்ள ஐசுவரியமனேத்தும் அவரிடமிருந்து தோன்றியதென்பதை அறியமாட்டீர் போலும். மயானத்தை உறைவிடமாகக் கொண்டவன் என்கிறீர். மூவுலகிற்கும் முதல்வன் அவன் என்பதை அறியமாட்டீர் போலும். பயங்கர உருவம் படைத்தவர் என்கிறீர். அவருடைய பெயரே சிவம் என்பதை உணரீரோ? சொல்லப்போனுல் அவருடைய உண்மைத் தத்துவத்தை விளங்கிக் கொண்டவர் உலகில் இல்லே எனலாம்.'

'அழகிய அணி பூண்டவராயினும் சரி, பாம்பணி கொண்டவராயினும் சரி, கரியுரி போர்த்தியவராயினும் சரி, பட்டாடை உடுத்தியவராயினும் சரி, மண்டையோடு அணிந்தவராயினும் சரி, தூவெண் மதி சூடியவராயினும் சரி, அஷ்டமூர்த்தியான அவருடைய உருவத்தை யாரே இத்தகையன், இவ்வண்ணத்தன் என்று இயம்புதல் கூடும்!'

'அவரது திருமேனியைத் தீண்டிய சாம்பர் நமது ரஜோ குணத்தைப் போக்கவல்லது. நடராஜப்பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரியும் போது அவர் திருமேனியினின்றும் தெறித்த திருநீற்றுப் பொடியை இந்திராதி தேவர்கள் தமது சிரசில் அணிவதை நீர் எப்படி அறிவீர்? கிழ எருது அவரது வாகனம் என்ரு சொன்னீர்? ஐராவதத்தில் பவனிவரும் இந்திரனே நீர் சொல்லுகின்ற அந்த கிழட்டுக்காளேமீது வரும் 'ஏழைச் சிவனின்' திருவடியைத் தனது சிரத்தின் மீது தாங்குவதை நீர் எப்படி அறியப்போகிறீர்?'

'உம்முடைய பிதற்றல்களுக்கிடையே ஓர் உண்மையையும் சொல்லிவிட்டீர்! அவருடைய பிறப்பு, குலம் இவை பற்றி எதுவுமே தெரியாதே என்றீர். எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் பிரமனுக்கும் காரணனுயிற்றே அவன். அவனுக்குப் பிறப்பு எங்ஙனம் இருக்கமுடியும்? தோன்றிய குலம் என்று ஒன்று எப்படி இருக்க முடியும்?' என்று வாதிட்டாள் பார்வதி.

பிரம்மசாரியின் உதடு சிறிது அசைந்தது. அவர் மீண்டும் வாதிப்பார் போல் தோன்றியது. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிருள் பார்வதி. பாரமார்த்திக விஷயத்தை வாதம் செய்தே முடிவு கட்டுவது முடியாதல்லவா? மீண்டும் அந்த பிரம்மசாரி பழிச்சொல் பேசுவதையும், அதைக் காது கொடுத்துக் கேட்கும் பாவத்தைத் தான் ஏற்கவேண்டி வருகின்ற நிலேயையும் தவிர்க்க எண்ணிய பார்வதி, 'போதும் ஐயா உமது கலகப் பேச்சு. நீர் சொல்லுவது உண்மையாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். என்னுடைய உள்ளம் இறைவனேப்

பற்றிய உணர்வில் கனிந்து விட்டது. மனச் சாட்சிக்கேற்ப நடப்பவர்கள் பழிச்சொல்லுக்கு அஞ்சத்தேவையில்லை. நானும் அஞ்சப்போவ தில்லை' என்று உறுதியுடன் கூறிவிட்டுச் சரேலென அப்பால் நகர்ந்து செல்ல முயன்றாள்.

பார்வதியின் முதிர்ந்த அன்பைக் கண்டுகொண் டார் இறைவன். இடபாரூடராய்ப் புன்முறுவல் பூத்த முகத்துடன் பார்வதியை அணுகிக் கரம் பிடித்தார்.

இத்திடீர்த் திருப்பத்தை எதிர்பாராத பார்வதி நடுக்குற்றாள். வியர்வை அரும்பிற்று அவள் முகத்தில், தன்னை விடுவித்துக்கொண்டு அடி எடுத்துவைக்க முற்பட்டாள். அன்பும் நாணமும் போட்டியிட இருக்கவும் முடியாமல் நகரவும் முடியாமல் தயங்கினாள். திடீரென மலை எதிர்ப் பட்டால் ஓடுகின்ற நதி மேலே செல்லவும் முடியா மல், செல்லாமல் நிற்கவும் முடியாமல் எப்படித் தத்தளிக்குமோ அப்படித் தத்தளித்தாள் பார்வதி என்று வர்ணிக்கிறான் காளிதாசன்.

இறைவன், ' பெண்ணே ! உன் தவத்திற்கு நான் அடிமையாகி விட்டேன். இன்று முதல் நான் உன் தாசன்' என்று திருவாய்மலர்ந்தருளி னார். 'பக்திவலையிற் படுவோன்' அல்லவா இறைவன். ★

---

## கோயில் நிகழ்ச்சிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஆவடி : | ஸ்ரீ ஆதிகைலாச நாத சுவாமி கோயில் | அடிக்கல் நாட்டு விழா | 29—11—65 |
| வடச்சேரி : | ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள்<br>ஸ்ரீ சோம சுந்தரேசுவரர் | திருப்பணிக் கால்கோள் விழா | 28—11—65 |
| மன்னார்குடி : | ஸ்ரீ சொக்கநாத சுவாமி கோயில் | அப்பர் உழவாரப் படை, விளக்கு வழிபாடு விழா | 29—11—65 |
| ஆத்தூர் : | ஸ்ரீ காயநிர்மலேசுவர சுவாமி கோயில் | 108 சங்காபிஷேகம் | 29—11—65 |
| திருவொற்றியூர் : | ஸ்ரீ படம்பக்கநாதர் கோயில் | புனுகு மெய்ப் பூச்சு ஆராதனை | 8—12—65 |
| பந்தணை நல்லூர் : | ஸ்ரீ பசுபதிசுவரர் கோயில் | பிரதோஷக் கூட்டு வழிபாடு | 6—12—65 |
| இருகூர் : | ஸ்ரீ நீலகண்டேசுவரர் கோயில் | கிருத்திகை சிறப்பு விழா | 7—12—65 |
| திருப்பள்ளிக்கோடு பள்ளியாடி | ஸ்ரீ மகாதேவர் ஆலயம் | அஷ்டமித் திருவிழா | 6—12—65 to 15—12—65 |
| தஞ்சை : | ஸ்ரீ கோடீசுவரர் அறக் கட்டளை | ஆராதனை விழா | 9—12—65 |
| சின்னவேடம் பட்டி : | கௌமார மடாலயம் | கந்தசுவாமி சுவாமிகள் குருபூசை | 4—12—65 |
| சுவாமி மலை : | ஸ்ரீ சுவாமிநாத சுவாமி கோயில் | திருக்கார்த்திகை மகோற்சவம் | 28—11—65 to 9—11—65 |
| திருப்பெருந்துறை : | ஸ்ரீ ஆத்மநாதசுவாமி கோயில் | ஆருத்திரா தரிசனம் | 6—11—65 |
| திருவிரிஞ்சிபுரம் : | ஸ்ரீ மார்க்கபந்திசுவரர் கோயில் | கடை ஞாயிறு விழா | 10—12—65 to 13—12—65 |
| மாகறல் : | ஸ்ரீ திருமாகறலீசுவரர் கோயில் | திருப்பணித் துவக்கவிழா | 5—12—65 |
| திருவாஞ்சியம் : | ஸ்ரீ வாஞ்சிநாதசுவாமி கோயில் | கார்த்திகை ஞாயிறுபெருவிழா | 3—12—65 to 12—12—65 |
| மன்னார்குடி : | ஸ்ரீ இராஜகோபால சுவாமி கோயில் | வைகுண்ட ஏகாதசி உத்சவம் | 23—12—65 to 13—1—66 |
| தேனம்பேட்டை : | ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் | அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் | 12—12—65 |
| ஸ்ரீ வைகுண்டம் : | ஸ்ரீ கண்ணபிரான் சுவாமி கோயில் | திருவத்யயனத் திருவிழா | 24—12—65 to 13—1—66 |
| திருப்புகலூர் : | ஸ்ரீ அக்னீசுவர சுவாமி கோயில் | சிவாகம—தேவார பாடசாலை ஆண்டு விழா | 12—12—65 |

# சிவஞான போதம்

(திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.எ., எல்.டி., காஞ்சிபுரம்.)

பன்னிரண்டாம் சூத்திரம்: **2-ஆம் அதிகாரம்**

சூத்திரக்கூறு: **"அன்பரொடு மரீஇ"**

சிவன் முத்தர் உலகமுகப்படும்போது தமக்குத் தற்போதம் நிகழாதிருத்தற் பொருட்டு மும்மலவாதனையைக்களையும் ஒழுக்கத்தில் தம் அறிவை நெறிப்படுத்துவர் என்பது மேலே கூறப்பட்டது. அவ்வொழுக்கம் நிலைபெறுதற்பொருட்டு அவர் தம்மைப்போன்ற மெய்யன்பர்களிடத்து அன்பு செய்து அவரோடு இணங்குவர் என்பது இங்கே கூறப்படுகின்றது.

"இணங்கத் தன் சீர் அடியார் கூட்டமும்
வைத்து"

—திருவாசகம், திருப்பூவல்லி-7

"கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி"

—விநாயகர் அகவல்

என்ருற்போல்வன, இவ்வதிகரணத்து ஆராயப்படும் அருள் மொழிகள்.

**வார்த்திகம்**: "இனிச் சிவபக்தர்களோடு இணங்குக என்றது, அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவார் ஆதலான".

தன்ஞற்கூறப்படும் பொருள்: சிவன் முத்தர்கள் தம்மைப்போன்ற சிவஞானிகளோடு கூடி வாழ்ந்து அல்லாதார் கூட்டுறவைக் களைதல் வேண்டும்.

**ஐயப்பாடு:** சிவன் முத்தர் பல்லுயிர்களையும் மகவு என ஒப்பக் காண்பர் எனவும் மறைமொழி இருத்தலின், சிவஞானம் இல்லாதாரை விலக்கலாமோ அன்ருே என்பது; அன்றியும் அவர் தனித்திருக்கப் பெருரோ என்பது.

**பிறர் கூறும் பக்கம்:** எல்லாரையும் அபேதமாகக் காணும் சிவஞானிக்குச் சிலரிடத்தில் விருப்பும் வேறு சிலரிடத்தில் வெறுப்பும் காட்டுதல் கூடாமையின், அவர் யாவரோடும் ஒப்பக் கூடிவாழ்வர் என்பதே பொருத்தம். வேண்டும் எனின், சிவஞானிகள் அல்லாதாரை நீங்கி நிற்றலே அமையும்; சிவஞானிகளோடு இணங்க வேண்டும் என்பது தேவைப்படாதது.

**மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிவு:** மறுமை பயப்பது மன நன்மையே ஆயினும், அதற்கு அச்சிறப்பு இன நலம் பற்றியே வலிவுடையதாகும் என்ருர் திருவள்ளுவர் "மனநலத்தின் ஆகும் மறுமை—மற்(று) அஃதும்—இன நலத்தின் ஏமாப் புடைத்து" என்பது அவர் தம் வாய்மொழி. நல்லாரைச் சேர்ந்தொழுகின் அல்லது தீயார் உறவு நீங்குதல் அரிது. மலவாதனே, விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் அறிவின் மெலிவு பார்த்தே நெருங்கி முதல்வனே மறப்பிக்கும். அஞ்ஞானிகளோ அறிவின் மெலிவு இல்லாதபோதும் அம்மெலிவினே உண்டு பண்ணி, விபரீத உணர்வைத் தோற்றுவித்துப் பிறவிக் கடலின் வீழ்த்திவிடுவர். அதனுல் அவர்தம் சேர்ச்சி அறுதற் பொருட்டுச் சிவபத்தரிடத்துப் பேரன்புடையவராய் ஒழுகின் தம் நிலையில் திரியாது நிற்றல் கைகூடும். அங்ஙனம் நிற்கும் உண்மைத் தவத்தினரே பிராரத்த வாதனையைக் கடப்பர். அதாவது, நுகர்வினை பற்றி வரும் அல்லாதார் சேர்ச்சியிற் சிக்குண்ணுர்.

சிவஞானிகள் எல்லோரையும் ஒப்பக் காணுதல் என்பது அவர்தம் துன்பங் கண்டபோது வேற்றுமை பாராட்டாது அவரவர்க்கு ஆவன கூறுதல், செய்தல் மட்டுமேயன்றி அவரோடு இணங்குதல் அன்று. இதனுல் சிவன்முத்தர் சிவஞானிகளோடு இணங்குதல் இன்றியமையாதது என்பது விளங்கும். சிவபக்தர் அல்லாதார், அறிவு சோர்தற்கு உரிய வாய்ப்

பிணைத் தோற்றுவித்து விபரீத அறிவைப் புகுத்துவர் என்பதைப் பின்வரும் திருவாசகப் பகுதி சுட்டுகிறது :

" தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவிலா ததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின ;
ஆத்த மானர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர் ;
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்,
விரதமே பரமாக வேதியரும்
சரத மாகவே சாத்திரம் காட்டினர் ;
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர் ;
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்து, அடித்து, ஆஅர்த்து,
உலோகா யதன்எனும் ஒண்டிறற் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி
அதில் பெருமாயை எனைப்பல சூழவும் "

– போற்றித் திருவகவல்

இங்ஙனம் கூறும் பொருள் நிலையை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும் உதாரண வெண்பா :

" மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை
— அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி னால்உணரும்
மெய்த்தவரை மேவா வினை —

சிறப்பு-அன்பு. சிறப்பில்லார் தம்மை மறப்பித்து மலங்களின் (பிறவிக்குழியில்) வீழ்த்துவர் ; அவர் தம் திறத்துச் சேர்ச்சி; தொன்றுதொட்டு வருவது ; அஃது அறுதற்பொருட்டு, பத்தர் இனத்துப் பித்தாய், சிவஞானம் மேம்பட்டு நிகழப் பெறும் மெய்த்தவரை வினை மேவா — எனக் கொண்டு கூட்டி முடிக்க. சேரமான் பெருமாள் திருக்கயிலையில் சிவபிரானை நோக்கி,

" மருவு பாசத்தை யகன்றிட வன்றொண்டர்
கூட்டம் வைத்தாய் "

என உணர்ந்து விண்ணப்பித்தல் சிந்தித்தற்கு உரியது.

—தொடரும்

## திருவத்யயன உற்சவம்

தோப்புத்துறை ஸ்ரீவேதநாராயணப் பெருமாள் கோயில்
திருநாராயணபுரம் ஸ்ரீவேதநாராயணப் பெருமாள் கோயில்
சேலம் செவ்வாய்ப்பேட்டை பிரசன்ன வேங்கடாசலபதி பெருமாள் கோயில்
ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானம்
வடுவூர் கோதண்டராமசாமி கோயில்

## வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா

| | | |
|---|---|---|
| சேலம் செவ்வாய்ப்பேட்டை : | — | ஸ்ரீபிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் கோயில் |
| திருநாராயணபுரம் : | — | ஸ்ரீவேதநாராயணப் பெருமாள் கோயில் |
| நாகப்பட்டினம் : | — | ஸ்ரீசௌந்தரராஜப் பெருமாள் கோயில் |
| தெற்குச் சித்திரை வீதி, மதுரை | — | ஸ்ரீஅனுமார் கோயில்—அனுமத் ஜெயந்தி |

## ஆருத்ரா தரிசன விழா

திருத்தவத்துறை சப்தரிஷீசுவரர் தேவஸ்தானம்.
சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் தேவஸ்தானம்.

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர் திருவெண்காடு)

## (தாலப் பருவம்)

பூவார் நறைவிண் டலர்கமலம்
பொழியும் செழுந்தேன் வாய்மடுத்துப்
பூசும் நறுங்கேழ்த் தேய்வை யெனப்
பொற்று தாடிப் பொலிவண்டு

பாவார் தமிழ்வண் பதிகமறை
பாடும் சிறையார் மடக்கிளிக்குப்
பக்கத் துணையாழ் வாசினைபோல்
பாடிக் களிக்கும் சோணாடா!

மேவார் சமயப் புரைநெறிகள்
மேவா தொழிய மேதினிமேல்
மேலாம் தமிழும் சிவநெறியும்
வெண்ணீற் றொளியும் தழைத்தோங்க

மூவாத் தமிழில் முதுமறைகோத்
தளித்த முனிவா தாலேலோ!
முத்தின் சிவிகை பெற்றமுழு
முதல்வா! தாலோ தாலேலோ! (1)

முதிர்வண் கமுகின் பசுங்குலையை
முறித்துக் கறித்த வெறுப்போடு
முடவுத் தாழை மடற்றவீ
முழுத்த இளநீர்க் குலைசாடி

மதுரம் கொழிக்கும் சுவைத்தேறல்
வடியப் பலவின் கனிகீண்டு
வன்பொற் றகட்டின் நறுஞ்சுளையை
வாங்கி யகழ்ந்து வள்ளுகிரால்

எதிர்வீற் றிருக்கும் இளமந்திக்
கெடுத்தே கடுவன் கொடுத்துமகிழ்
இணையில் சோழ வளநாடும்
ஈறில் புகலிப் பதியும்செய்

முதிரும் தவத்தால் முளைத்தமுதிர்
ஞானக் கொழுந்தே! தாலேலோ!
முத்தின் சிவிகை பெற்றமுழு
முதல்வா! தாலோ தாலேலோ! (2)

கன்று ருரித்த பான்மையெனக்
கடையேன் நெஞ்சும் கனியச்செய்
கருணைப் புயலே! சுகக்கடலே!
கலைவாள் மதியே! மதிக்கொழுந்தே!

என்னு லறியாப் பதந்தந்தாய்
என்னும் மொழிக்கே இலக்கான
ஏழைச் சிறியேன், இடர்கெடுத்துன்
இணையார் கமலத் திருவடியாம்

பொன்னார் கழலி னொளிகாட்டும்
புனிதத் திருநா ளென்நாளோ?
புவனம் ஒருங்கே அழிந்தாலும்
அழியாத் தோணி புரம்தோன்றி
முன்னு என்னைப் பணிகொண்ட
முனிபுங் கவனே! தாலேலோ!
முத்தின் சிவிகை பெற்றமுழு
முதல்வா! தாலோ தாலேலோ! (3)

பாகம் ஒருபெண் குடியிருக்கும்
பரம னருளால் தெரித்ததொரு
பரமா கமத்தின் திருநெறியே
பாரிற் பரவி வேர்கொள்ளச்
சோக மெனவே பாவிக்கும்
சுருதிப் பொருளும், ஒருநான்காம்
தொன்மா மறையின் துணிபொருளும்,
சூத னெலிமா லையுமெல்லாம்
நாகம் சிலையா நாணேற்றும்
நம்பன் கழலே காண்மினென,
நாட்டா ரறியத் தேற்றிய சீர்
ஞானச் சுடரே! சுடர்விளக்கே!
மோகக் கடற்கே கரையாகும்
முத்தித் தலமே! தாலேலோ!
முத்தின் சிவிகை பெற்றமுழு
முதல்வா! தாலோ தாலேலோ! (4)

உம்மை வினையால் இம்மையிலும்
உறுதீ வினைக்கே யாளாகி
ஒறுக்கும் நரகம் வேண்டாதே
உடையாய் நீயும் கண்காணக்
கொம்மைத் துயர்சூர் வெம்மைத்தீக்
குளித்த தெல்லாம் போதாதோ?
கொல்லைச் சில்லே றேறிவரும்
குழகற் கினிய குமரேசா!
தம்மை யடைந்தார்க் காத்தருளல்
தலைவர் கடனும் எனநாடித்
தண்பூம் புகலித் தலைவா! நின்
தாளே யடைந்தேன் தமிழேபோல்
மும்மைத் திருநீற் றொளிகிளரும்
மொய்ம்பார் குமரா! தாலேலோ!
முத்தின் சிவிகை பெற்றமுழு
முதல்வா! தாலோ தாலேலோ! (5)

பொங்கும் இசைத்தமிழ் அருவிகொழித்தெழு
புனிதத் தனி வெற்பே!
புத்தமு தக்கட லே! சிவ ஞானப்
புணரி யெழுந்திரையே!

எங்கள் பவக்கடல் தொலைய வறங்கொள
எழுவட வைக்கனலே!
எற்பினை யழகிய பொற்கொடி யாக்கிய
ஏழிசை யற்புதனே!
வெங்குரு மேவி விளங்குரு வாகிய
வேதமு தற்பொருளே!
மீனவ னைத்தெறும் நோய்தணி யத்திரு
நீறணி வித்தகனே!
சங்கரி ஏற்றிய ஞான விளக்கே!
தாலோ தாலேலோ!
சந்தத் தமிழ்தர வந்தருள் ஞானன்!
தாலோ தாலேலோ! (6)

தெய்வ நெறிக்கெனை யாட்பட நீட்டிய
செங்கம லத்தாளால்
சீரொளி முத்தின் சிவிகை நடத்திய
செல்வக் குமரோனே!
வையம் அளித்த மலர்க்கொடி தந்ததொர்
வண்பொற் கிண்ணமொடு
வளர்பொற் றாளமும் ஏந்திய செங்கை
மாதவ மறையோனே!
செய்வளம் ஓங்க உழுந்திடும் மள்ளர்
சிறுகுடிவாழ் இளைஞர்
திரையர்தம் மாமட மகளைக் காமுறு
சீகா ழிப்பதியோய்!
சைவம் அளித்ததோர் தெய்வச் சரபம்!
தாலோ தாலேலோ!
சந்தத் தமிழ்தர வந்தருள் ஞானன்!
தாலோ தாலேலோ! (7)

சிந்தித் தெழுபவர் நெஞ்சிற் கவலைகள்
சிந்தி யெழுஞ்சுடரே!
சிவஞா னத்தெளி தேனே! எனையாள்
செழுமா மணிமுத்தே!
புந்தித் தடம்நனி தெளியத் தெளியப்
பொங்கு பரா அமுதே!
புலனற வென்றெழு வீரர் முடிக்கணி
புனைகழ லரியேறே!
சந்தத் தளிர்மலி போதி அசோகிவை
சாய்த்தெழு கடகரியே!
சைவமு தற்றனி நாயக மே! மறை
சாற்றிய வேள்விசெயத்
தந்தைக் குக்கிழி தந்தவ ரோதயன்!
தாலோ தாலேலோ!
சந்தத் தமிழ்தர வந்தருள் ஞானன்!
தாலோ தாலேலோ! (8)

மாயாத சூர்ப்பகை மாயாத் தேயா முடிவாக
வானாடர் கோமகன் மேனாள் நாளார் மலர்தூவிச்
சாயாத அன்பொடு தாழா வீழாத் தொழுதேத்தித்
தாவாத நல்லருள் தேவி சீரார் நீள்காழி

வேயாடு தோளியொர் கூறு நீறு டிறைவற்கே
மேலான இன்னிசை யோடே வாடா மலர்மாலைத்
தேயாத செந்தமிழ் ஈவாய்! தேவா! தாலேலோ!
சீகாழி வாழ்முத லானாய்! தாலோ தாலேலோ! (9)

தானே தனைநிகர் ஞானா! தாலோ தாலேலோ!
தாயா யெனக்கருள் நேயா! தாலோ தாலேலோ!
ஊனே புகுந்துணர் வானாய்! தாலோ தாலேலோ!
ஓவாத பேரருள் ஊற்றே! தாலோ தாலேலோ!

ஆனே றுயர்த்தவன் பாலா! தாலோ தாலேலோ!
ஆயாத சீர்மறை யோனே! தாலோ தாலேலோ!
தேனார் செழுந்தமி ழாளீ! தாலோ தாலேலோ!
சீகாழி வாழ்முத லானாய்! தாலோ தாலேலோ! (10)

---

## செய்திச் சுருக்கம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி கோயில் திருப்பணியை, ரூபா 50 லட்சம் அளவில் செய்து நிறைவேற்றுவதற்காக அனைத்திந்தியக் குழு (All-India Committee) ஒன்றை, திருமிகு டாக்டர் சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் அமைக்கும் சிறப்பு விழா, 12—12—65 ஞாயிறு அன்று, சென்னையில் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலகத்தில், ஸ்ரீரங்கம் தேவஸ்தானத் தர்மகர்த்தர்கள் குழுவினரால் ஏற்பாடு செய்யப் பெற்று, மிகவும் சிறப்புற நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் திருமிகு எம் பக்தவத்சலம் அவர்களும், டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களும் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அதுபோது நமது அறநிலைய ஆணையாளர் திருமிகு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்கள், ஸ்ரீரங்கம் தலத்தின் மாண்பினையும், ஆழ்வார்களிற் பதினொருவர் அங்கு மங்களாசாசனம் செய்திருக்கும் சிறப்பினையும், அங்குள்ள 7 பிராகாரங்கள் — 21 கோபுரங்கள் — 35 துணை ஆலயங்கள் ஆகிய பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கலைச் செல்வங்களைப் பாதுகாத்துப் போற்றும் முறையில் செய்ய வேண்டியிருக்கின்ற திருப்பணிகளின் விவரங்களையும், முன்பே அங்கு அண்மையிற் செய்து முடிக்கப் பெற்றுள்ள சில திருப்பணிகளையும் பற்றிக் குறிப்பிட்டுச் சிறந்ததோர் உரை நிகழ்த்தினார்கள்.

பின்னர்த் திரு. டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள், இந்து அறநிலைய ஆட்சித் துறைக்குத் தாம் 45 ஆண்டுகளுக்கு முன்னர் ஆற்றிய தொண்டினை நினைவு கூர்ந்தார்கள். 'மதிப்பியல் தொண்டு' (Honorary work) செய்வதன்கண் உள்ள அரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நினைத்துத் தாம் பெரிதும் தயங்கிய போதிலும், ஸ்ரீரங்கநாத சுவாமியின் திருவருளை முன்னிட்டே தாம் பக்தி சிரத்தையுடன் இத்திருப்பணிக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்க இசைய நேர்ந்தது என்றும், திருப்பணியை விரைவில் முடித்துத் தம் வாழ்நாளிலேயே கண்டு தரிசித்து மகிழும் பாக்கியத்தினை ஸ்ரீரங்கநாதசுவாமிதான் தமக்கு வழங்கியருள வேண்டும் என்று தாம் பிரார்த்தித்துக் கொள்வதாகவும், உருக்கமும் ஆர்வமும் அமையச் சொற்பொழிவாற்றினார்கள்.

பிறகு நமது முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், அனைத்திந்திய முறையில் அமைக்கப்பட்டுள்ள இத் திருப்பணிக் குழுவிற்குத் தலைமை ஏற்க மிகவும் தகுதிவாய்ந்தவர் திரு. டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களே யாவர் என்றும், அவர்கள் இதற்கு இசைவு அளித்து முன்வந்தமை நம்முடைய சிறந்த பாக்கியமே யாகும் என்றும் பாராட்டி, அனைவரும் திருப்பணி இனிது நிறைவேறுவதற்கு எல்லா வகைகளிலும் உதவிபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

கூட்டத்தின் தொடக்கத்தில், ஸ்ரீரங்கம் கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கே. ஸ்ரீநிவாசன் அவர்கள், விழாத் தலைவர்களுக்கு வரவேற்புரை படித்துக் கொடுத்தார்கள். தஞ்சைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள். திரு. இராதா-ஜெயலட்சுமி சகோதரிகள் கடவுள் வணக்கமும், தேசிய வாழ்த்தும் பாடினார்கள். பெருமக்கள் பலர் விழாவுக்கு வந்திருந்து சிறப்பித்தனர்.

—ஆசிரியர்.

# முப்பாலில் முத்திப்பால்

(திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.)

வள்ளுவர் சுரந்த வளப்பாலை முப்பால் என்றும் வழங்குவர். அதனால் அதற்கப்பால் உள்ள வீட்டின் பாலை அந்நூல் கூருமல் விடுத்தது என்று கூறுவோரும் உளர். ஆனால்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்னும் அழகியதோர் வெண்பா, அவர் தம் கூற்றை மறுக்கின்றது. அத்துடன் கீழ்க்காணும் சங்கப் புலவர் சிலரின் துங்கத் தமிழ் வெண்பாக்களும் திருக்குறள் ஓர் வீட்டு நூலே என்பதை வற்புறுத்துகின்றன.

### கீரந்தையார்

தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்

### நரிவெரூஉத் தலையார்

இன்பம் பொருள் அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழி நூல்.

### இழிகட் பெருங்கண்ணனூர்

இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியின் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள் வெண்பா.

திருக்குறள் சீரியதோர் வீடு நூல்தான் என்பது மட்டும் அல்ல, அது பின் வந்த பீடுடன் வீடுகாட்டும் பொருள் நூல்கட்கெல்லாம் பிறப்பிடமும் ஆகவும் அமைந்துள்ளமை, அதன் பெருஞ் சிறப்பாம்.

ஓம் என்னும் பிரணவத்தின் உட்பொருளாயும், உயிர்தரு குழவிகளாயும், உயிர்த்த குழவிகளாயும், உயர்ந்த விரிவுரைகளாயும் விளங்குகின்றன. ஆரிய வதமும், அரும் தமிழ்த் திருவாசகமும், அதே தன்மைத்தாய்த் திகழ்கின்றது. தமிழ்மறைக் குறளும் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற குறள் சகல புவனங்கட்கும் தாயகமாகிய இறைவனைக் குறிப்பிடுவதோடு அமையாமல், இவ்விறைவன் 'ஓம்' என்னும் பிரணவ வடிவினன் என்னும் உண்மையையும் உணர்த்துகின்றது. அகரம் என்பதின் 'அ' எழுத்தும் உலகு என்பதின் 'உ' எழுத்தும் எல்லாம் என்பதின் 'ம்' எழுத்தும் ஆகிய இம்மூன்றுமே 'ஓம்' என்பதன் வியஷ்டியாகக் காட்சியளித்தன. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளின் வடித்தெடுத்த வளஞ்சார் சாறெனத் திகழ்கின்றது, இரண்டாவது குறள் வெண்பா. இத்திருக்குறள் நூல் முழுவதையும் 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்று நம்மைப் பார்த்து வினவுகிறார் வள்ளுவர். எனவே திருக்குறள் நூலின் இதயமும் சிகரமும் இந்தக் குறள் ஒன்றேயாம். சகல கலைகட்கும் சார்பும் இலக்கும் இறைவன்தாளே என்பதுதான் அக் கருத்து. இதைப் பெரிய புராணம் அடியொற்றி மிளிர்கின்றது.

திருக்குறள் முதல் வெண்பாவால் குறிக்கப்படும் இறைவனைப்பற்றி விளக்கத்தான் பெரிய புராணம் என்பது தோன்ற அவ்வெண்பாவின் இறுதிச் சொல்லாகிய 'உலகு' என்பதையே தமது நூலின் முதற் சொல்லாக அமைத்து உலகெலாம் என்று பாடியுள்ளார், சேக்கிழார் பெருமான். அத்துடன் குறட்பாயிரத்தின் இரண்டாம் செய்யுளின் கருத்தையும் தம் நூலில் இரண்டு இடங்களில் அழகுற அமைத்துப் பாடியுள்ளார்.

"அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும்
கழலே எனக்கண்டு
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார்
சிறிய பெருந்தகையார்"
—சண்டேசுரர் புராணம்

'உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப்
பயின்றவற்றால்
தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற்
செறிவு என்றே'
—சிறுத்தொண்டர் புராணம்

இனி, இதுபோன்றே முத்திக்கு வழி காட்டும் பத்திக் குறட்பாக்கள் சிலவற்றைச் சுருக்கமாய்க் காண்போம். அத்துடன் அப்பாக்களை வீட்டுநூல்கள் சிலவும் எவ்வாறு பயன் படுத்துகின்றன என்பதையும் ஒருவாறு காண்போம்.

1. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இதைச் சூளாமணி பின்வருமாறு கையாள்கிறது.

"இருள்புரி உலகம் சேரா இயல்நெறி
பயந்த பெம்மான்
பொருள்புரி உலகம் காண்பார்
புண்ணிய உலகம்'
,

2. "அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்
கல்லால்
பிறவாழி நீந்த லரிது."

இதில் வரும் 'பிறவாழி' என்பதனால் குறிக்கப்படும் துன்பம் என்பதன் இடையறு இயல்பை மணிவாசகர்,

'கடலின் திரையது போல்வரு கலக்கம்' என்று வருணிக்கிறார்.

3. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

இக்குறளடியைத் திருவாசகம்,

"பிறவியென்னும் இக்கடலை நீந்தத் தன்
பேரருள் தந்தருளினான்"

என்றும்,

"தனியனேன்பெரும் பிறவிப் பவ்வத்து
எவ்வத் தடந்திரையால்
எற்றுண்டு பற்றொன்றின்றி"

என்றும் முறையே விளக்குகின்றது. இதனையே,

"அறவியங் கிழவோன் அடியிணை ஆகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாகலின்"

என்கிறது மணிமேகலை என்னும் காவியம். இன்னும் அதிக விளக்கமாகப் பெரிய புராணம் இதைப் பேசுகின்றது.

"அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கின
அடியார் பால்
இணையில் பவம் கிளர் கடல்கள் இகந்திட
இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை தங்கிய
புணர் பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த
பெருந்தோணி"
(ஞான சம்பந்தர் புராணம்)

4. "பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு"

5. "பற்றுக பற்றற்றான்பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு."—குறள்.

இவற்றை அடியொற்றிப் பாடப்பெற்ற திருவாசகச் செய்யுளைக் காண்க.

"பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறை
யான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித்
தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு
கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான்
தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றற நாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதும் காண் அம்
மானாய்."

மேற்கூறிய குறட் கருத்தையும் "கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற குறட் கருத்தையும் பிணைத்

துப் பாடப்பெற்ற திருவாசகச் செய்யுள் இது வாகும்.

"பற்றுங்கவை பற்றீர் பற்றும் பற்றுங்கதுபற்றி
நற்றுங்கதி அடைவோ மெனிற் கெடுவீர் ஓடிவம்மின்
தெற்றுர் சடை முடியான் மன்னு திருப் பெருந் துறை இறைசீர்
கற்றுங்கவன் கழல்பேணின ரொடும் கூடுமின் கலந்தே"

6. "மற்றும் தொடர்ப்பா டெவன் கொல் பிறப் பறுக்கல்
உற்றுர்க் குடம்பு மிகை."

இக்குறள் வெண்பாக் கருத்து சமய உலகின் தலை யாய சிலவற்றுள் ஒன்று. அதனுல் இதை எடுத் தாளாதார் இலர் எனலாம்.

(அ) "மற்றும் தொடர்ப்பாடெவன் கொல் பிறப் பறுக்கல்
உற்றுர்க் குடம்புமிகை இசையுள்வழி
பற்றுவினையாய்ப் பலபல யோனிகள்
அற்றுய் உழலும் அறுதற் கரிதே,,
—வளையாபதி

(ஆ) "ஓடும் கவந்தியுமே உறவென்றிட்டுள் கசிந்து
தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து"
(திருவாசகம்)

(இ) "சிந்தை இடையரு அன்பும் திருமேனி தன்னில் அசைவும் கந்தை மிகையாம் கருத்தும் கையுழவாரப் படையும்"
— பெரிய புராணம் (அப்பர்)

7. "பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருளானும் மாணுப்பிறப்பு."

இதைத் திருவாசகம் எவ்விதம் ஆளுகின்றது பாருங்கள்.

"பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந் தேனை ஆட்கொண்ட"

ஐயா ... ... ... ... ... ...

(ஆ) "வைத்த நிதி பெண்டிர் மக்கள்குலம் கல்வி யென்னும்
பித்த உலகில் பிறப் போடிறப்பென்னும்
சித்தவிகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்க்கே'

8. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி."

இதன் 'மெய்ப்பொருள்' என்பதைப் பெரிய புரா ணமும் 'மற்றீண்டு வாராநெறி' என்பதைத் திரு வாசகமும் முறையே கையாண்டுள்ளமை காண்க.

(ஆ) "வேதவனத்தின் மெய்ப்பொருளின்
அருளால் விளங்கும் மணிக்கதவம்."—பெ.பு

(ஆ) "மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம் பதியாகவும்"—தி.வா.

9. "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்."

10. "வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்"—குறள்

இவற்றைப் பெரிய புராணம் எப்படிக் கூறுகிறது பாருங்கள்:

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினுர்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்."—பெ பு.

திருவாசகம் இதை எப்படி ஆளுகின்றது காண்மின்.

"வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி எனையருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அருமாமணி முத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே"

11. "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்."—குறள்

இதுவும் சர்வசமயக் கொள்கைகளில் தலையாய தொன்று. இதைத் திருவாசகம் கீழ் வரும் செய்யுட்களில் ஆண்டுள்ளமை காண்க.

"பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தப்
பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனதென்று யாதும்
அன்றி அறுதலே."

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிபட்டுத்
தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதை குணம் பிறருருவம் யான் எனது என்
உரைமாய்த்துக்
கோதில் அமுதா னானைக் குலாவு தில்லை
கண்டேனே."

இதில் ஒரு நயம். வானோர் உலகத்தவர் உண்பது கோதுடை அமுதம். வானோர்க்குயர்ந்த உலகத்தவர் உண்பது கோதிலாத அமுதம். இக் கருத்தை வள்ளுவரின் "வானோர்க்கு உலகம்" என்னும் தொடரும், அதற்கு இணையான மணிவாசகரின் "கோதிலமுதானை" என்னும் தொடரும் முறையே அழகுற விளக்குகின்றன. இது யாவருக்குக்கிட்டும் எனின், யான் எனது என்னும் செருக்கு அற்றார்க்கு என்று தெய்வப் புலவர் இருவருமே அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

12. 'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற் கின்பம்
கூடி முயங்கப் பெறின்."

என்பது காமத்துப் பாலின் கடைசிக் குறள் வெண்பா. இதனைத் திருவாசகம் பொன் போல் போற்றிப்பெயர்த்தெடுத்தாளுவதைப்பாருங்கள்.

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன்
திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்(று)
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப் பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும் காண் அம்மானாய்"

எனவே திருவாசகத் தெய்வப்பனுவலுக்கும் குருவாசகக் கொழு கொம்பாய் நிற்கின்றது தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருக்குறள் என்ற தமிழ் வேதம் என்னும் உண்மை யாவர்க்கும் தெள்ளிதின் விளங்குமென்று நம்புகிறோம்.


இதுகாறும் கண்ட உதாரணங்களால், முப்பாலில் முத்திப்பால் எப்பாலும் தித்திப்பாய், முழுவதும் ததும்புவதைக் காண்கின்றோமல்லவா? ★

---

## பாவை விழாக்கள்

| | |
|---|---|
| திருத்தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயில் ... ... | 2-1-66. |
| கண்டதேவி சொர்ண மூர்த்திஸ்வரர் கோயில் ... ... | 19-12-65. |
| கோவிலூர் கொற்றவாளீஸ்வரர் ... ... ... | 21-12-65. |
| கல்லல் பகச்சால விநாயகர் கோயில் ... ... ... | 23-12-65. |
| சாக்கோட்டை வீரசேகர உமையாம்பிகை கோயில் ... | 31-12-65. |
| அரண்மனை சிறுவயல் மும்முடிநாத சுவாமி கோயில் ... ... | 2-1-66. |
| அழகாபுரி அழகிய நாச்சியம்மன் கோயில் ... ... ... | 4-1-66. |
| கானாடு காத்தான் சிவலோகநாத சுவாமி கோயில் ... ... | 26-12-65. |
| சிவகெங்கை விசுவநாதசுவாமி கோயில் ... ... | 16-12-65 & 14-1-66. |
| சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் அய்யனார் கோயில் ... ... | 20-12-65. |
| கத்தப்பட்டு கண்ணங்குடி நாயனார் கோயில் ... ... ... | 22-12-65. |
| முறையூர் சொக்கநாதசுவாமி கோயில் ... ... ... | 25-12-65. |
| திருவொற்றியூர் வால்மீகநாத சுவாமி கோயில் ... ... | 17-12-65. |
| திருவேகம்பத்து ஏகாம்பரநாதசுவாமி கோயில் ... ... | 5-1-66. |
| சென்னை கச்சபேசுவரர் கோயில் ... ... ... | 5-1-66. |

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி,
ஸ்ரீரங்கம்.

# செயற்கருஞ் செயல்

(செந்தமிழ் வித்தகர் திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.)

செயற்கருஞ் செயல்கள் செய்யும் சக்தியுடைய பெரியவர்களைப்பற்றிச் சிலரிடையே ஒரு தவறான எண்ணம் பரவி இருக்கின்றது. இப்பெரியோர்கள் தங்களுடைய ஆன்மார்த்த முன்னேற்றத்தைப் பற்றி மட்டும் கவலைப்படுவார்களே தவிர, பிறருடைய வாழ்வில் தாழ்வில் பங்கு கொள்வார்களோ என்று ஐயப்படுகின்றவர்கள் உண்டு. உண்மையை ஆராயுமிடத்துப் பெரியோர்கள் அனைவரும் பிறருடைய சுக துக்கங்களில் பங்கு கொள்ளுபவர்களே ஆவர். ஞானசம்பந்தர் போன்ற பெரியவர்களும் இதற்கு விதி விலக்கன்று. அடியார்கள் படும் துயரைப் பொறாத ஆண்டவன் எங்ஙனம் விரைந்து வந்து அடியார்களுக்கு அருள் புரிகின்றானோ அதேபோன்று இவர்களும் மக்கள்படுகின்ற துன்பத்தை விரைந்து போக்க முற்படுகின்றார்கள். உதாரணமாக, திருவீழிமிழலையில் தங்க நேர்ந்த பொழுது அங்கே பெரும் பஞ்சம் உண்டாய்விட்டது. எவ்வளவுதான் ஊரில் பஞ்சம் வந்தாலும் உலகம் போற்றும் பெரியவர்களாகிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றவர்களுக்குப் பஞ்சம் என்பது இல்லை யல்லவா? தனிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பசி என்பது ஏற்படாமல் இருக்க உடன் இருக்கின்றவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். தங்கள் வயிறு நிரம்பிவிடுகின்ற காரணத்தால் பிறர்படுகின்ற துயரைக் கண்டு இப்பெரியார்கள் இது இறைவனுடைய திருவருள், நாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடுவார்களேயானால், அதை நாம் குறை கூறுவதற்கில்லை. அப்படியிருந்தும் இப்பெரியோர்கள் இறைவன் மேல் பழியைப்போட்டுத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளாமல் அந்தத் துயரத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்டவனைப் பாடி, அவனிடத்துப் பரிசில் பெற்று அப்பரிசிலின் மூலம் மக்கள் துயரைப் போக்கப் பாடுபட்டிருக்கிறார்கள். ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் மடம் அமைத்துக் கொண்டு திருவீழிமிழலையில் வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் பஞ்சம் தீருகின்ற வரையில் உணவு பரிமாறியது அனைவரும் அறிந்த விஷயம். எனவே செயற்கருஞ்செயல் செய்யும் பெரியவர்களாயினும் தங்கள் முன்னேற்றமே பெரிது என்று மதிக்காமல் பிறர் துயரம் போக்கப் பாடுபட்டனர் என்பது இன்றைய சமுதாயத்தில் வாழுகின்ற நமக்குப் பெரியதொரு படிப்பினையாகும்.

இதைவிடப் பெரியதொரு காரியத்தையும் ஞானசம்பந்தர் நிகழ்த்தியிருக்கிறார். வணிகன் ஒருவனுக்கு 7 பெண்கள் இருந்ததாகவும், தன்னுடைய தமக்கையின் மகனுக்கு ஒவ்வொரு பெண்ணாக மணஞ்செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி, 6 பெண்களை மணஞ்செய்து தராமல் ஏமாற்றி விட்டதாகவும், ஒரு வரலாறு உண்டு.

இறுதியாகத் தனது அத்தை மகன் துயரங்கண்டு பொறாத ஏழாவது பெண் அவனை மணஞ் செய்து கொள்வதற்காக ஒருவருக்கும் தெரியாத நிலையில் அவனை அழைத்துக்கொண்டு இரவோடு இரவாகப் புறப்பட்டு விட்டாளாம். திருமருகல் என்ற ஊரிலே இரவு வந்து தங்கியிருக்கும்போது வணிகனைப் பாம்பு கடிக்க, அவன் இறந்துவிடுகிறான். திருமணம் ஆகாத நிலையில் அவனைத் தொட்டு அழவும் முடியாமல் மிகவும் வருந்திய அவ் வணிகர் குல மங்கை இறைவனை நினைந்து கதறி அழுகின்றாள். அவளுடைய அழுகுரலைக் கேட்ட ஞானசம்பந்தர் ஓடோடியும் வந்து அவளுக்கு நேர்ந்த கதியை விசாரித்து அவள் துயரத்தைப் போக்குவதற்காக இறைவன்மேல் பாடத் தொடங்குகிறார்.

“ஐயனே, சடையை உடையவனே என்றும், உன்னையல்லால் வேறு சரணில்லை என்றும், விடையின் மேல் ஏறுபவனே என்றும், வெருவி விழுந்தும் இப்பெண் வாடி வருந்துவதை நீ அறியவில்லையோ? மடைகளிலே குவளை மலர் மலர்கின்ற திருமருகலிலே உள்ளவனே இவள் வாடி வருந்துவது உனக்கு அழகோ? என்ற கருத்தில் பாடுகின்றார். இறுதியாக 11-வது பாடலிலே மருகற்பெருமானுடைய உண்மையை உணர்ந்து அவன் திரு

வடியை வழிபட்டுத்தாம் பாடுகின்ற காரணத்தால் தம்முடைய பாடல்களைப் பாடுகின்றவர்கள்உலகம் முழுதும் புகழ் பெறுவர் என்ற கருத்தையும் வைத்துப் பெருமான் பாடுகிறார்.

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே

வயஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடியுள் குதலால்
இயல்ஞான சம்பந் தனபாடல் வல்லார்
வியல்ஞானம் எல்லாம் விளங்கும் புகழே

சகுனம், சாஸ்திரம் முதலியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் எல்லா நாட்டிலும் இன்றும் உண்டு. மிகவும் முன்னேறிவிட்டதாகச் சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் கூட தாம் எதிர்பாராத கஷ்டநஷ்டத்தை யடைந்தபொழுது எல்லாம் கால வித்தியாசம் என்று சொல்லிக் கொள்ளுவதைப் பார்க்கின்றோம். இதனால் அறிவது ஒன்றுண்டு. மனிதனுடைய முயற்சி பலிக்காத பொழுதுதான் தன்னையும் மீறிய ஒரு சக்தி இருப்பதைத் தான் அறிகின்றான். பெரியோர்கள் இச்சக்தியை உணர்ந்தவர்கள் ஆயினும், காலத்திற்குக் கட்டுப்பட்டே தம்முடைய காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை உணர்ந்தவர்களாயினும், சந்தர்ப்பம் வரும்பொழுது இந்தச் சட்டங்களை மீறுவதற்கு அஞ்சுவதில்லை, உதாரணமாக: வீட்டுக்காரரை நன்கு அறிந்த ஒருவர் அவரோடு தோழமை கொண்டிருக்கின்ற காரணத்தால் அவரைப் பார்க்கச் செல்லும்பொழுது வீட்டின் வெளியே இருக்கின்ற காவலன் சொல்வதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. சாதாரண சந்தர்ப்பங்களில் காவலனுடைய உத்தரவு இல்லாமல் வீட்டினுள்ளே நுழைவது இயலாது. காவலன் உத்தரவில்லாமல் யாராயிருப்பினும் உள்ளே நுழைய முடியாதென்பது பொதுச்சட்டம். ஆனால் இந்தச் சட்டத்திற்கு எப்பொழுதும் விதிவிலக்குகள் உண்டு என்பதையும் மறுத்தலாகாது. உள்ளே வாழ்பவர் தயவு கிடைக்கக்கூடுமேயானால், காவல் செய்பவன் தயவு தேவையில்லை. அதேபோல மூலப் பரம்பொருளாகிய இறைவனுடைய அருள் கிட்டிவிடுமேயானால் அவர்களுக்கு நாள், கோள் முதலியன பற்றியே கவலையில்லை.

ஞானசம்பந்தர் வேதாரண்யம் என்று சொல்லப்படும் திருமறைக்காட்டில் தங்கி இருக்கும் பொழுது பாண்டி நாட்டிலிருந்து வந்த தூதுவர்கள் ஞானசம்பந்தருடைய வருகை அந்த நாட்டிற்கு மிகவும் தேவைப்படுகிறது என்று கூறினர்கள். பிரசித்தி பெற்றவனாகிய நின்றசீர் நெடுமாறன் மதுரையம் பதியைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆட்சி செய்து வருகிறான். பல்வேறு காரணங்களால் நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக ஞானசம்பந்தர் வருகை தேவைப்பட்டதால் அமைச்சராகிய குலச்சிறை நாயனாரும், பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் ஞானசம்பந்தரை வருமாறு வேண்டித் தூது அனுப்புகின்றனர். அவர்கள் வேண்டிக் கொண்ட உடனேயே ஞானசம்பந்தர் புறப்படச் சித்தமாகிவிட்டார். ஆனால், பக்கத்தில் இருந்தவராகிய, அனுபவத்திலும் ஆண்டினும் முதிர்ந்தவராகிய திருநாவுக்கரசர் ஐயனே: இப்பொழுது தாங்கள் மதுரை செல்வது தகாது ஏனென்றால் 'உறுகோள்தானும் தீய; எழுந்தருள உடன்படுவது ஒண்ணாது' என்று தடுக்கின்றார். அதாவது, நாளும், கோளும் நல்லவையாக இல்லாத காரணத்தால் குழந்தையாகிய தாங்கள் மதுரையம்பதி செல்வதை நான் தடுக்க முற்படுகின்றேன் என்று நாவுக்கரசர் கூறினார். அதனைச் செவியுற்ற செயற்கருஞ் செயல் செய்யும் வீரரான ஞானசம்பந்தர் அப்பரே; "பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால், பழுது அணையாது' என்று விடையிறுத்து விடுகிறார். இதனுடைய பொருளைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும், நாள் கோள் முதலியவற்றால் ஓரளவு தீமை ஏற்படுவது உண்டு என்றாலும், இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்களுக்கு இவற்றால் ஏற்படுகின்ற தீமை கிடையாது என்ற அழகிய கருத்தை 'வேயுறு தோளி பங்கன்' என்ற பாடல் மூலம் ஞானசம்பந்தப் பெருமான் எடுத்து விளக்குகின்றார்.

மூங்கிலைப்போன்ற தோள்கள் உடைய உமாதேவியை ஒரு பாகத்திலே வைத்தவனும், ஆலகால

விஷத்தை உண்டு கண்டத்திலே அடக்கியவனும், நல்ல வீணையைக் கையிலே வைத்து எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருப்பவனும் ஆகிய இறைவன் குற்றமற்ற சந்திரனையும், கங்கையையும், தலையின் மேல் தாங்கி என் உள்ளத்திலே வந்து குடி கொண்ட காரணத்தால் ஞாயிறு முதல் சனி வரையில் உள்ள கிழமைகளும் ராகு, கேதுக்களாகிய கோள்களும் நம்மை ஒன்றுஞ் செய்யா. அடியார்களுக்கு அவை நல்லவையாகவே உதவும்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
என்உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளிசனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே

கண்ணை இழந்த நம்பியாரூரர் வட திருமுல்லை வாயிலை அடைந்து உள்ளம் உருகித் தம் பிழையை நினைந்து இதோ பாடுகிறார்

எல்லாச் செல்வமும் எனக்கு உன் திருவடியே என்று நினைத்து ஒருவரையும் மதியாமல் தவறுகள் எல்லாம் செய்து கவலையற்றுத் திரிந்தேன். வாசனை பொருந்திய சோலைகள் சூழ்ந்த வடதிருமுல்லை வாயிலாய்! வாயினல் உன் புகழ் பாடுகின்றேனே. அதற்காகவாவது என் துயரைக் களைய மாட்டாயா? என்று பாடுகிறார்.

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினல் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசு பதாபரஞ் சுடரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்று அழைக்கப்படுகின்ற நம்பியாரூரர் திருவொற்றியூரிலே சங்கிலியாரைத் திருமணஞ்செய்துகொண்டு வாழ்கின்றார். சங்கிலியை மணஞ்செய்து கொள்ளுகின்றார். ஆனல் வசந்தகாலம் தோன்றிய உடன் தென்றல் காற்று ஒற்றியூரில் வீசுகிறது. வசந்தமும் தென்றலும் சேர்ந்தால் சாதாரண மனிதர்களுக்குக் காதல் நினைவு தோன்றும். நம்பியாரூரருக்கோ காதல் நினைவு தோன்றாமல் திருவாரூரிலே தியாகராஜா வசந்த உற்சவம் கொண்டாடுவானே என்ற எண்ணம் தோன்றுகிறது. உடனே, வீதிவிடங்கன் உலா வருகின்ற காட்சியைக் காணவேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய் உடனே புறப்பட்டுத் திருவாரூரை நோக்கிச் சென்றுவிடுகிறார். தியாகராஜப்பெருமான்மேல் கொண்ட தீராக்காதல் சங்கிலிக்குத் தான் செய்துகொடுத்திருந்த வாக்குறுதியை மறக்குமாறு செய்துவிட்டது. என்றாலும், வாக்குறுதியன்றோ? ஆண்டவன் அருளைப் பெற்றவர்களானுலும்--தியாகராஜப்பெருமானேடு நேரே நின்று பேசுகின்ற பெருமை படைத்தவரானுலும் வாக்குத் தவறியபொழுது தண்டனை தொடர்ந்துவந்துவிடுகிறது. சுருங்கக்கூறுமிடத்து, திருஒற்றியூர் எல்லையைக் கடந்தவுடன் சுந்தரமூர்த்திகள் தம்முடைய பார்வையை இழந்து விடுகிறார். உடனே தாம் செய்த பெரும் தவற்றை உணர்கிறார். கண்ணைக் கெடுத்துவிட்ட ஆண்டவன்மேல் கோபங்கொள்ளாமல் தாம் செய்த பிழையை நினைந்து பெரிதும் வருந்தித் திருவெண்பாக்கம் முதலிய ஊர்களுக்குச் சென்று "பிழையுள்ளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால் பழியதனைப்பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்" என்று மனம் உருகிப் பாடிக் கொண்டு நெடுகச் செல்கின்றார், காஞ்சிமாநகரம் சென்று ஏகம்பனை வழிபடாமல் காமாட்சியின் திருக்கோயிலுக்குச் சென்று முதலில் அவளை வழிபட்டு, அவளுடைய திருவருளால் ஒரு கண்ணைப் பெற்றுவிடுகின்றார். அவளுடைய திருவருளால்தான் ஒருகண் கிடைத்தது என்பதைச் சேக்கிழார் மங்கை தழுவக் குழைந்தார், மறைந்த இடக்கண் கொடுத்தார் என்று பாடுகிறார். ஒரு கண்ணினுலே ஏகம்பனுடைய அழகைக் கண்டு

ஆற்றாத நம்பியாரூரர் மனமுருகிப்பாடுகின்றார். இகழ்தல் இல்லாத இறைவனை வழிபாடுசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தால் உமை நங்கை வழிபடக் கம்பை மாநதியிலே வெள்ளம் வருமாறு செய்து அவளுக்கு அச்சம் உண்டாக்க, அஞ்சிய அன்னை, இறைவனைத் தழுவிக்கொள்ள வெளிப்பட்ட கள்ளக்கம்பனைக்காணும் படியாக அடியேன் கண்பெற்றேன் என்று பாடுகின்றார்.

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. ★

---

**செய்திச் சுருக்கம் :**



திரு. சிவகுமார்.

# அமெரிக்கர் இந்துவாகிறார்

இதுவரை இதர மதங்களைச் சேர்ந்த 2649 பேர்கள் இந்துவாக விரும்பி, மதுரை ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீஞானசம்பந்த தேசிக சுவாமிகள்** இடத்தில் முறைப்படி தீட்சை பெற்று இந்துப் பெயர்களைச் சூடிக் கொண்டனர்.

சமீபத்தில் **ரெக்ஸ்ஹால்** என்ற அமெரிக்கர் ஒருவர் இந்துவாக விரும்பிச் சுவாமிகளிடம் அணுகி ஆசிபெற்றார்.

இந்துவாகத் தாமே விரும்பி மாறும் 2-வது வெள்ளைக்காரர் இவர். ஏற்கனவே ஐரோப்பியரான பிரதர் **லூஸியன் பீட்டர் ஜார்டியன்** என்பவர் 13—12—61 அன்று முறைப்படி தீட்சை பெற்று இந்துவாக மாறி, **தட்சிணாமூர்த்தி** என்று பெயர் சூட்டப் பெற்றார். அவர் சிவபூசையும் எடுத்துக் கொண்டு முறைப்படி பூசை செய்து வருகிறார். தற்போது அவர் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த ரெக்ஸ்ஹால் 44 வயதானவர். கல்யாணமாகாதவர். சைவர். அவருக்குச் **சிவகுமார்** என்று பெயர் சூட்டப் படவிருக்கிறது.

தாம் இந்துவாக மாறுவதற்கான காரணங்களை, அவர் ஸ்ரீ சுவாமிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் விளக்கியுள்ளார்.

"இந்துமதம் 4 முக்கிய அம்சங்கள் உடைய மதமாகும். ஆகவே இது பூர்ண சதுரத்தைப் போன்றது. மற்ற மதங்கள் இந்த சதுரத்தில் அமைந்துள்ள முக்கோணங்களாகும். பூரணத்துவம் நிறைந்த ஒரே மதம் இந்துமதம் என்று நான் கருதுகிறேன். ஆகவே நான் இந்துவாக விரும்புகிறேன்" என்று கூறியுள்ளார்.

காரைக்குடி அளகப்பா கல்லூரி எம். ஏ. வகுப்பு மாணவரான ஸ்ரீ சீமைச்சாமி என்ற கிறிஸ்தவரும், இதேபோல் இந்துவாக விரும்பித் தீட்சை பெற்றுள்ளார்.

---

# கோயிற் கலை

(பேராசிரியர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A, B. L., M.O.L.)

பலவகையான விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக அமையும் புறக்கோலமே நாகரிகம். இந்த நாகரிகத்தில் பழுத்துக் கனிந்து மக்களின் வாழ்க்கை அனுபவமாக விளங்குவதே பண்பாடு. இந்தப் பண்பாட்டின் இயல்பு அதற்கேற்ற கலைகளாக வளர்கின்றவற்றின் போக்கிலே தோன்றும்.

கலைகள் ஒருசில போது உலகில் உள்ளவற்றை உள்ளபடியே விளக்குவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. கிரேக்கர்கள் வடித்த அப்பாலோவின் ஆண்வடிவமும் வீனசின் பெண்வடிவமும் இந்த வகையில் மிகமிகச் சிறந்தன. உள்ள தன் சாயலாகவே கலைப்பொருளை அமைக்கும் இதனைச் சாயல்கலை என்று வழங்கலாம்.

ஜப்பானியருடைய கலைகளைப் பார்த்தால் அவற்றில் உள்ள கோடுகளிலும், வளைவுகளிலும் நிறங்களிலும் நம் மனம் தன்னை மறந்து தேங்கி நிற்கிறது. அங்கே ஒன்றன் சாயலைக் காண்பது என்பது இல்லை. ஏதோ ஓர் உட்பொருளைக் காட்டும் முயற்சியும் இல்லை. கோடுகளோ நிறங்களோ அமைந்த அமைப்பிலோ, அல்லது கோலத்திலோ அழகு தோன்றுகிறது. எனவே இத்தகைய கலையைக் கோலக்கலை எனலாம்.


நம் தமிழ் நாட்டில் நடராஜரது திருமேனியைப் பார்க்கின்றோம். அது ஏதோ ஒன்றைப் பார்த்து அமைத்தது என்று சொல்வதற்கில்லை. அங்குள்ள அழகு அங்கே தோன்றும் கோடுகளுடைய அமைப்பில் உள்ளதாகத் தோன்றவில்லை. அந்தக் கோடுகளை மட்டும் பார்ப்பது என்றால் "கைகளோ முறிபடும் கைகள்" என்று சிவப்பிரகாசர் பாடுவது போலத்தான் நாமெல்லாரும் கூடப் பாடவேண்டும். ஆனால் அதைப் பார்த்தவுடன் அந்தப் புறக்கோலத்தையும் ஊடுருவிப் பாய்ந்து நமது உள்ளம் ஓர் அழகிய கருத்தைக் கண்டு ஈடுபடுகிறது. அதைப் பார்த்தவுடனே ஆண்டவனின் பேரின்பவடிவம் நம் மனத்தில் பதிந்துவிடுகிறது. இந்த உலகமும் நாமும் இயங்கி அவன் உள்ளீடாக இயங்குகிற இன்பக்கூத்து நம்முடைய இருதயக் குகையிலும் நம்முடைய இரத்தத் துடிப்பிலும் விளங்குவது போலத் தோன்றுகிறது. தீமையும், பொய்யும் அலங்கோலமும் அழிந்து ஒழிய அதனை வென்ற வெற்றியில் உண்மையும், நன்மையும் அழகும் கூத்தாடுவது போலத் தோன்றுகின்றன. அவன் கையிலிருக்கும் உடுக்கையில் இருந்து ஒலி அலைகள் சுற்றும் பரவ வளர்வதையும் உள்ளூர உணர்கிறோம். இப்படி ஆண்டவனது ஐந்து தொழில்களும் நம் மனக்கண் எதிரே தோன்றுகின்றன. இப்படி எத்தனை எத்தனையோ ஆழ்ந்த கருத்துக்கள் அங்கே ஆழ்ந்து ஆழ்ந்து அழகாகத் தோன்றுகின்றன. இதனைத் தொனி என்றும், இறைச்சி என்றும், வெளிப்படையாக அல்லது குறிப்பாகத் தோன்றுவது என்றும் இந்த அழகை விளக்குவார்கள். எனவே இதனைக் குறிப்புக்கலை என வழங்கலாம். எனவே இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்பாக இந்தக் குறிப்புக்கலை விளங்குகிறது.

நம்முடைய இலக்கியங்களிலும் குறிப்புப் பொருள் உயிர் நிலையாக விளங்குவது அறிவோம் "இறைவனை சோர என் உளங்கவர் கள்வன்" என்று ஞானசம்பந்தர் பாடினால் காதலால் வாடுகின்ற பெண்ணின் வடிவம் முதலில் தோன்றுகின்றது. ஆனால் அதனையும் தாண்டி நம் மனக்கண் சென்று ஆண்டவனை எண்ணி எண்ணி உருகுகின்ற ஆன்மாவின் இயல்பை உணர்கிறது. அதனையும் ஊடுருவிச் சென்று அன்பே சிவமான நிலையையும் அன்பே சிவம் என்ற உண்மையையும் கண்டுகளிக்கின்றது. நம்முடைய குறவஞ்சி நாடகங்களிலும் இவ்வாறு பலபல ஆழ்ந்த நிலைகளாகக் குறிப்புப் பொருள் விளங்கிக்கொண்டே

வந்து முடிவில் பேரின்பப் பொருளாக ஒளிவிடக் காண்கின்றோம். நம்முடைய அகப்பாடல்கள் அத்தனையும் இப்படிப்பட்டன என்று சொல்ல வேண்டுவதில்லை. வெளிப்படையான பொருள், அதனுள்ளே விளங்கும் உள்ளுறைப் பொருள், அதற்குள்ளே ஒன்றன் கீழ் ஒன்றாக அமைந்து விளங்கும் பலநிலை இறைச்சிப் பொருள்கள் இவை அத்தனையும் அன்பு என்ற ஓர் அடிப் படையில் முடிகின்ற சுவை நிறைந்த காட்சி — இப்படியாக ஒள்ளிடு பொருளாக விளங்கு வதாலேதான் அகம் என்று பெயர் பெற்றன.

ஓவியக்கலை நம்முடைய விக்கிரகக் கலையையே போன்றது. நம்முடைய சிற்பக்கலையும், குறிப்புக் கலையாகத்தான் விளங்குகிறது. நம்முடைய கட்டடங்களிற் சிறந்து விளங்குவது கோயிலே யாம். கோயில்களைப் பார்க்கும் போது உயரத் தோன்றும் கோபுரமும், அதனைச் சுற்றி அமைந்த பல பிராகாரங்களும் உயர்ந்து ஓங்கும். ஆண்டவனை நடுவிடமாகக் கொண்டு இயங்கி வருகிற அண்டத்தின் ஒருமைப் பாட்டையே அவை விளக்குவதாகக் காண்கிறோம். அனைத்தும் முடிவில் (கலசத்தில்) பொன்னொளியாக ஒரு முனையில் ஒளிர்வதும் இந்தப் பொருளையே வற்புறுத்துகின்றது. அங்கே நடைபெறும் சடங்குகளும் இந்த ஆழ்ந்த பொருளை விளக்கும் மந்திரதந்திரக் கூத்துக்கள் எல்லாம்.

எனவே நம்முடைய இந்தியப்பண்பாட்டை இந்தக்கண் கொண்டே ஆராய வேண்டும். அது ஒரு வகையில் கோயிற் பண்பாடேயாகும் எனலாம்.



கூத்தப்பிரான் : திருவாஞ்சியம்

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இங்ஙனம் ஸ்ரீ பாஷ்யம் தலைக்கட்டி முடிந்த வாறே உடையவர் ஸ்ரீ பாஷ்யக்ரந்தத்தை ஸ்ரீ கிடாம்பியாச்சான், ஸ்ரீ கிடாம்பிப் பெருமாள் முதலான ஸ்ரீ வைஷ்ணவர் கையிலே கொடுத்து அதனைக் காச்மீரம் கொண்டு சென்று ஸ்ரீ ஸரஸ்வதி பீடத்தே ஸமர்ப்பித்துப் பெற்றுவர நியமித் தருளினர். அவர்களும் அவ்வண்ணமே சென்று ஸரஸ்வதி பீடத்தே கிரந்தத்தை ஸமர்ப்பிக்க ஸரஸ்வதியும் அதனைத்தன் திருக்கைகளிலேந்திக் கடாக்ஷித்து உள்ளம் உவந்தவராய் அதனை அருளினர்க்கு "ஸ்ரீபாஷ்யகாரர்" என்று தன் திருப்பவள வாயினலே திருநாமம் சாத்திக் கிரந்தத்தையும் கொடுத்தருளினர். கிடாம்பியாச்சான் முதலியோர் மிக்க மகிழ்ச்சி யுற்றவர்களாய்க் கிரந்தத்தை ஸ்ரீ ஸரஸ்வதியிடம் பெற்றுக் கொண்டு திக்விஜயமாக மீண்டும் எழுந்தருளினர்கள்.

வரும் வழியில் தும்பையூர்க் கொண்டி என்பாள் ஒருத்தி, யாதவ குலத்தவள் தயிர் விற்றுக் கொண்டிருந்தாள். கிடாம்பியாச்சான் அவளிடம் தயிர் வாங்கினர். அதற்கு என்ன விலை கொடுக்க வேண்டுமென்று அவர் அவளைக் கேட்க, அவள் தேவரீர் ஸ்ரீ பாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் அடியாளுக்கு முதலில் வேண்டும் என்ன, அவற்றை அவர் ப்ரஸாதித்தவாறே அவளும் அவற்றை ஏற்று அதனல் நல்ஞானம் பெற்றவளாகி "ஸ்வாமி! அடியாளுக்கு வீட்டுலகம் தந்தருளவேணும்" என்று வேண்டினுள். ஆச்சானும் 'அம்மா அதற்கு நாம் கடவோமல்லோம் திருவேங்கடவனே கடவன்' என்று கூறினர். அம்மங்கையும், அப்படியாயின் "அவ்வேங்கடவனுக்கு அடியாளுக்கு வீட்டுலகம் அருளுமாறு தேவரீர் ஒருமுறி எழுதித்தர வேணும்" என்ன அவரும் அவ்விதமே ஒருமுறி எழுதி ஈந்தார். அவளும் அதி விச்வாஸத்துடனே அம்முறியை எடுத்துக்கொண்டுவேங்கடவன் ஸன்னிதி செல்ல அவனும் அம்முறியை வாங்கிப்பார்த்துப் புன்முறுவலுடன் நம்முடையவர் அபிமானத்துக்குரியார் சொன்னதற்குத் தடை ஏதம்மா! என்று கூறி அவளுக்குப் பரமபத மருளினர். உடையவர் அந்தரங்க ஸம்பந்தம் பெற்றார் மகிமை இது.

கிடாம்பியாச்சானும் கிடாம்பிப் பெருமானும் ஸ்ரீரங்கம் சேர்ந்து காச்மீரத்தில் நிகழ்ந்தவற்றை அவரிடம் விண்ணப்பிக்க அவர் உள்ளம் பூரித்தார். தும்பையூர்க் கொண்டி விருத்தாந்தத்தை அவர்கள் கூறக் கேட்ட உடையவர் பெருமாள் தம் பக்கல் கொண்ட விசேஷக்ருபையை உன்னி உருகிப் போனர்.

உபய வேதாந்த ப்ரவசனங்கள் வெகு செம்மையாக நிகழ்ந்து கொண்டிருந்தன. உடையவரின் ஆப்தசீடர்களில் ஒருவரும் அவருக்கு சிஷ்யபுத்ரராய் அவரால் திருக் குருகூரிலே நாமகரணம் செய்யப் பெற்றவருமாகிய திருக் குருகைப் பிரான் பிள்ளான் என்பவர் பின்னுள்ளார் நன்மையைக் கருதி உடையவரிடம் வெகுவாக வேண்டி அவர் அநுமதி பெற்று நம்மாழ்வாரது சாமகானச் சாயையான திருவாய்மொழிக்கு ஸ்ரீ விஷ்ணுபுராண அளவிலே ஆறுயிரப்படி (ஆறுயிரம் வடமொழி ச்லோகங்கள் எழுத எவ்வளவு தாலபத்ரங்கள் பிடிக்குமோ அவ்வளவு) என்ற ஒரு வியாக்யானம் செய்தருளினர்.

உடையவர் தம் கீழுள்ள முதலிகளிலே எழுபத்தி நான்கு பேரை ஆசார்ய பதவியளித்து அவர்களுக்குப் பஞ்சஸம்ஸ்கார அதிகாரம் கொடுத்து அவர்கள் சிஷ்யவர்க்கங்களைப் பெருக்க அநுமதியளித்தார். அக்காலத்தில் உடையவர் திருவடியை ஆச்ரயித்து நின்று அவர் ஸம்பந்திகளாக இருந்தவர்களை.

"தென்புல மன்பதி சாராவகை திருத்தும் ஆசிரியர்
என்பார்கள் எழுபத்திநான்கு எதிகள் எழு நூற்றுவர்
ஒன்பதினுயிரம் உபவீதமுடை பாகவதர்
அன்பர் சாத்தாதவர்கள் ஆறிரண்டாயிரத்தவரே
தென்னரங்க நகர்செறிந்த பாகவதத்திரட் கெல்லை
சொன்னதொகை திசைகள்தனில் சுற்றுள்ள திருப்பதிகள்
தன்னிலங்கங் கெதிராசர்சரண் திருத்திச் சார்ந்தவரைப்
பன்னவரி தெண்ணிடினும் அநந்தமெனப் பகர்வாரே."

என்ற பாடல்கள் ஒருவாறுணர்த்துவன. இத்தகை வைணவப் பெருங்குழுவோடு ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தைப் பரப்பிவந்த உடையவர் எப்போதும் ஸ்ரீரங்கநாதனுக்கு அந்தரங்கஸேவை செய்துகொண்டு திகழ்ந்தார். ஒருக்கால் பெரிய திருநாளிலே திருவுத்தரத்தன்று பெருமாளும் நாச்சியார் கோயிலிலே சேர்த்தியாக வீற்றிருந்து ஏழலகும் தனிக்கோல் செல்ல இனிதுடன் எழுந்தருளியிருக்க எம்பெருமானரும் தம் அபராதங்களை நோக்கி அவன் உபேக்ஷித்து விடாதபடி அவன் வக்ஷஸ்தலத்தே வதியும் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற அவளும் அருளினவாறே எம்பெருமானைச் சரண்புகுந்து "உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவதெந்தாய்" என்று ஆழ்வார் வேண்டிய படியே ப்ராப்யமான கைங்கர்யத்தை வேண்டி அக்கைங்கர்யத்துக்கு விரோதமானவற்றின் ஒழிப்பையும் பிரார்த்திக்க அவனும் 'நாம் அதனைப் போக்கினேம். நீர் உமதுபேற்றில் ஐயமுறாதே கொள்ளும் என்று தேற்றியருளியது இவற்றையெல்லாம் கூறும் சரணாகத்யத்தையும், பெரிய பெருமாள் திருவடிகளிலே அவ்விதம் சரண்புக்க தனது தசையைப் பேசும் ஸ்ரீரங்ககத்யத்தையும் இவற்றால் உவந்த பரமன் அருளும் பலங்களைப் பேசும் ஸ்ரீவைகுண்டகத்யத்தையும் அருளிச் செய்தார். இவையெல்லாம் தாமும் அவனுமாக இருந்த ஏகாந்தத்திலே நிகழ்ந்தவையேனும் இவற்றால் பெறும் பேறு அனைவரும் பெற்றுய்யுமாறு அவற்றைப் பலருக்கும் தம்முடைய உயர்ந்த கருணையாலே உபகரித்தருளினர். பனை நிழல் போலே தன்னளவில் மட்டும் பயன் பெறலின்றிப் பணைத்த கற்பக மரம்போலே அனைவரும் ஒதுங் கும்படியதன்றோ அவர் காருண்யம், பாஷ்யத்திலே கர்மஞானத்தோடு கூடிய பக்தியை உபாயமென்று சொல்லுகையாலே ஒன்றும் கலசாத பக்தி எப்படி உபாயமாகக் கூடும்? என்று மந்த புத்தியுடையார் ஐயுற்றுப் பயந்து விடாமல் நிர்ப்பயமாய் தம்மை விச்வஸித்திருப்பார்க்கு உஜ்ஜீவனத்துக்குப் பயன் படவன்றோ இவற்றை அவர் வெளியிட்டது!

கூரத்தாழ்வானுக்கும் ஆண்டாளுக்கும் ஸ்ரீரங்கநாதனது பரமக்ருபையால் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய ஜாதகர்ம நாமகரண ஸம்ஸ்காரங்கள் செய்வதற்குக் கூரத்தாழ்வான் எவ்வித எத்தனமும் செய்யாமல் அவற்றுக்கெல்லாம் எம்பெருமானரே கடவர். நமக்கவற்றில் அந்வயமில்லை என்றிருந்துவிட்டார். ஸூதகநிவ்ருத்தியானவுடனே எம்பெருமானர் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளி எம்பாரை அழைத்துக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு வரும்படி நியமித்தார். எம்பாரும் உள்ளே சென்று ஆண்டாளிடம் உடையவர் நியமனத்தைக் கூற அவளும் அதிமகிழ்வோடு குழந்தைகளை அளிக்க எம்பாரும் இரு குழந்தைகளையும் இருகைகளிலும் ஏந்திக்கொண்டு வந்தவர் குழந்தைகளின் திவ்யதேஜஸ்ஸை நோக்கி இவர் பலர் கண்படில் கண்ணெச்சிலுண்டாம் என்றஞ்சியவராய் அவற்றுக்குக் காப்பாக த்வயாநுஸந்தானம் செய்துகொண்டேவந்து உடையவர் திருமுன்பே குழந்தைகளிரண்டையும் காட்டினர். எம்பெருமானர் மிகுந்த உள்ளக்கிளர்ச்சியோடு குழந்தைகளிரண்டையும்; தம் குளிர்ந்த திருக்கண் மலர்களாலே கடாக்ஷித்தவர் அக்குழந்தைகளிடத்தில் காணப்பெற்ற அப்ராக்ருத தேஜஸ்ஸை ஊன்றி நோக்கி எம்பாரைப் பார்த்து "எம்பாரே! என்ன செய்தீர் காணும். குழந்தைகளிடத்திலே த்வயம் பரிமளிக்கின்றதே!" என்று வியப்புடன் கேட்டார். எம்பாரும் 'அடியேன் ஒன்றும் செய்திலேன். குழந்தைகளின் பேரழகைக் கண்டேன். கண்

ஒணைச்சில் படுமோ என்று பயந்தேன். காப்பாக த்வயாநுஸந்தானம் செய்துகொண்டே வந்ததன்றி வேறொன்றுமில்லை'' என்று விண்ணப்பித்தார். உடையவர் உள்ளம் பூரித்து இக்குழந்தைகளின் நலனில் முற்பட அக்கரை காட்டியவர் நீரே யாதலின் அவர்கள் தேகபோஷணைக்கும் பின் ஆன்ம உஜ்ஜீவனத்துக்கும் நீரே கடவீர் என்று நியமித்துத் தம் திருக்கைகளாலே குழந்தை களுக்கு ஐம்படைத்தாலி அணிவித்து, எம்பாரைக் கொண்டு சங்கசக்ர முத்திரை சாத்தச்செய்து முதற் குழந்தைக்கு ஸ்ரீபராசரபகவான் திருப் பெயரையும், மற்றைய குழவிக்குச் சீராமப்பிள்ளை என்ற திருநாமத்தையும் சூட்டியருளினர். ஸ்ரீஆளவந்தார் சரமவிக்ரகத்தருகே அவருக்கு ஸ்ரீபராசர பகவானிடம் மிக்க நன்றியிருந்ததென்று கேட்டு அந்நன்றியைத்தாம் செலுத்துவதாக ஏற்றுக் கொண்ட இரண்டாவது பிரதிக்ஞையை இங்ஙனம் நிறைவேற்றி ஸ்ரீஆளவந்தாரது உள்ளக் கிடக்கையைப் பூர்த்தி செய்தருளினர் எம்பெரு மானர்.

அப்ராகிருத சோதியுடன் விளங்கிய ஸ்ரீபராசர பட்டர் (இவரை 'பட்டர்' என்றே வைணவ உலகம் போற்றியது) கேவலம் மானிடசிசுவல்ல என்பதை உணர்ந்த எம்பெருமானர் பட்டரை ஸ்ரீரங்கநாயகி ஸமேத நம்பெருமாள் திருமுன்பே கொண்டுபோய், பெருமாள் மஞ்சள் நீரை அதற்கு ஊட்டி, பிராட்டி பெருமாளுக்கு ஸ்வீகாரப் பிள்ளையாக்கிப் பெருமாள் ஸன்னதியிலேயே திருமணத் தூணில் தொட்டில் இடுவித்துப் பட்டரை அதிலே இட்டு நாச்சியாரே அவரைச் சீராட்டி வளர்க்கும்படி விட்டுவிட்டார். கூரத் தாழ்வானுக்கும் ஆண்டாளுக்கும் பெருமாள் தளிகைப் பிரஸாத முகமாகப் பிறந்த பட்டர் ஸ்ரீரங்கநாயகி நம்பெருமாள் ஸ்வீகார திருக்குமார ராகவே வளர்ந்தார். இவர் பெருமை தனியாகக் கூறப்பெறும்.

சிறிது காலம் சென்றபின் சிறிய கோவிந்தப் பெருமாள் என்பவர்க்கு ஒரு திருக்குமாரர் திருவ வதரிக்க, உடையவர் அக்குமாரரையும் கடாக்ஷித்து நம்மாழ்வார் பக்கல் ஸ்ரீஆளவந்தார்க்குள்ள ஆத ராதிசயத்தின் சின்னமாக அக்குழந்தைக்குப் பராங்குசர் என்று திருநாமம் சாத்தி ஆளவந்தா ரின் மூன்றுவது உள்ளக்கிடக்கையை நிறைவேற்றி யருளினர்.

''எம்பெருமானர் இவ்வண்ணம் உபயவேதாந் தங்களையும் பரக்கச் செய்து அரங்கப்பதியில் அறுபது வருஷம் முதலில் எழுந்தருளியிருந்தார் என்று ராமாநுஜார்ய திவ்ய சரிதை கூறுகின்றது. அதனிடையே எத்தனையோ உளமுருக்கும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவற்றை யெல்லாம் ஒருகால அடைவாகக் கூற ஆதாரமில்லை. நிகழ்ச்சிகளை மட்டுமே குறிக்க இயலுமாதலின் அவற்றில் முக்கியமான சிலவற்றைக் காண் போம்.

முதலியாண்டானிடம் உடையவருக்கு விசேஷ அபிமானம். ஒருசமயம் முதலிகளெல்லோரும் உடையவரை நோக்கி 'சரீரஸம்பந்திகளை விட்டு விட வேண்டிற்றே" என்று வினயமாக விண்ணப் பிக்க உடையவர் 'நம் முதலியாண்டானை யொழிய ஸன்யஸித்தோம்'' என்று அருளிச்செய்தார். முதலிகள் திகைத்தவர்களாய் 'தேவரீர் இவ்விதம் அருளிச்செய்யலாமோ'' என்று பணிவோடு வினவ உடையவரும் புன்முறுவலோடு "நாம் நம்பிக்கையிலுள்ள திரிதண்டத்தை விடிலன்றோ முதலியாண்டானைக் கைவிடுவது'' என்றருளிச் செய்தார்.

எம்பெருமானர் ஒருசமயம் தம் கட்டிலில் ஏறி யருளித் திருவாய்மொழியில் ஒரு பாசுரத்தை வ்யாக்யானித்தருள அவ்வர்த்தத்தைக் கேட்ட முதலியாண்டான் தன்வயமிழந்து நின்ருர். அருகிலுள்ளர் திகைத்து நிற்க உடையவர் அவர்களை நோக்கி 'என்ன திகைப்பு உமக்கு? முதலியாண்டானுக்கு வேதங்களிலுள்ள பாண்டி த்யமும் ப்ரேமையும் நீங்கள் அனைவரும் அறிந்தது தானே.

வேதமுரை மேம்பொருளும் தயரதன்நன் மகனாய்
வியனுலகில் அவதரித்து விளங்கியது போல
வேதமெலாம் தாம்திரண்டு வான்மீகர் நாவில்
வென்றியிரா மாயணமாய் வந்திசைத்த
வன்றே.

அவ்வேதங்களே நாவீறுடைய நம்மாழ்வார் திரு நாவினின்று மீண்டும் திருவாய் மொழியாய் அவ தரித்துள்ளதனை வேதபாரகரான நம்முதலியாண் டான் உணர்ந்தார். அந்த ஈடுபாட்டில் வந்த ஆதராதிசயமே இது என்று உரைத்தருளினர்.

—தொடரும்.

# உள்ளுறை பொருளாராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்:

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 2. முகில்வண்ணன் விசேஷார்த்தம்.

எம்பெருமானை ஆழ்வார்கள் முகில் வண்ணனென்றும் மேகவண்ணனென்றும் அழைத்து அநுபவிப்பர்கள், *ஒக்கும்மம்மரனுருவமென்று உள்ளங்குழைந்து நாணாளும், தொக்க மேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன் நான்* என்ற திருவாய்மொழியின்படி காளமேகத்தினுருவம் போன்ற உருவமுடையவன் என்கிற பொருள் தவிர, மேகத்தின் ஸ்வபாவம்போன்ற ஸ்வபாவமுடையவன் என்கிற பொருளும் ஏற்கும். அந்த வொற்றுமைநயம் பலபடியாக ஈண்டு விவரிக்கப்படுகின்றது.

1. மேகமானது பெய்யவேண்டுமிடமளவும் சென்று பெய்யும். எம்பெருமானும் *வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே* மண்மீதுழல்வாய்* என்கிறபடியே தனது க்ருபாரஸத்தை வர்ஷிக்க வேண்டுமிடங்களேறச் சென்று வாழவுலகினில் பெய்திடுவன்.

2. மேகமானது மின்னலுள்ள காலம் நீர்நிரம்பப் பெற்றிருக்கும். எம்பெருமானும் மின்னல்போன்ற பிராட்டியோடு கூடியிருக்குங் காலத்திலே க்ருபாரஸம் வஞ்சியிருக்கப் பெறுவன். (இந்திரயாதடித்வாந்* என்றார் பட்டர்.) "இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்'' என்கிற முமுக்ஷுப்படி திவ்ய ஸூக்தி காண்க. "ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின்வந்த தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை' என்று பெருமானை நோக்கி வாலி கூறினதாகக் கம்பர் பேசியுள்ளதுங் காண்க. அந்தச் செய்யுளின் கருத்தை லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் *த்வய்யே வாயததே க்ருபா ரகுபதே;* என்கிற ச்லோகத்தினால் அரசாணிபாலை வேங்கடாத்வாயும் வெளியிட்டார்.

3. மேகமானது தான் மொண்ட இடத்திலும் பெய்யும்; எம்பெருமான் தான் ஞான வெள்ளத்தை மொண்டு கொண்ட இடத்திலும் உபதேச வெள்ளத்தைப் பெய்திடுவன். விபவாவதாரத்தில் தனக்கு ஞானமளித்த வஸிஷ்டாதிகளுக்கும் தான் ஞானமளிக்கத் தொடங்கினமை ஸ்ரீ ராமாயண ப்ரஸித்தம். சித்ரகூடத்திலே வஸிஷ்ட முனிவன் பெருமாள் பக்கலிலே சில தர்மஸூக்ஷ்மங்கள் கேட்கப்பெற்றானாயிற்று. *ஸோஹம் தேபிதுராசார்ய: தவ சைவ பரந்தப, மம த்வம் வசநம் குர்வந் நாதிவர்த்தேஸ் ஸதாம் கதிம்* என்று செருக்கிக்கிளர்ந்த வஸிஷ்டனையும் வாய்மூடுவித்தான் இராமபிரான் சில தரும மருமங்களைச் சொல்லி

4. மேகமானது பெய்யப்பெறாத காலத்திலே வறக்கும்; எம்பெருமானும் அடியார்க்கு அருள் செய்யப்பெறாத காலத்திலே நெஞ்சுலர்ந்து பேசுவன்; த்ரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப்பெறாத குறையினால் *கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி* என்றானே.

5. மேகமானது இன்னபோது பெய்யுமென்று ஒருவராலும் அறுதியிடவொண்ணாதாயிருக்கும்; பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாதொழியவும் பெய்வதற்கு ப்ரஸக்தியில்லாத காலத்தில் அசிந்திதமாக வந்து தாராளமாகப் பெய்யவுங்கடவது மேகம். எம்பெருமான் படியுமிப்படியே. (*வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே* என்றாரே நம்மாழ்வார்.) திரௌபதிக்கு

ஆபத்திலேவந்து முகங்காட்டா தொழிந்தான்; அபேக்ஷா நிரபேக்ஷமாகத்*தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டான்.

6. 'வனத்திடரை ஏரியாக வெட்டியாயிற்று, நீ மழை பெய்தாகவேணும்' என்று வளைப்பிட வொண்ணாததுமேகம். எம்பெருமான்படியு மப்படியே. 'நாங்கள் கரும ஞான பக்தி யோகாதிகளைக் குறையற அனுட்டித்தாயிற்று, இனி நீ அருள் செய்தே யாகவேணும்' என்று வளைப்பிட்டால் அந்த வளைப்புக்காகக் காரியஞ் செய்யுமவனல்லனே எம்பெருமான். *வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார் மற்று* என்றாரே பூதத்தாழ்வார். கூரத்தாழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் *யாகர்மணா மதிக்ருதி:* இத்யாதி ச்லோகத்தாலே இதுதன்னை ஸூசிப்பித்தருளினார். *பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனும் காண்பான் எண்ணிலாவூழியூழித் தவஞ் செய்தார் வெள்கி நிற்ப வன்றே விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன்று அருளை யீந்தது.

7. மேகமானது ஜலஸ்தல விபாகமின்றியே எங்கும் பெய்யும்; எம்பெருமானும், வஸிஷ்டன் சண்டாளன் அறிஞர் அறிவிலிகள் என்னும் வாசியின்றிக்கே *அநாலோசித விசேஷாசேஷ லோக சரண்ய !* என்னும்படியே எங்கும் ஒரு நிகராக அநுக்ரஹிசிலன்.* "தாசாய கிசாயச ராக்ஷஸாய என்றார் வேங்கடாத்வரி. ஆசார்ய ஹ்ருதயத்தில் "வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன்மகன் அவன்தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தன்" என்றருளிச்செய்ததொரு கோவையைக் காணும்போது நிர்விசேஷமாக அருள் செய்யுமிடம் நன்கு விளங்குமே.

8. மேகமானது சிலகாலங்களிலே கர்ஜித்துப் போய்விடும், பெய்யாது; பெய்யுங் காலத்திலே ஆடம்பரமின்றிக்கே சொரிந்திடும், *கர்ஜதி சரதி ந வர்ஷதி வர்ஷதி வர்ஷாஸு நிஸ்ஸ்வநோ மேக:* என்றான் பண்டிதராஜன். எம்பெருமான் குசேலனுக்கு அருள்செய்தபடி இங்ஙனமேயாம்.

9. மேகமானது விராடபர்வ காலக்ஷேபத்திற்கு வந்து நிற்கும். (விராடபருவம் காலக்ஷேபஞ் செய்தால் மழை பெய்யுமென்பது ப்ரஸித்தமன்றோ). எம்பெருமான் பகவத் விஷய காலக்ஷேபங்களிலே வந்து நிற்பவன். மணவாளமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலே* ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்று கர்ஜித்துக்கொண்டு வந்ததே.*

10. மேகமானது சுக்திகளிற் பெய்து முத்தாக்கும். *அடியார்க்கு இன்பமாரியாகிய எம்பெருமானுடைய கடாக்ஷதாரையும் ஆழ்வாராசார்யர்களிடத்தே ப்ரவஹித்து மிக்க பயன்விளைக்கும்; முத்தன்ன வாக்குக்களைப் பயக்கும்.

11. மேகமானது *மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம்* இத்யாதிப்படியே தூதுவிடப்பெறும். எம்பெருமான் தானும் *இன்னார் தூதனென நின்றான்; *கோதைவேலைவர்க்காய் மண்ணகலங் கூறிடுவான் தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான். *பாண்டவ தூதனென்றே அழியாத பேர் பெற்று விளங்காநிற்கின்றான்.

12. மேகமானது சிலருக்குத் தீங்கை விளைக்கும், சிலர்க்கு நன்மை பயக்கும். *த்வயி வர்ஷதி பர்ஜந்ய! ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாகமர்க்கவ்ருக்ஷாணாம் பூர்வபத்ரேஷு ஸம்சய:* என்றான் ஒரு மஹாகவி. மழைபெய்ய எல்லா மரங்களும் தளிர்க்கும்; எருக்கிலைபோல்வன வீழ்ந்தொழியும். ஆகவே மழை சிலருக்குத் தீங்கு, சிலருக்கு நன்மை. எம்பெருமான்படியு மப்படியே; *பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்* என்று தானே சோதிவாய்திறந்து பணித்தானே. *கஞ்சன்நாள்கவர் கருமுகிலெந்தாய்* *தாயர்மகிழ ஒன்னார்தளர* இத்யாதி.

13. மேகமானது, *எத்தனையும் வான் மறந்தகாலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்குமென்கிறபடியே பயிர்கள் வேறுபுகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும். எம்பெருமானும் *களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்* என்று சாதகவ்ருத்திகளான அநந்யகதிகளால் ப்ரதீக்ஷிக்கப்பட்டிருப்பன்.

14 மேகமானது விருப்பமில்லாதவன்று எத்தனை கண்ணநீர் விழவிட்டாலும் வாளா கிடக்கும்; எம்பெருமான்படியுமிதுவே பரதாழ்வான் *ஏபிச் சஸ்சிவைஸ் ஸார்த்தம் சிரஸா யாசிதோ மயா, ப்ராதுச் சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்துமர்ஹஸி* என்று பலருடனே சித்ரகூட பரிஸரத்திலே போந்து கண்ணநீரை விழவிட்டு வேண்டினவிடத்தும் *ஸ காமம் அநவாப்யைவ* என்னும்படியே மநோரதம் நிறைவேறப்பெறுமலே மீண்டு போம்படியாயிற்றன்றே.

15. மேகமானது கடலிற் படிந்து அங்குநின்றும் எழுந்து தோன்றி வர்ஷித்துவிட்டு மீண்டும் கடலிற் புகும்; எம்பெருமானும் அவதாரகந்தமான திருப்பாற்கடலிலே படிந்து *ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:, நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்* எனகிறபடியே ஸ்ரீராமக்ருஷ்ணதிருமேனி தோன்றிக் கண்காணவந்து க்ருபாரஸத்தை வர்ஷித்துவிட்டு மீண்டுமங்கே புகுவன், நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் *பின்துரக்குங் காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும் போய், வன்திரைக்கண் வந்தணைந்தவாய்மைத்தே* என்ற பாசுரத்தினால் இவ்வர்த்தத்தை விளக்கியருளினமை காண்க,

16. மேகமானது தான் தோன்றினவாறே மயில்களைச் சிறகுவிரித்து ஆடப்பண்ணும். *கார்முகில்போல் வண்ணன் கண்ணனெம்மானைச் சொல்லிப்பாடியெழுந்தும் பறந்தும் துள்ளாதார் தம்மால் கருமமென்சொல்லீர்* என்கிற திருவாய்மொழியின்படியே எம்பெருமானைக் கண்டமாத்திரத்திலே தத்பக்ஷபாதிகள் எழுந்தும் பறந்தும் துள்ளுவர்கள்*:

## 3. கடல்வண்ணன் விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் எம்பெருமானைக் கடல்வண்ணனென்றும் பலகாலுமழைப்பர்கள்.

அன்றியும், ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுடைய வார்த்தையைக் கேட்டு ஸமுத்ரராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணினரென்பதை வெளியிட்ட வால்மீகி மஹர்ஷியும் கம்பரும், ஸ்ரீராமபிரானையும் ஒரு கடலாகப் பேசினார்கள். "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதி சிச்யே மஹோததே:" என்பது வால்மீகி மாமுனிவரின் வாக்கு. இதில் ப்ரதிசிச்யே என்றதனால், அந்தக் கடலை நோக்கி மற்றொரு கடல் எதிரே பள்ளிகொண்டதுபோலும் என்பதாகக் கருத்து தொனிக்கின்றதென்று மஹான்கள் வியாக்யானம் செய்தார்கள். கம்பரும் *வருணனை வழிவேண்டு படலத்தில் "கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி" என்றார். திருவாய்மொழியில் 6-9-3 பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டிலும் "ஒரு கடல் ஒரு கடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாற்போலேயிருக்கை" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. வேதாந்த தேசிகனும் ரகுவீரகத்யத்தில் "ப்ரதிசயந பூமிகா பூஷித பயோதி புளிந!" என்றார். *ப்ரதிசயந பூமிகா* என்றவிதில் *ப்ரதிசிச்யே* என்ற வால்மீகி வாக்கின் பொருளே விவக்ஷிதம். அது கீழே விவரிக்கப்பட்டது. *ப்ரதிஜலதிதோ வேலாசய்யாம்* என்ற பட்டர் ஸ்ரீஸூக்தியும் காண்க. ஆக இப்படிப்பட்ட முன்னோர் மொழிகளுக்குச்சேர எம்பெருமானுக்கும் கடலுக்குமுள்ள ஒற்றுமை நயத்தைப் பலபடியாக விளக்குவோம்.

1. பெரிய திருமொழியில் (2-8-5) "நீண்டமலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற, அலைகடல் போன்றிவர்" என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார்தாமே பகவானுக்கு ஸமுத்ர ஸாம்யத்தை ஒருவாறு அருளிச் செய்தார். கடலானது மைநாகம் முதலிய மலைகளையுடையது; எம்பெருமான் "ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமால்" என்கிறபடியே மலைபோன்ற திருத்தோள்களை

யுடையவன். "நகுகதிர்வழங்கு தகுடுபடு
செம்பொன் நவமணி குயின்ற தொடி
யணியணிந்த ககனவிலிடு **நீல வெற்
பொத்திருந்தன**" என்றார் பிள்ளைப்பெரு
மாளையங்காரும். கடலானது சிறந்த
நவமணிகளையுடையது; எம்பெருமான்
*குருமாமணிப்பூண்* என்கிற கௌஸ்துப
மணியையும் *செங்கமலக்கழலில் சிற்றி
தழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங்
கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்
வடமும் தாள நன் மாதுளையின் பூ
வொடு பொன்மணியும் மோதிரமுங் கிறி
யும் மங்கல வைம்படையுந் தோள் வளை
யுங் குழையும் மகரமும் வாளிகளும்
சுட்டியும்" என்னும் படியான திவ்யா
பரண மணிகளையுமுடையவன். கடலா
னது லக்ஷ்மீப்ரஸூதிக்ருஹ மாகையாலே
பெரிய பிராட்டியார்க்கு உறைவிடம்;
எம்பெருமான்*அகல கில்லேனிறையு
மென்று அலர்மேல் மங்கையுறைமார்பன்.
கடல் சங்குதங்குமிடம்; எம்பெருமானும்
*வெள்ளைச்சுரிசங்கு ஏந்துமவன். "**மத்
யமாநசல பேநில ஸிந்து...**" இத்யாதி
வரதராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும், "**ஹாரஸ்
பாரிதபேநம் அம்சுலஹரீமாலர்த்தி முக்
தாபலச்ரேணீ சீகர துர்த்திநம் தத
இதோ வ்யாகீர்ணரத்நோத்கரம், ஆவி:
கௌஸ்துபலக்ஷ்மி ரங்கவஸதேர் நிஸ்ஸீ
மபூமாத்புதம் வபுஷா மந்தரமத்த்யமாந
ஜலதிச்லாகம் விலோகேமஹி,**" என்கிற
ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும் இங்கு
ஸ்மரிக்கத்தகும்.

2. கடல் **முன்னீர்** என்று பெயர் பெற்
றிருக்கும்; எல்லாவற்றுக்கும் 'முன்னே
உண்டான நீர் என்பது பொருள். "**அப
ஏவ ஸஸர்ஜ ஆதௌ**" என்று மஹரிஷி
களும் "நன்மைப் புனல்பண்ணி" என்று
ஆழ்வார்களும் கூறினது காண்க. இங்
ஙனே கடல் முதன்மை பெற்றிருப்பது
போல எம்பெருமானும் "**முனைவன்**
மூவுலகாளியப்பன்" என்னும் படியே
ஆதிபகவனுயிருப்பன்.

3. கடல் **முன்னீர்** என்பதல்லாமல்
**முந்நீர்** எனப்படுவதுமுண்டு; [நகரத்தில்
வாசிகாண்க.] ஆற்றுநீர் ஊற்று நீர்
மழைநீர் என்னப்படுகிற மூன்று வகைப்
பட்ட நீரையுடையது கடல் என்றபடி.
எம்பெருமானும் நீர்போன்ற கருணாரஸம்
மூன்று வகையாக இருக்கப் பெற்றவன்;
(1) இயற்கையான இன்னருள் (2) பிறர்
படுந் துயரத்தைக்கண்டு தோன்றுகின்ற
அருள், (3) பிராட்டியின் புருஷகாரத்
தாலே தோற்றுவிக்கப்பட்ட அருள்—
என மூவகைப்படும் பகவானது கருணா
ரஸம்.

4. கடலானது சிறுமீன்முதலாகத்
திமிங்கிலம் வரையிலும், கிளிஞ்சல் முத
லாகமணி மாணிக்கம் வரையிலும் அதம
உத்தம விபாகமில்லாமல் அனைத்துக்கும்
தன்பக்கல் இடங் கொடுத்திருக்கும்.
எம்பெருமானும் "சிவனொடு பிரமன்
வண் திருமடந்தைசேர் திருவாகம் "ஏறு
ளுமிறையோனுந் திசைமுகனுந் திரு
மகளும், கூறுளுந் தனியுடம்பன்" "**பச்
யாமி தேவாந் தவ தேவ தேஹே**"
இத்யாதிப்படியே ஸர்வாபாச்ரயமாயி
ருப்பன்.

5. கடல் தேவர்களுக்குச் சாவாமருந்
தான அமுதத்தைச் சுரந்தளித்தது. எம்
பெருமானும் "உண்பது சொல்லில் உலக
ளந்தான் வாயமுதம்" "தன்னைப் பெற்
றேற்குத் தன்வாயமுதம் தந்து என்னைத்
தளிர்ப்பிக்கின்றான்" என்னும் படியே
பேரன்புடையார்க்குச் சாவா மருந்தான
வாயமுதத்தை யளிக்குமவன்.

6. கடல் அளவிட முடியாத ஆழ
முடையது; "**ஸமுத்ர இவ காம்பீர்யே**"
என்கிற படியே எம்பெருமானது கம்பீரத்
தன்மையும் பாசுரமிட்டுப் பேச வொண்
ணாதது. *கொள்ள மாளாவின்ப வெள்ள
மாகையாலே இதிலே யிழிவார்க்கு
உள்ளாழம் காண்பரிது.

7. கடல் தன்பக்கலுள்ளதை மேகங்
களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும்; மேகம்
பெய்யும் நீரைத் தான் வாங்கிக்கொள்
வதுஞ் செய்யும். எம்பெருமானும்
"**அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதம்**"
"**ஸகல பலப்ரதோ ஹி விஷ்ணு:**"
என்கிறபடியே கொடுக்கவும் வல்லவன்;
"**கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை**

நாராயணுயேதி ஸமர்ப்பயாமி" என்று கொடுப்பவற்றைக் கொள்ளவும் வல்லவன். *தத் குருஷ்வ மதர்ப்பணம்* என்றுதானும் சொல்லிவைத்தான்.

8. கடல் மழைநீர் தன்னிடத்து விழப் பெற்றுலும் அதனுல் ஒரு அதிசயமும் உண்டாகப்பெறுது; "வர்ஷபிந்தோரிவ அப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபோ நது கபளநத:" என்கிறபடியே பெய்யும் முகிலுக்கு ஆத்ம லாபமே யத்தலை. எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு ஸமர்ப்பித்தாலும் அதனுல் நாம் க்ருதார்த்தர்களாவது தவிர பகவானுக்குப் புதிதாகச் செல்வ நிறைவு ஒன்றுமில்லை.

9. கடல்நீர் நம்போல்வாரது வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனுலும் "ஆசாந்தஸிந்தோ: கும்பீஸூநோ:" என்கிறபடியே குறு முனிவனுக்கு உணவாயிற்று; எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன் கெடத் தோன்றின நஞ்சினை" என்கிறபடியே ஆஸுரப்ரக்ருதிகளுக்கு விஷமாயிருந்தாலும் சுவையறிவார்க்கு "அமுதிலுமாற்ற வினியன்" "எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனேயாகி" என்னும்படி பரமபோக்யனுவன்.

10. கடல் அஞ்சினர்க்குப் புகலிடமாயிருக்கும்; இந்திரனிடத்து அஞ்சின மைநாககிரி முதலியவற்றிற்குப் புகலிடமாயிருந்ததே. எம்பெருமானுக்கு இத்தன்மை ஸ்வபாவஸித்தம். 'அஞ்சினேற்கு அஞ்சலென்று காவி போல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றிஞரே" "ஆர்த்த த்ராண பராயணஸ் ஸ பகவாந் நாராயணுேமே கதி:" இத்யாதிகள் காண்க.

11. கடல்நீர் மாமுகிலின் வாய்வழியாக வந்தாலன்றி ஆர்க்கும் உபஜீவிக்க வொண்ணுது; எம்பெருமானும் ஆழ்வாராசார்யர்களின் திருவாய் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்க லாகான். (இவ்விடத்தில் "லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் நாதாத்ரௌ அப்யஷிஞ்சத்" என்கிற ச்லோகத்தின் விரிவான பொருளும் "மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடற் சொல் இவர்வாயனவாய்த் திருந்தின வாறே ஸர்வதா ஸர்வோ பஜீவ்யமாமே" என்கிற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தியின் சீரிய பொருளும் அநுஸந்தேயம்.

12. கடல் பெரும்பாலும் குளிர்ச்சி மிக்கிருக்கச் செய்தேயும் ஒரு புறத்தில் பாடபாக்நி பொங்கநிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் 'நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறக்க" வெவ்வியனுயிருப்பது முண்டிறே.

13. கடல் சந்திரனைக் கண்டால் பொங்கிக்கிளரும்; எம்பெருமானும் ஞானிகளைக் கண்டால் "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய்" என்னும்படியே சதசாகமாகப் பணைப்பன்.

14. நாமெல்லாரும் கடலின் கரையிலே நிற்க வேண்டுமே யல்லது உள்ளே புக முடியாது; சிலவர்களே உட்புகுந்து ரத்னங்களைத் திரட்டிக் கொணர்வர்கள். அதுபோலே பகவத் விஷயத்திலே நாமெல்லாம் மேலெழநிற்க, நம்பிள்ளை போலும் மஹான்களே ஆழ அவகாஹித்து வேதார்த்த நிதிகளை வாரிக் கொணர்ந்து கொடுப்பர்கள்.

15. கடல் விஷத்தையும் தந்தது, அமுதத்தையுமளித்தது. எம்பெருமானும் *பயக்ருத் பயநாசந:* என்கிற படியே பயத்தையும் விளைவிப்பன், பய நாசமும் பண்ணித்தருவன். "நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்" என்றுர் நம்மாழ்வாரும் "பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே ரங்கநிதே!" என்றுர் பட்டரும்.

16. கடல் எத்தனை தடவை பார்க்கப் பட்டாலும் த்ருப்தி தரமாட்டாது; காணுந் தோறும் அபூர்வதர்சநமாகவேயிருக்கும். எம்பெருமான்படியு மப்படியே; "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழியூழி தொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னுராவமுதமே" அன்றே.

17. கடலுக்கு ஒரு பக்கத்தில் வரவுகளும் மற்றொரு பக்கத்தில் செலவுகளுமா

யிருக்கும்; [பல நதிகள் வந்து சேர்வது வரவு; மேகம் நீர் முகந்துகொண்டு போவது செலவு.] எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனேயாயிருக்கும். திருவேங்கடமுடையான் ஸந்நிதி போன்ற ஆலயங்களில் உண்டியில் வரவுமுண்டு; பலவகைச் செலவுமுண்டு.

18. கடல்வழியே போவார்க்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும்; "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றூர்கள், அநுபவத்திலும் இது காணு நின்ரேும்; இவ்வண்ணமே எம்பெருமான் வழியே போவார்க்கு மஹார்த்தங்கள் கிடைக்கும். "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையேதான் வேண்டும் செல்வம்" என்றூர் குலசேகரப் பெருமாள்.

19. "அப்திர் லங்கித ஏவ வாநர படை: கிந்து அஸ்ய கப்பீரதாம் ஆபாதாள நிமக்ந பீவரதநுர் ஜாநாதி மந்தாசல:" (முராரி) என்கிறபடியே வாநர வீரர்கள் கடலைக் கடந்து விட்டாலும் அவர்களுக்கு உள்ளாழம் தெரியாது; அடிவரையில் அழுந்தின மந்தர கிரிக்கே அந்த ஆழம் தெரியும்; அது போலவே எம்பெருமான் விஷயத்தில் நாமெல்லாம் கவிகள் இயற்றித் துதிசெய்து விட்டாலும் அவன்படிகளை நாம் சிறிது மறியோம்; ஆழ்வார்கள் என்று திருநாமம் பெற்று அவ்விஷயத்தில் ஆழ மூழ்கியிருக்கும் மஹான்களே ஆழமறிவார்கள். "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும், ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்—ஞாலத்தொரு பொருளை வானவர் தம் மெய்ப்பொருளை, அப்பில் அரு பொருளை யானறிந்த வாறு" என்று துணிந்து அருளிச் செய்தார் திருமழிசைப்பிரான்.

20. கடல் கலங்காது, கலங்கினுலும் ஒரு நொடிப்பொழுதில்தானே தெளிவு பெறும்; தண்ணளியே வடிவெடுத்த எம்பெருமானும் சீற்றங் கொள்ள மாட்டான்; ஔபாதிகமாகச் சீறினுலும் அடுத்த க்ஷணத்திலே அநுக்ரஹம் பொங்கி நிற்பன: "மா வாலிபதமந்வகா:" என்னும்படி ஸுக்ரீவ மஹாராஜர் பக்கலிலும் "ஸாகரம் சோஷயிஷ்யாமி" என்னும்படி ஸமுத்ரராஜன் பக்கலிலும் அளவுகடந்து சீறிச்சிவந்த இராமபிரான் அடுத்த க்ஷணத்திலே அருள்பொலிய நின்றமை காண்க. காகாஸுரன் போல்வார் திறத்திலுமிது காணத்தகும்.

21. கடல் அபரிச்சேத்யமாயினும் குறு முனிவன் கையிலே ஆசமநத்திற்குப் போதும்படி அடங்கி நின்றது. "வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்னும் படி வேத வேதாந்தங்களுக்கும் அபரிச் சேத்யமான பகவத் விஷயம் ஆழ்வார்களுக்குப் பரிச்சேத்யமாயிற்று. 'நண்ணுவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலி வெய்த, எண்ணுதனகளெண்ணும் நன்முனிவர் இன்பந்தலைச் சிறப்பப், பண்ணூர் பாடலின் கவிகள் யானுய்த தன்னைத் தான்பாடி." (10—7—5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் இரண்டாமடிக்கு நம்பிள்ளை யீடு ஸேவிக்க நன்முனிவர்கள் எண்ணுதனகளெண்ணும்படியாக ஆழ்வார் திருவாய்மொழி பாடினூராம். எண்ணுதனகளெண்ணுதலாவது என்ன? என்னில் "எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை விரிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்க ஒரு புஸ்தகமும் அவதரிக்கவில்லையே, ஆனந்தகுண மொன்றைப் பேசப் புகுந்த உபநிஷத்தும் 'யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும்படி மீண்டதே; அப்படியல்லாமல் பகவத் விபூதிகளை விரிவாகப் பேச ஒரு க்ரந்தம் அவதரிக்கவேணும்" என்று முனிவர்கள் (திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே) எண்ணினூர்களாம்; அப்படிப் பட்டவர்களே திருவாய்மொழி அவதரித்தபின்பு என்ன எண்ணினூர்களென்றூல் ஐயோ! எம்பெருமானுக்கு இன்னஞ் சில குணங்களும் இன்னஞ் சில அவதாரங்களும் இன்னஞ் சில சேஷ்டிதங்களும் இல்லாமற் போயினவே! என வருந்தினூர்களாம். இதன் கருத்தென்ன? எம்பெருமானுக்குள்ள ஸ்வரூப குணவிபூதி அவதார சேஷ்டிதங்களடங்கலும் ஆழ்வாரருளிச் செயலில் அடங்கி விட்டனவென்பதாம்.

22. கடலானது புல் துரும்பு முதலானவற்றை அலைமேலலைமோதி வெளியிலே

தள்ளிவிடும்; மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்தஜ்ஞான மில்லாதாரைத் தள்ளிவிடும்; ஸம்பந்தஜ்ஞானமுடையாரை அங்கிகரித்திருக்கும். எம்பெருமான்படியுமிதுவேயாம்; "அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு, ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே:" (1–2–5) என்ற திருவாய்மொழிப்பாசுரத்தின் நம்பிள்ளையீட்டில் விளக்கமாகவுள்ள விஷயமிது.


23. கடல் கடக்க அரிதாயினும் நாவாயினால் கடக்கலாகும்; "**பாதாம்போஜே வரத! பவதோ பக்தி நாவம் ப்ரயச்ச**" (முகுந்தமாலை) என்கிறபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்றால் எம்பெருமானாகிற கடலையும் எளிதாகக் கடந்துவிடலாம். * பத்துடையடியவர்க்கு எளியவன். * என்றார் நம்மாழ்வார்.

24. கடலருகேயிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர்நிலை தேட்டமாகும். சாஸ்த்ரங்களால் எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் அர்ச்சையிலிழிந்தாலன்றி ஆர்த்திசாந்தி விளையாதன்றோ.

25. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது போதாவது கடற்கரை சாராதிரார்கள்; அதுபோலவே பல காரியங்களையும் சுருக்கிக் கொண்டு தினப்படி ஒரு நாழிகைப் பொழுதாவது பகவத் கதையில் அந்வயியாதிரார்கள்.

ஆக இந்த இருபத்தைந்து அர்த்த விசேஷங்கள் தவிர, "கடலில் அலை ஓயாது, எம்பெருமானுக்கும் * அலம் புரிந்த நெடுந் தடக்கை ஓயாது." "கடல் கோஷித்துக்கொண்டேயிருக்கும், எம்பெருமானும் * ஏதத் வ்ரதம் மம * மோக்ஷயிஷ்யாமி மா சுச: * நமே மோகம் வசோ பவேத் * இத்யாதிகளைச் சொல்லி கோஷித்துக் கொண்டேயிருப்பான்." "கடல் ஒருநாளும் வற்றாது, எம்பெருமானுக்கும் ஒருநாளும் நாஸ்தித்வமுண்டாகாது" "கடல் ஏறுவதும் வடிவதுமாயிருக்கும், எம்பெருமானும் ஸேவை ஸாதிப்பதும் மறைவதுமாயிருப்பன்" என்றிப்படிப்பட்டதுணுக்கையர்த்தங்களும் பல காணலாகும். ... ... ...

—தொடரும்



இராய கோபுரத் தோற்றம் ஸ்ரீரங்கம்

# பரசிவமும் அருவுருவத் திருமேனிகளும்

(சிவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்
சிவராஜயோகமடம், மேலையூர், திருவெண்காடு.)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அந்த உருவப் பொருள் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போலத் திடீரென்று தோன்றி விடவில்லை. படிப்படியாகத் தோன்றி (Stage by Stage) வளர்ந்து முழுத்தன்மையான உருவமடைகிறது. அருவத்திலிருந்து உருவம் தோன்றி விரிந்த படிமுறைகள்தான் சாதாக்யம் என்று சொல்லப்படுகிறது. சதாசிவ பாவத்தையுடையது என்பது சாதாக்யம் என்று சொற்பொருளாகும். இனி உருவம் தோன்றிய படிமுறைகளைக் காண்போம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் ஒழிவற நிரம்பியுள்ள பரமசிவம் தனது அகண்டாகாரப் பெருவெளியிலிருந்து ஒரு மின்னல் போன்ற பிரகாசத்தைத் தோற்றுவித்தது. இந்த முதல் நிலைக்குச் சிவ சாதாக்யம் என்று பெயர். மின்னல் போன்று தோன்றிய தோற்றம் இரண்டாவது நிலையில் ஒரு தூண்காரமான தெளிந்த உருவம் பெற்று லிங்கம் என்ற பெயரோடு அதனுள்ளே வடிவ அமைப்பைக் கற்பித்துக் கொண்டு அமூர்த்தி சாதாக்யம் எனப் பெயர் பெற்று நின்றது. மூன்றாவது நிலையாக தூணாகாரத்தின் உச்சியில் ஒரு திருமுகமும் இச்சை ஞானம் கிரியை என்ற மூன்று திருக்கண்களோடும் காட்சியளித்து மூர்த்தி சாதாக்யம் எனப் பெயர் பெற்றது. படிக ஒளியையுடையதாய் நாலு திருமுகமும் பன்னிரண்டு திருக்கண்களும் உடைய திருமேனி எட்டுத் திருக்கரங்களோடும் தோன்றிக் கர்த்திரு சாதாக்யம் எனப் பெயர் பெற்றது. ஐந்தாவதாகக் கன்ம சாதாக்யம் என்ற சதாசிவ மூர்த்தியின் வடிவம் தோன்றியது. ஐந்து திருமுகங்களும், பதினைந்து திருக்கண்களும், பத்துத் திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும், ஒரு தேகமும் உடையதாய்ப் படிக ஒளியும் சடாமுடியும் அமைந்தது சதாசிவ மூர்த்தம்: முதலில் மின்னல் போலத் தோன்றும். பின்னர் அதுவே தூணாகாரமாகத் தடித்துப் பின்னர் ஒரு முகமாகி நான்கு முகங்களாகி ஐந்து முகங்களாகி இவ்வாறு அருவத்திலிருந்து உருவத் திருமேனி இறைவனால் எடுத்துக் கொள்ளப்பெற்றது. இவையனைத்தும் மிக மிக நுணுக்கமான அருவ நிலையிலேயே நிகழ்வன.

**சாதாக்யம்.**

சிவத்திலிருந்து ஐந்து சத்திகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிய விவரம் மேலே சொல்லப்பெற்றது. பஞ்சசத்திகளும் பஞ்சசாதாக்யங்களைத் தோற்றுவித்துச் சதாசிவன்—ஈசன்—பிரமன்—ஈசுரன்—ஈசானன் என்ற ஐந்து மூர்த்திகளையும் தோற்றுவித்தார்கள். பராசத்தி முதலிய சத்திகளிலிருந்து சிவ பாவம் மேற்பட்டு நின்ற நிலையில் சத்தி அடங்கி நின்றது. இந்த நிலையே சாதாக்யம் எனப் பெறுகின்றது. விறகில் தோன்றிய அக்னி விறகை மறைத்துக் கொண்டு தான்மேற்பட்டு நிற்பது போலச் சத்தியில் தோன்றிய சாதாக்யம் சத்தியை உள்ளடக்கித் தான் (சிவத் தன்மை) மேற்பட்டு நிற்பது என இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு பராசத்தியிலிருந்து சிவசாதாக்கியமும், ஆதி சக்தியிலிருந்து அமூர்த்தி சாதாக்யமும் இச்சா சக்தியிலிருந்து மூர்த்தி சாதாக்யமும் ஞான சக்தியிலிருந்து கர்த்திரு சாதாக்யமும், கிரியா சத்தியிலிருந்து கன்ம சாதாக்யமும் தோன்றின. சதாசிவன் முதலிய மூர்த்திகள் தேகம் போலவும் சாதாக்யங்கள் தேகி போலவும் இணைந்து ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் முதலிய மூர்த்தங்கள் உண்டா

யின. ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் இவை ஐந்தும் ஒன்றிய போது சதாசிவமூர்த்தி எனப்பெற்றது. இந்த சதாசிவ மூர்த்தியே பிரபஞ்சத்தை இயக்கி ஆன்மவர்க்கங்களை ஈடேற்றப்போகத்தையும் ஞானத்தையும் கொடுப்பவர். பரமசிவத்திலிருந்து தோன்றி விரிந்த இந்த மூர்த்தி வரையில் சொல்லப்பட்ட சத்திகள் சாதாக்யங்கள்—மூர்த்திகள் எல்லாம் தூய சிவவடிவங்களாகும். உடம்பு—உயிர்—உடம்பும் உயிரும் ஒன்றிய நிலே என இவையும் மூன்றுவகையாயின. மூர்த்திகள் உருவமாய்த் தேகங்களாகும். சாதாக்கியங்கள் அருவமாய்த் தேகியாகும் நிட்களம் என நூல்கள் கூறுவதாயிற்று. இதுவரை சதாசிவ மூர்த்தியின் தோற்றத்தைப் பற்றிக் கூறப்பட்டது. அதாவது பரமசிவத்திலிருந்து பஞ்ச சக்திகள். பஞ்சசத்தியிலிருந்து சாதாக்யங்கள்—மூர்த்திகள்—சாதாக்யங்களும் மூர்த்திகளும் ஒன்றி ஈசானம்—தற்புருடம்—அகோரம்—வாமதேவம்—சத்தியோசாதம் என்ற ஐவகைப் பிரமங்களின் திரட்சியே சதாசிவம் என்பது. இந்த சதாசிவர் மகாருத்திர தாண்டவேசுரர் எனவும் கூறப்பெறுவர்.

### மகேசுரமும் இருபத்தைந்து உருவத் திருமேனிகளும்

மேலே சொல்லிய சதாசிவம் ஐந்தொழிலே நடத்த வேண்டுமென்று சிந்தித்த போது மகேசுரம் என்ற உருவத் திருமேனி தோன்றியது, இவரே இருபத்தைந்து திருவுருவங்களை எடுக்கிறார். சிவத்தின் செயலாகக் கூறப்படும் அரும்பெருஞ் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வடிவம் கூறப்படுகிறது. காமனை எரித்த திருவுருவம் காமதகன மூர்த்தி எனவும், சண்டீசருக்கு அனுக்ரகித்தவரைச் சண்டீசானுக்ரக மூர்த்தி எனவும், யானையை உரித்தவரைக் கஜசங்கார மூர்த்தி எனவும் இவ்வாறு இருபத்தைந்து மூர்த்திகள் மகேசுரரிடத்தில் தோன்றின. இவையனைத்தையும் செய்தவர் மகேசுரர். ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்போது அந்தந்தக் காரியத்திற்கேற்ப ஒவ்வொரு வடிவம் கொண்டார். பிரம்மா விஷ்ணு உருத்திரராகவும் வடிவெடுத்தவர், இந்த மகேசுரரே. ஆன்மவர்க்கங்களில் தகுதி வாய்ந்தவர்களை அண்டங்கள் தோறும் முத்தொழில் செய்பவர்களாக நியமித்துச் சிவசக்தி நடத்தும். அந்த பிரம்ம விஷ்ணுக்களுக்கு வடிவம் கிடைக்கவும் அந்த பிரம்ம விஷ்ணுக்களை உள் நின்று இயக்கவும் மகேசுரர் பிரம்ம விஷ்ணு வடிவங்களை எடுக்கிறார். இதுவரை கூறியதிலிருந்து பரமசிவம் எவ்வாறு உருவத் திருமேனி கொண்டது என்பதை ஒருவாறு உணரலாம். பரமசிவத்திலிருந்து ஐந்து சக்திகள் தோன்றின. அந்த சத்திகள் ஐந்து சாதாக்யங்களாகவும் ஐந்து மூர்த்திகளாகவும் பிரிந்தன. சாதாக்யங்களும் மூர்த்திகளும் ஒன்றி ஈசானம்—தற்புருடம்—அகோரம்—வாமதேவம்—சத்தியோசாதம் என்ற ஐவகை பிரமங்களாயின. அவை ஐந்தும் திரண்ட திரட்சியில் சதாசிவமூர்த்தி தோன்றினர். மகேசுரர் இருபத்தைந்து திருவுருவங்களை எடுத்தார். இந்த சிவ பேதங்கள் முப்பத்தொன்றும் சிவபெருமானது மூவகை நிலேகளாகும். *

---

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி, அவை அவைதோறு
அணங்கும் பலபல ஆக்கி, நின் மூர்த்தி பரப்பிவைத்தாய்,
இணங்குநின் னேரை இல்லாய், நின்கண் வேட்கை எழுவிப்பனே!

—நம்மாழ்வார், இயற்பா

# பாரதப் பண்பேோவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணுமலை.

## வேத வியாசர் (6)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பாண்டவர் கானகம் புகுந்து கடவ நாட்கழித்து விராடபுரத்தில் மறைந் துறைகாலமும் மாறி வெளிப்பட்டார் கள். அவர்கள் உலூக முனிவரைத் தூதாக அனுப்பி முறைப்படி தங்கள் உரிமை யைத் தரவேண்டுமென துரியோதனனைக் கேட்கச் செய்தார்கள். அவன் சிறிதும் இடமில்லையென மறுத்து விட்டான். பிறகு பாண்டவர்கள் போரிட்டு உரிமை பெறப் படைத்துணை தேடலாயினர். மன்னனும் தனக்குள்ள படைகள் போதாதெனப் பல அரசர்களின் படை களைத்தேடிச் சேர்த்தனன். ஆட்சியி லுள்ள துரியோதனன் பதினேரு அக் ரோணி படைகளை யுடையவனுயினன். தீயவர்க்கு உதவப் பலர் இருந்தால், நல்லவர்க்குச் சிலரேனும் இருப்பார் கள் அன்றே! தமக்கென ஒன்று மில்லாத பாண்டவர்களுக்கும் ஏழுஆக் ரோணி படைஞர்கள் திரண்டுவிட்டனர். தமிழகத்திலிருந்து சேரமன்னவன் பாண் டவர் படைகளுக்குப் படியனுப்பிப் பதி னெட்டு வைகலும் பெருவிருந்து அமை க்க ஒருப்பட்டனன். சோழ பாண்டிய ரிருவரும் தமது படைஞரோடும் தாங்க ளும் படையேந்திப் பாண்டவர்களுக்குப் பெருந்துணைசெய்யச் சென்றுசேர்ந்தார் கள். ஏது இனியெவ்வாற்ருலும் போர் நிற்கவே வழியில்லையென யாவரும் பேசி னர்கள். துரியோதனனுக்குப் பாரத பூமிக்குவெளியிலிருந்தும் படைவர்கள் வந்ததால் பாரதநாட்டு அரசர்கள் அத் தனைபேரும் இந்தப்பெரும்போரில் கலந்து இருபிரிவிலும் இடங்கொண்டிருந்ததால் இது அக்காலத்தில் உலகயுத்தமாகவே மதிக்கப் பெற்றது. அதனுலே இதனைப் பாரதநாட்டுப் போரெனக் கூருமல், மாபாரதப் போரெனக் கூறிவருவரா யினர்.

இது இருவேறு நாட்டினருக்கோ இரு வேறு இனத்தினர்க்கோ மொழியினர்க் கோ ஏற்பட்ட எதிர்ப்பா? ஒருமரபில் ஒருரில் ஒருகுடிக்குள் தோன்றிய யுத்த மல்லவா? ஒரு குடும்பச் சண்டை உலகச் சண்டையாக வளர்ந்தோங்க நேரிட்ட தென்ருல் வியக்கத்தக்கதல்லவா? அண்ணனுக்குந் தம்பிக்கும் சண்டை வந்ததென்ருல் தந்தையுந்தாயும் விலக்கி விடுவார்கள். ஒருபக்கம் பக்கமுள்ள வீட்டார்கள் பகைக்கின்ருர்கள் என்ருல் எதிர்வீட்டுக்காரர்கள் புத்திபுகட்டி அடக்கிவிடுவார்கள். ஒருதெருமுழுதுமே கலகத்திற்பட்டது என்ருலும் அடுத்த தெருவினர்கூடி அடக்கிவிடுவார்கள். இது உலகஇயல்பாக இருக்க ஒரு குடும்பத்திற் குள் மூண்ட ஒருபகையுணர்ச்சியை உலகம் முழுதுஞ் சேர்ந்தும் அடக்கவழி காணுமல் அனைத்துலகமும் ஒருவழிப்படா மல் பிரிந்து இருவழிப்பட்டு இருவர்பங் கிலுமிருந்து போருக்கங்காட்ட நேர்ந்த தென்ருல் என்ன நினைப்பது? பாரதப் போர் எளிதா? அதுமாபாரதமாயிற்று. இந்த மாபாரதப்போரை மறுத்துநிறுத்த வழியில்லையேயென உலகப்பெருமக்கள் பெருமூச்சுவிட்டனர், எண்ணியெண்ணி யிதயங் கலங்கினர். **பாரதப்போர் அறத் திற்கும் மறத்திற்கும் உண்டான ஒரு ஆற்றரும்போர்.** எதிரெதிர் மாருன பண்புகள் இரண்டு எதிர்த்துநின்ருல் அதனையாரே விலக்கமுடியும்? ஒருரென் ருலென்ன? ஒருமரபென்ருலென்ன? ஒருகுடியென்ருல்தானென்ன?

இந்த நெருக்கடியில் போரை நிறுத்தி விடநினைவுற்ருன் ஒருபெருமகன். யார்? திருதராட்டிரன் தான். திருதராட்டிரன் தனக்குமிகவிருப்பினராகிய சஞ்சயன் என்னும் மாதவரையழைத்து நீங்கள் சென்று தருமனைக்கண்டு "போர் யாருக்

கும் நலஞ்செய்யாது; அதனை அறிவற்ற சுயோதனனுதிய இளையவர்கள் விரும்புவ தியல்பு ; மெய்யறிவுபடைத்த மேதக் கோர் சார்புள்ள நீயுமாவிரும்புகிறது; வேண்டாம், கானகத்திருந்து, அருந்தவம் பழகிய நீ உனதுதம்பியருடன் அப்பெரு நெறியையேபிடித்தல் நன்ருகும்; என உங்கள் பெரியதந்தை இசைக்கின்ருர்'' எனக்கூறிவரவேண்டுமென ஏவினுன். பழமையின்கிழமையால் இப்படிற்றுரை யைத் தருமனிடஞ்சென்று சாற்றினுர் சஞ்சயமுனிவர். நீறுபூத்த நெருப்பெனத் துரியனின் கொடுஞ்செயல்களனைத்தையும் எண்ணி உள்ளங்கனன்றிருந்த தரும நந்தனன் அவருரையை அறவே மறுத்து விட்டனர். மாதவர் வெள்கினுர். அங்குப் போர்துவக்கப் பெரும்பணியில் முன்னின்ற மணிவண்ணன் மாமுனிவரை அருகழைத்து இருத்தி நடக்கப்போகும் நிகழ்ச்சிகளையெல்லாம் நன்கெடுத்து நவின்றனன். மாதவர் ஆவதுதெரிந்து விடைபெற்று அகன்றனர். சஞ்சய முனிவர் நேராக அரசர்கோன் திருதராட் டிரனை யணுகினுர். அவர் ஐவரும் போருக் கமைத்துள்ள படையமைப்புகளையும் அங்குள்ள போரூக்கத்தையும் பன்னினுர். அவர் போர்நடத்தலும் எவ்வகையினுந் தப்பாது, உனது அரும்பெரும் மக்களின் தலைகளும் இப்போரில் தப்பாதெனத் திடம்படக் கூறிவிட்டார். "அச்சமே கீழ்களது ஆசாரம்'' என்றபடி திருத ராட்டிரன் உள்ளத்தில் பெரும் பயம் புகுந்தது. அவன் தனது மனைவியுடன் மக்களுக்கு நேரவிருக்கும் பேரழிவை யெண்ணி யேங்கினுன். எவ்வகையாலா வது போரை நிறுத்திப் பாண்டவர்களை மனமமையச் செய்து தனது மக்களைச் சிக்குச்செலவின்றிக் காத்துவிடலாமா வெனக்கருதினுன். அவன் கருத்திற்குப் பொருத்த முள்ளவர்களாக யாரையுந் தோன்றவில்லை. அவன் வேதவியாசரை நினைத்தான். அப்பெருந்தகையைவர வேண்டுமெனத் துதித்து வேண்டினுன். மனைவியுங் கணவனும், மனமுருகச் செய்த வேண்டுதலுக் கிரங்கி வேதவி யாசர் வந்து வெளிப்பட்டார். அரண் மனை அணுக்கத் தொண்டர்கள் கண்டு களித்து வரவேற்றுர்கள். கட்புலனற்ற அரசனும் அரசியும் தங்கள் வேண்டுதல் பயனுடைத்தானது அறிந்து எழுந்து நின்று போற்றினர். வேதவியாசர் அவர் கள்அளிப்பித்த இருக்கையிலிருந்து அவர் களை வாழ்த்துரைத்து இருக்கையிலிருக்க இசைவித்தார்.

மாதவர் தம்மையழைத்தது ஏன் என வினவினுர். திருதராட்டிரனுக்குங் காந் தாரிக்கும் உள்ளம் உருகிற்று. உள்ளத் திலுள்ள கள்ளமெல்லாம் கழிந்தொழிந் தது. அவர்கள் இருவரும் ஆதியில் மிகவும் நல்லவர்களெனப் பெயரெடுத்தவர் கள்தான். அந்தத்திலும் அவர்கள் தீய வர்களல்லர். மக்களைப் பறி கொடுத்து மனச்சோர்வடைந்த நேரத்திலுங் காந் தாரி தங்கள் குடியின் மருகியாக நின்ற பாஞ்சாலியின் கூந்தலைத் தனது கரதலங் களால் வாரிமுடித்தனள் எனப் பிற்பகுதி யில் காண்கின்ருேம். அதன் பிறகு நடக்கும் திருமுடிபுனைவில் தருமனின் இருமருங்கினுமிருந்து திருதராட்டிரனுங் காந்தாரியும் அப்பெரு விழாவைச் சிறப் பிக்கிருர்கள் என்றுங் காண்கின்ருேம். ஆனுல் இடை நடுவில் இவர்கள் இருவரும் ஆற்ருெணுத கொடுமைகளுக்கு உடன் பாடாக இருந்தனர் என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும். இப்படி ஒரு பிறப்பில் இரு திறத்தினராக இருந்தே காலங்கழித்தனர் இந்த அரசனும் அரசி யும். ஏதுவென்ன? உத்பாத பிண்டங் களாக மன்னிய மக்களின் கருக்கோள் காலத்திலிருந்தே இவரிருவரும் மனமாறு கொண்டன ரெனக் கொள்வதையன்றி வேறு காரணங்காண முடியவில்லை. தீயவரோடு நட்புக் கொண்ட நல்லவர் படிப்படியாகத் தீயவராதலையும், அப்படி யாவது இயல்புதானென நூல்களுரைத். தவற்றையும் காண்கின்ருேம். உலகத்தில் ஒருவரை யொருவர் நட்பினராகக் கொள் ளலாம். தகாதென அறிஞர்களுரைத் தவழி அவர்களை விட்டு நீங்கியும் விடலாம். ஆனுல் பெற்றமக்கள் தீயவ வராக நேர்ந்து விட்டால் அவர்களைத் திருத்த வழிதேடி யலைதைத்தவிர நீக்கித் தொலைப்பது என்பதுஎத்துணையோர்க்கும்

அரிய செயலல்லவா? அதிலும் இருவரும் கண்ணற்றவர்கள் என்ன செய்வார்கள்? ஒரே பிறப்பிலேயே உலகத்தில் ஒருவருக்கு மில்லாத பெருஞ் சிறப்பும், அப்படியே ஒருவருஞ் செய்யாத தீமைக்குட்பட்டன ரென்ற அவ்வளவு இழிபும் இரண்டும் எய்த இலக்கானார்கள் திருதராட்டிரனும் காந்தாரியும்.

வியாசர் வருகையால் புனிதர்களாகிய பெருமக்கள் தங்கள் குறைபாடுகளைச் சொல்லிக் கதறினார்கள். வம்புச்சண்டை பெருஞ்சண்டையாக வடிவெடுத்து விட்டது. இது தடுக்குந்தரத்ததாகவின்றிப் பெருகி நிற்கின்றது. இதனைத் தருமனுடைய அறமும் துரியனது மறமுங் கூடித் தேடிய பெரும் போரெனப் பெரியவர்கள் மதிக்கின்றார்கள். எங்கள் மகனாலும் துரியோதனன் எங்கள் சொல்லைக் கேட்கமாட்டான். அவனுக்குச் சொல்லுந் திறமும் எங்கள்பாலில்லை. இக்குறைகளை நீக்கவல்ல குருபரர் தங்களைத்தவிர வேறொருவருமில்லை. உங்கள் உயர்மொழியால் அவனது மனத்தை மாற்ற வேண்டும். எங்கள் குடியையும் எங்களுக்காக உயிர்விட இரங்கித்துணை வந்துள்ள மாபெருஞ் சேனையின் உயிர்களையும் காத்தளிக்க வேண்டும். என அவர்கள் வேதவியாசரை வேண்டினர். வியாசர் அவர்களின் பொருட்டு அரவக்கொடி யரசனை யழைத்து ஆவன பலப்பல சொல்லினார். அரசன் ஒரு சிறிதும் இவருக்கு இடந்தர இசையவேயில்லை. அம் மாமுனிவர் முன்னர் பெற்றவர்களும் பல இன்னுரைகளைக் கூறினர். எவருரைகளும் அவன் செவியிற் புகவில்லை. உரைத்துரைத்து ஓய்ந்தார்கள். கொடிய விடப்பாம்பின் கடியுண்ட மக்களுக்குக் கசப்பெல்லாம் இனிக்கும். இனிப்பெல்லாம் கசக்கும். அதுபோல வலுத்த கலகத்தின் வாய்ப்பட்ட செவிகளுக்கு நன்மொழிகளெல்லாம் தீயனவாகவும், தீயமொழிகளெல்லாம் நன்மொழிகளாகவுந்தான் தோன்றும். அதனை மாற்றுவது ஒருக்காலும் ஆகாது. அது அன்றியும், அளவிடற்கரிய தீச்செயல்களைச்செய்து பலகோடி மக்களின் உள்ளங்களை உளையச்செய்து மகிழ்ந்திருந்த பாபிகள், தமது கொடுஞ்செயல்களின் பயனை நுகராது தப்பமுடியாது. அது தெய்வக் கட்டளை!! ஏழைகளழுத கண்ணீர் கூரிய வாளோடொக்கும். "அல்லல் பட்டாற்று தழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்பன போன்ற அறிவுரைகள் எப்பொழுதும் பொய்ப்பன வல்ல அல்லவா? இது, அன்றைக்குத்தானா? இன்றைய நிலையென்ன? கண்ணெதிரில் காண்கின்றோமே. நாற்பது கோடிப் பெருமக்கள் இடையில் நான்கு கோடி மறுசமய மக்கள் இந்திரபோக மனுபவிக்க இடமிருக்கின்றது. ஒரு சிறிய இடருஞ் செய்வதில்லை. ஒரு பெரிய பொதுப்பணியென்றால் எங்கள் தெய்வத் திருக்கோயில்களையெடுத்தும் அப்புறம் அமைத்துக் கொள்ள உடன் படுகின்றோம். வழியா போட்டுக்கொள்; ஏரியா கட்டிக்கொள் எனப் பொதுமைக்கு இடங்கொடுத்து விடுகிறோம். நாற்பது கோடி மக்கள். ஒரு மூலையில் முடுக்கில் பேருரற்றிருக்கும் புறமதத்தருடைய ஒரு சிறு சமாதியைக் கூட இன்னும் தொடுவதற்கும் சிந்திப்பதில்லை. புறமதத்தருக்கு மிக மரியாதை கொடுத்து எங்கள் பொதுவழிகள் வளைகின்றன. பெருங் கூடங்கள் ஊர்க்கோடிகளைத் தேடியோடுகின்றன. அளவில் குறைந்த அயலவருக்கு நாங்கள் செய்யும் விருந்துபசாரம் இத்தகையது என்றெடுத் தெடுத்துக் கூறினாலும் இன்றுள்ள துரியோதனன் கேட்கின்றனா? அவனுக்கமைந்த சகுனியான அழகன்தான் வழிவிடுகின்றானா? எத்தனை நாடுகள் அறம் உரைத்தால்தான் என்ன? அவன் செவிகளில் புகுகின்றனவா? புகுமா? எப்படி புகும்? அன்று கோடிக்கணக்கான ஆண்களும் பெண்களும் குஞ்சுகுழந்தைகளோடு எடுக்க இசைந்த உணவை உடையை வழித்துணைக்குக் கைப்படுத்திக்கொண்டு தங்கள் பரம்பரை வாழ்க்கைக் கிடமான ஊர்களைவிட்டு வீடுகளைச் சொத்துச் சுதந்திரங்களைப் பறிகொடுத்து இடைமறித்த கயவர்களையெல்லாம் தொழுதும் அழுதும் அரற்றி வந்தார்களே அகதிகளாக அந்தப்பெருங்

கொடுமை வீண்போய்விடுமா? கணக் கற்ற ஏழைகளின் கண்ணீர்த் துளிகள் நீர்த்துளிகள்தானு? அவைவாளின் பற் களல்லவா? அந்த அறச் சக்கரம் தனது வேலையைத் தொடங்காதா? அதுதான் மூறையுறத் தேவர்கள் மூவர்காக்கினும் வழிவழி யீர்வதோர் வாளாகவந்திருக் கின்றதே. எங்கே வருகிறது இந்தத் துரியோதனனுக்கு நன்மதி? யார் பேச் சைக் கேட்கின்ருன் இந்தக் கொடுமகன்? இப்படித்தான் இருந்தான் அக்காலத்தில் அரவக்கொடிபடைத்த அக்கொடியவன்.

இது வினைமிகுதியால் வந்த விளைவு. இது யாராலும் விலக்க வொண்ணுதது என்பதனை முன்னரே உணர்ந்திருந்த மூனிவர், திருதராட்டிரனுக்கும் காந்தா ரிக்கும் உரைத்து இன்னுமென்ன இசைப் பதெனக் கூறி மறைத்தனர். இங்குக் கொடுமையில் கலந்திருந்த பேரரசனுக்கே போரைத் தவிர்க்க வேண்டு மென்ற புத்திவந்து முயற்சிக்கின்றனனென்ருல், அன்பே உருவமான தருமநந்தனன், மனமா போர்ச் செயலை வளர்க்க இடந் தரும்? அவனும் வினைவிளைவை நோக்கிப் பொருமியழுதனன். அவன் கமலக்கண்ண னைத் தூதனுப்பிப் பிறந்த பெருநாட்டில் இருந்து மகிழ்ந்து காலங்கழிக்க எங் களுக்கு ஐந்து மனைகளாவது தரச் செய்யுங்கள். சண்டையைத் தவிர்த்து வாழலாமென வேண்டினன். அப்பெருந் தூதும் வெறுந்தூதாக வினைசெய்தான் சகுனி. வேறுவிதியில்லை. போர்நிலம் புகுந்துவிட்டன படைகள்.

கண்ணற்ற மன்னவன் மனம் கலங் கினன். மீண்டும் வேண்டினன் வேதவி யாசரை. அவருந்தோன்றினர்.

"மருங்குற நின்ற வேத மாதவ னடியிற் சூழ்ந்து
தருங்கடனியற்றி முத்தின் தவிசினி லிருத்திச் சொல்வான்
அருந்தவ ரரசே மைந்தர் அமர்முயன் றகல லாலிங்
கிருந்திலன் செலவுந் தேரேன் விழிப்புலன் இல்லாத வாற்ருல்
"என்செய லிருந்தவாறீ தென்றலும் வரதன் ஈசன்
தன்செயல் தவிராது உள்ளபடிதவிர்ந் திடுத லுண்டோ?
வன்செயும் மனத்தான் நேரும் போரினை வாய்ப்ப நோக்கப்
பொன்செய்தோ ளரசே கண்கள் புலன் செயும் போதுக என்ருன்."

இவ்விருபாடல்களும் என்ன இசைக் கின்றன? எழுந்தருளிய மாமுனிவனை முத்தாற் செய்த தவிசில் இருக்கச் செய்துவழிபாடு செய்தனனும் மன்னவன். ஆணிமுத்துக்கள் நிறைத்து ஒரு தவிசை இயற்றி யிருப்பாகக் கொண்டிருக்கும் பேரரசு திருதராட்டிரனுடையது என்ற செல்வச் சிறப்பைக் காண்கின்றேம். பச்சை முதலிய பலதிற மணிகளிருக்க முத்தின் தவிசில் முனிவனை யிருக்கச் செய்தல் என்னமுறை? "வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை" என்றபடி "கரவா டும்வன்னெஞ்சரல்லாதுகருணைத்தெய்வம் விரவிநிற்கும்" மென்னெஞ்சரிருக்கத் தக்கது வெண்ணிற விருக்கை யென் பதனையும் அறிகின்றேம். இப்படி முறை தெரிந்து வழிபட்ட மன்னவன், மாதவரை நோக்கி யேங்கியழுதான். அருட்பெரும் அருந்தவ முதல்வரே என்ன சொல்லியுங் கேளாமல் மக்கள் போர்முயற்சி கொண்டு புறப்பட்டு விட்டார்கள். வீடு வெறிச் சோடிக் கிடக்கிறது. ஒரு மங்கல ஓசை யும் இல்லை. அங்குச் சென்று அமர் முகத்தைக் காண வென்றலோ எனக்குக் கண்களில்லை. எனது நிலைமை இவ்வளவு துன்பத்திற் கிடமாக விருக்கின்றது. என்ன செய்வேன் என இரங்கினன். பேரறிவுச் செல்வம் படைத்தவரும், அவ் வறிவுச் செல்வத்தை உலகவர்க்கு வாரி வழங்கி வந்தருள்பவரு மாகிய ஞானதான வள்ளல் வேதவியாசர், "அரசே யார் செயலும் ஈசன் செயலைக் கடக்க முடியாது. உங்கள் கீழ்ப்பட்ட சிற்ற ரசர்களின் செயல்களை நினைத்தபடி மாற்றும் ஆற்றல் உங்களுக்குண்டல்லவா? உங்களைப்போல உலகத்தில் உள்ள எந்தப் பேரரசுக்கும் தலைமையான பேரரசு ஒன்று என்றும் இருக்கின்றது.

அதுதான் இறைவனது அறமுறைப் பேரரசு. அதனூற்றலைக் கடக்க எக் காலத்திலும் யாரொருவராலும் முடியவே முடியாது. அது ஒரு சிறிதும் முறை கோணுது. அது அறக் கருணையாலும் மறக் கருணையாலும் உலகையாளுகின்றது. அவ்வரசின் செயற்படியெல்லாம் முடிவடையும். அதைச் சான்ருக நின்று காண்பதல்லாது மாற்ற முயலும் ஆற்றல் நமக்குக் கிடையாது. இனி சிறு சிறு நலங்களை என் போல்வார் செய்தளிக்க முடியும். நீ போரிடங் காணக் கண்களில்லையென்றனையே அந்தச் சிறு குறையையாம் தீர்க்க முடியும். இதோ உனது கண்கள் விளக்கமாகத் தெரியச் செய்து விட்டோம். போர்காண நீ புறப்படலாம்'' என்றனர் வேதவியாசர்.

''வற்கலை முனிவன் கூற மாதிரங் கடந்த
பேரோன்
சொற்குறிப் பதுமுன் கண்கள் பெற்றுளந்
துணுக்குற் றேங்கிக்
கற்படு மலையும் பாருந் தருக்களுங் கணக்கில்
நல்லோர்
சொற்படு முயிரு நோக்கித் தாதையைத்
தொழுது சொல்வான்''

''பிறந்தநா ளவதி தொட்டிப் பெற்றியால்
தொலைத்தேன் காலம்
இறந்தகல் நாளில் எய்திற்று என்பயன்
இயலும் வெம்போர்ப்
பறந்தலைக் காண வாற்றேன் பற்றுல
கியலும் வேண்டேன்
அறந்தவா முனியே முன் போ லாவதே
நேர்வ தென்ருன்''

கண்கள் தெரியுமென மாதவன் கூறுவதற்கு முன்னமே நன்ருகக் கண்கள் விளங்கின. தாய்வயிற்றிலிருந்தே காட்சியின்பங்கண்டறியாத மன்னவன் கவன்று கலங்கி உலகத்தை நோக்கினுன். அதற்குமுன் அவன் கேட்டிருந்த உலக நிலைப்பொருள்களையும் இயங்கி வாழும் உயிர்களையும் அவன் கண்ணுரக்கண்டான். காணுதனவற்றைக்காணும் பேரரசனுக்கு மகிழ்ச்சி பொங்கவில்லை. மருட்சிதான் தோன்றிற்று. அவன் உடனே தனது கண்களை யிறுக மூடிக்கொண்டான். இறக்கும் காலத்தில் இங்கிது கிடைத்து என்ன பயன்? இன்னும் மக்களின் அழகிய வடிவங்களை நோக்கி ஆசை மிகுத்து அவற்றிற்கு இடர்வரும் பொழுது துன்பத்தை மேன் மேலும் பெருக்கிக் கொள்ளவா? வேண்டவே வேண்டாம். முன்போலவே கண்கள் தெரியாமலிருக்க அருள் செய்ய வேண்டுகின்றேன் என்று, அமைந்து வேண்டினுன் அரசர் கோன். முனிவர் அப்படியே செய்தனர். பின்னர் அவர் அரசனை நோக்கி, ''நினது கண்கள் தெரிந்தாலும் களமுழுதும் கண்டுவிட முடியாது. ஓரிடத்திலிருந்து போர்க்கள முழுதுங் காணத் தகுந்த ஞான நோக்கத்தை உனது அன்புடை முனிவனுகிய சஞ்சயப் பெருந்தகைக்கு இதோவழங்குகின்றேன். அம்மாதவன் நாள் தொறும் போர்க்களம் சென்று புகுந்து அங்கு நடக்கும் செயல்களையெல்லாம் நன்குணர்ந்துவந்து விளக்கமுற நவிலுவன். செவிகளையே கண்களாகக் கொண்டு முற்றுமுணர்ந்து கொள்வாயாக'' வெனக் கூறி மேலுமிசைத்தருள்வராயினர்.

''தோற்றவர் வெல்வர் வென்ருேர்
தோற்பர் ஈதுணரு மாறன்று
ஏற்றபோது அமையந்தோறும் இரங்கல்
தேர்ந்து இருத்தி யென்றே
சாற்றி ஆதரங்கள் கூறித் தனையரைத்
தெளியல் ஆண்மைப்
பேற்றினை அடைவோர் நீதி பிழைத்
திடாதவர் என்று ஓர்தி''

''எனச்சில மொழியும் நல்கி யிகல்பல
முகத்தா லேற்ருர்
மனக்கருத் தனைத்துந் தேறு மாறுடன்
மெய்ப்பாலூறு
தினைத்துணை யளவு மேவிச் செருவரம்
சஞ்சயற்கு
முனித் தலையளித்து மீண்டுஞ் சூழல்போய்
முன்னி ஞனே''

அரசரேறே! முன்னர் தோற்றவர் பின்னர் வெல்லுவர். முன்னர் வென்றேமென்று மகிழ்ந்திருந்தவர் பின்னர் வெள்கித் தலைகுனியுமாறு தோற்பர். இதெல்லாம் அவரவர் நினைத்தபடி முடிந்துவிடுவனவல்ல. போர்ச்செயல்களைக் கேட்கும்போது பொதுமைகொண்ட மனப்பாங்குடன் இருப்பாயாக. ஒருபால் பற்றுக்கொண்டு அடிக்கடி இரங்கி வருந்தாதே. எது முன்னர் அறத்தின்வழி நின்றதோ அதுவெல்லுமென்பதனைத் திண்ணமாக நினைத்துக்கொண்டிரு. எனப் பல உறுதியுரைகளையுரைத்துச் சஞ்சய மாதவனுக்குப் போர்முனையில் படைக்கலங்கள் படாதவரமும் தந்து யார் என்ன நினைக்கின்றனர்களோ அந்த அந்த எண்ணங்களையும் நீயறிவாய், இவ்வாற்றலை நல்வழிக்கே நீ பயன்படுத்த வேண்டுமென நல்கி, வேதவியாசர் விடைகொண்டு தமது தவச்சூழலைச் சென்று சேர்ந்தார். இன்றும் நாம் பகைவெல்லப் படிக்கத்தக்க நூலாக, பிறப்பின் பயன் பெறப் படிக்கத்தக்க நூலாக, பாரத நாட்டின் ஞான மணிகளில் பேரொளி காலும் பெருமணியாகப், போற்றநிற்கும் பகவத்கீதையாம் பெருநாலுக்கு வித்திட்டுச் சென்றுவிட்டார் வேதவியாசனார். அப்பெருவித்தை விளைவிப்பவனானான் சஞ்சயமாதவன். அப்பெருவிதையைப் பெருக்கும் முதல்தோட்டமாக விளங்கிற்று திருதராட்டிரனென்னும் பேரரசன் பெருஞ்செவிகள். அப்பெரும் பூமியின் இருப்பிடமாகத் திகழ்ந்து நின்றது இன்று டில்லியென்றும், அன்று அத்தினபுரமென்றும் பெயர்பெற்றிலங்கும் பாரத நாட்டு மாபெருந் தலைநகரம். வாழிய பாரதம்! வாழிய "வாடாத தவவாய்மை முனிராச"ராகிய வேதவியாசப் பெருந்தகையார். வாழிய மாபாரதமளித்த பகவத்கீதையென்னும் வாலறிவின்பெரும் படைப்பே! அடுத்துக் காங்கேயனைக் காண்போம்.



சிற்பக் காட்சிச் சிறப்புகள், ஸ்ரீரங்கம்.